# flex அருள்

ஜனவரி 2013 | கடவுளை வணங்குவோம் கருணையை பெறுவோம் | விலை ரூ.50

www.flexguidemag.com

## பொங்கல் மலர்

ஆன்மீகம் மணக்கும் மாத இதழ்

இதழ் 26



Little ASIA
அனுசரணையில்:
இவ் இதழுடன்
12 பக்கங்களைக் கொண்ட
2013ம் ஆண்டுக்கான கலண்டர்
இலவசமாக
வழங்கப்படும்.


முகூர்த்தப் பட்டுப்புடவைகளுக்கு ராசியான ஒரே இடம்

JEYECHANDRANS
The Art of Fashion

No. 433, Galle Road, Wellawatte, Colombo 06.
Tel: 011 4528438/5, Fax: 011 2362822
New Branch : 194, Main Street, Colombo 11.
Tel: 011 2448870, Fax: 011 2448860
Web: www.jeyechandrans.com | Skype: jeyechandrans 888

நண்பர்கள், வாடிக்கையாளர்கள்
அனைவருக்கும்
புத்தாண்டு மற்றும் பொங்கல் திருநாள்
நல்வாழ்த்துக்கள்!



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




Dream **Big** | Think **Big** | Achieve **Big**

"**Little Asia:** *for 6-yards of bridal splendour*"

317, 317A, Galle Road, Wellawatte, Colombo 06.
T: +94 11 250 4470, 250 0098 | F: +94 11 2508934 | Dialog: #444*4*220#
E: info@littleasia.lk | www.littleasia.lk | skype : little.asia.emporium

73, Main Street, Colombo 11.
T: +94 11 2391592, 2391593 | F: +94 11 2391745
E: info@littleasiasilk.com | www.littleasiasilk.com | Skype: little.asia.silk

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# உள்ளடக்கம்....

## ஆன்மீகம் மணக்கும் மாத இதழ்


06-09 சைவம் ஓர் வாழ்க்கை நெறி



15-20 சாஸ்திரங்களும், சம்பிரதாயங்களும்



21-28 அற்புத ஆலயங்கள்



05 எமது நோக்கம்

10-11 தைபொங்கல்

12-13 தைப்பூசம்

14 இந்து தர்ம சாஸ்திரம்

32-33 கண்ணப்ப நாயனார்

34-35 வள்ளுவர் - வாசுகி

40 ஸ்ரீ பசுவின் மஹிமை

46-47 நடராஜ திருவடிவம்

48-49 ஸ்ரீ அங்காளபரமேஸ்வரி போற்றி வழிபாடு

55 சுலோக பாராயணம்

56-58 ஆயிரம் சீதைக்கு நிகரானவள்

59 நவக்கிரகங்கள்

60-61 குபேரன், லக்ஷ்மி குபேர விரதம்

62 சரணாகதி

63-66 பஞ்சாங்கம்

71-74 ராசி பலன்கள்

75-80 பக்திக் கதைகள்

51-54 வால்மீகி ராமாயணம் பிறந்த கதை



29-31 சகல செல்வங்களும் தரும் ஸ்ரீ மகாலக்ஷ்மி



37-39 சூரிய வழிபாடு





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



P. விஜய்
*நிர்வாக இயக்குனர்*
Flex Group

# 2013ஆம்



கே.யோகேந்திரன்
*ஆசிரியர்*

## ஆண்டை அடியெடுத்து வைக்கும்

**flex அருள்**

ஆன்மீகம் மணக்கும் மாத இதழ்

வாசகர்கள், விளம்பரங்களைத்
தந்துதவிய வர்த்தகப் பெருமக்கள்
அனைவருக்கும்

## இனிய புத்தாண்டு

மற்றும்

## தைப்பொங்கல் நல்வாழ்த்துக்கள்!

noolaham.org | aavanaham.org

# எமது நோக்கம்

"இந்து மதத்தின் பல அரிய தகவல்களை அறியத் தருவதே"

***அனைவருக்கும் புத்தாண்டு, தைப்பொங்கல் நல்வாழ்த்துக்கள்!***

வாழ்க்கைக்கு மிகவும் அவசியமானது என்ன? எடுக்கும் காரியங்களில் வெற்றியும் அதை அனுபவிக்க மன அமைதியும்தான். இந்த இரண்டிற்குமே மிக அவசியமானது நீங்கள் உங்கள் சக்தியைப் புரிந்து கொள்வதுதான். தன்னம்பிக்கையுடன் செயல்படுவதுதான். இதை அடைய நாம் என்ன செய்ய வேண்டும்? நம்முடைய ஆத்மாவின் சக்தியை உணர வேண்டும். ஆத்மாவே மகிழ்ச்சி. அதுவே அமைதி, அதுவே பயம் அதுவே ஞானம்.

"தன்னம்பிக்கை இருந்தால் ஞானம் தன்னால்வரும்" என்றும் "தன்னை நம்பாதவன் அழிவைத் தேடிக் கொள்வான்" என்றும் கீதையில் கிருஷ்ண பகவான் சொல்கிறார். இளம் வயதில் நாம் இதை உணரவேண்டும். கடமை என்றும் கட்டுப்பாடு என்றும் இரண்டு கரைகளைப் போட்டுக் கொண்டு அதற்கு நடுவில் அடங்கி ஓடும் ஆறாக வாழ்க்கையை நடத்திச் செல்லக் கற்றுக் கொள்ள வேண்டும்.

நாம் காரை வாங்கினால், அழகாகத் துடைத்து வீட்டுக்குள் வைப்பதில்லை. அதை வெளியே சாலையில் எடுத்துக் கொண்டுபோய் ஓட்டி பயன்படுத்துகிறோம். அதைப்போல் ஆண்டவன் நமக்குக் கொடுத்த உடம்பும், வாழ்க்கையும். நாமே இன்பங்களை அனுபவித்து சுகமாக இருப்பதற்கல்ல. அது பிறருக்கும் சமூகத்திற்கும் பயன்பட வேண்டும். எளியவர்களுக்குச் சேவை செய்ய உபயோகப்பட வேண்டும். அந்த உறுதியையும் நாம் மற்றவர்களுக்குத் தெரியாமல், படாடோபம் இல்லாமல் செய்ய வேண்டும். ஒருகதை:

கர்ணனைச் சோதிக்க கிருஷ்ணன் அந்தண வடிவத்தில் வந்தார் அப்போது கர்ணன் தங்கத்தால் ஆன கிண்ணத்தில் எண்ணெயை வைத்துக் கொண்டு தலையிலும், உடம்பிலும் தேய்த்துக் கொண்டிருந்தான். யாசகம் என்று வந்தவர் "உன்னுடைய தங்கக் கிண்ணத்தை எனக்குத் தானமாகக் கொடேன்" என்று கேட்டார். உடனே கர்ணன் தனது இடதுகையில் இருந்த தங்கக் கிண்ணத்தை அப்படியே கொடுத்து விட்டான். கேட்டவன் கிருஷ்ணன் என்பதைப் புரிந்து கொண்டு "நீயே கேட்கும் போது நான் இல்லை என்று சொல்வேனா? என்று சொன்னான்.

கிருஷ்ணன் தங்கக் கிண்ணத்தை வாங்கிக் கொண்டு நான் வந்திருப்பது தெரிந்தும் இடது கையால் தானம் கொடுப்பது தர்மமாகுமா? என்று சிரித்தபடியே கேட்க. "உண்மைதான் ஆனால் நீயோ பகவான் நானோ சாதாரண மனிதன் இடதுகையிலிருந்து கிண்ணம் வலது கைக்குள் வருவதற்குள் மனம் மாறிவிட்டால் என்ன செய்வது? அதனாலேயே உடனே கொடுத்துவிட்டேன். என்றான் கர்ணன்.

நாம் உதவி செய்வதும் அப்படித்தான் இருக்க வேண்டும். சேவை என்பது பிறர் பாராட்டுவதற்காக அல்ல. நமக்கு நாமே மனப்பூர்வமாக உணர்ந்து மகிழ்வதற்காக. அது யாருக்குமே தெரியக்கூடாது.

கே. லோகேந்திரன்

- ஆசிரியர்






Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சிவலிங்க வழிபாடு

லிங்கம் என்பது அடையாள உருவம். ஆனந்த நிலையில் நடராஜர், யோகநித்திரையில் அனந்த சயனம், மௌனத்தின் பெருமையை வெளியிடும் தட்சிணாமூர்த்தி இவையும் குறியீடுகளாய் அமைந்தவையே.

திராவிடர்கள் நர்மதையாற்றில் நீண்ட உருளை வடிவமும் வட்டமுடியும் கொண்ட உருவத்தை (கற்கள்) தென்னாட்டில் கொண்டுவந்து நிறுவினர்.

மனித உயிரின் உதயத்திற்குக் காரணமான பீஜத்தையும் யோனியையும் இணைக்கும் வடிவமாக இதனைப் பார்க்க வேண்டும்.

லிங்கத்தில் இருந்தே எல்லாமும் உண்டாயின. அதேபோல் அனைத்தும் லிங்கத்திலேயே ஒடுங்குகின்றன. படைப்பு, காப்பு, அழிப்பு என்கிற முத்தொழிலும் லிங்கத்தில் அடங்கும்.

காணாத அருவினுக்கும், உருவினுக்கும் காரணமாய் நீணாகமணிந்தார்க்கு நிகழ்குறியாம் சிவலிங்கம் என்கிறார் சேக்கிழார்.

கை, கால் போன்ற உறுப்புகளின்மையால் லிங்கம் அருவாகிறது. அதே சமயம் தூண்போல் காணப்படுவதால் (தாணு) உருவாகிறது. மற்ற மூர்த்திகள் உருவோடு இருக்கும், அவற்றின் உற்சவர்கள் உலோகத்தில் அமைக்கப் பட்டிருக்கும் லிங்கம் கல்லில்தான் இருக்கும் உலோக வார்ப்பு கிடையாது. லிங்கம் மூலவராக இருக்கிறது. உற்சவர் கிடையாது.

## திருமந்திரம்

உலகே சிவலிங்கம் என்கிறார் திருமூலர். பிரபஞ்சம் சிவனின் வியாபகம் என்கிறபோது, பிரபஞ்சத்தை சிவனது குறியீடான லிங்கமாகவும் கொள்ளலாந்தானே.

கோயில் கருவறை மீது விமானம் என்கிற அமைப்பு இருக்கிறது அல்லவா, அதனைப் பருலிங்கம் என்கிறார் அவர். லிங்கத்துக்கு முன் உள்ள பலிபீடம் பத்ரலிங்கம் எனப்படுகிறது. படிகம், பொன், மரகதம் இவற்றிலும் லிங்கத்தை உருவாக்கி வழிபடலாம். அந்தணர்கள் படிகலிங்கத்தையும், அரசர்கள் பொன்னாலான லிங்கத்தையும், வணிகர்கள் மரகதலிங்கத்தையும் பூசிக்கலாம் என்கிறது திருமந்திரம்.

மனிதனும் தெய்வமாகலாம். எப்படி? மனித உடலின் கீழ்ப்பகுதி, பிரம பீடம், உடல்பகுதி சக்தி பீடம், தலை பாணம் என்கிற வகையில் சிவலிங்கம். மனித உடலின் அசைவுகள் சதாசிவமாகிய தில்லைக் கூத்தனின் திருநடனம் என்கிறார் திருமூலர்.

(மானுடராக்கை வடிவு சிவலிங்கம்.... பாடல் எண் 1726, திருமந்திரம்).

மனிதனின் ஆன்மாவும் லிங்கம் என்கிறார் திருமூலர். சிவசக்தி சேர்க்கையில் பொருள் உயிர்ப்பு அடைகிறது. எனவேதான் அவர் உயிர்ச்சிவத்தை ஆத்துமலிங்கம் என்றது சஹஸ்ரதளத்தில் ஆத்துமலிங்கத்தின் அழகான பேரொளியைக் காணலாம் என்கிறார் அவர்.

('அகராமுதலா அனைத்துமாய் நிற்கும்.....' பாடல் எண் 1753' திருமந்திரம்)

உருவம், அருவம், அருவுருவம் மூன்று வகை திருமேனி கொண்ட சிவன் ஞானலிங்கமுமாவான்.

சிவசக்தியை உணர்வதே ஞானம், உணர்வுச் சிவமே ஞானலிங்கம் ('கொழுந்தினைக் காணிக் குவலயம் தோன்றும்....' பாடல் எண்: 1769, திருமந்திரம்.)

நான்முகன், திருமால், உருத்திரன், மகேசன், வலிமை அளிக்கும் சதாசிவன், பரநாதம், நன்மையைத் தரும் சத்தி சிவன் என ஒன்பது வடிவமாய் பயன்களைத் தருகின்ற லிங்கம் சிவலிங்கம்.

('மலர்ந்தயன் மாலுமுருத்திரன் மகேசன்....' பாடல் எண்: 1776, திருமந்திரம்.)

## சைவ சித்தாந்தம்

பரார்த்த லிங்கம், இட்ட லிங்கம் என இரு வகைப்படுத்துகிறது சைவ சித்தாந்தம் போன்ற சமய நூல்கள்.

பரார்த்த லிங்கம் ஐவகைப்படும். அவை சுயம்பு லிங்கம், காண லிங்கம், தைவிக லிங்கம், ஆரிட லிங்கம், மானிட லிங்கம் என்பனவாம். தானே தோன்றியது சுயம்பு லிங்கம். விநாயகர், முருகப் பெருமான் முதலிய கணர்களால் நிறுவப் பெற்றது காண லிங்கம். விட்டுணு முதலியவர்கள் தாபித்தது தைவிக லிங்கம். முனிவர்களால் அமைந்தது ஆரிடலிங்கம் மனிதர்களால் அமைக்கப்பட்டது மானுட லிங்கம்.

அனைத்திலும் உயர்ந்தது சுயம்பு லிங்கம்.

இட்ட லிங்கத்தை ஆன்மார்த்த லிங்கம் சக, லிங்கம் என்றும் குறிப்பிடுவர்.

குருவிடம் தீட்சை பெற்ற சீடன் குரு தன்னிடம் கையளித்த லிங்கத்தை சீடன் தன் வாழ்நாள் முழுவதும் பூசிப்பது இஷ்டலிங்கம். இஷ்டலிங்கத்துக்கு தினமும் பூசை செய்த பிறகே எதையும் உண்ண வேண்டும்.

லிங்க வழிபாட்டின் மூலம் முத்தி அடைந்த முப்பத்தி நான்கு நாயன்மார்கள்: எறிபத்தர், குங்கிலியக்கலயர், அரிவாட்டாயர், ஆனாயர், மூர்த்தியார், கண்ணப்பர், உருத்திர பசுபதியார்,

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



திருநாளைப் போவார், சண்டேசுரர், திருநாவுக்கரசர், திருநீல நக்கர், நமிநந்தி ஞான சம்பந்தர், ஏயர்கோன்கலிக்காமர், தண்டியடிகள், சாக்கியர், சிறப்புலியார், கழறிற்றறிவார், கூற்றுவர், அதிபத்தர், கலியர், ஐயடிகள் காடவர்கோன், கணம் புல்லர், காரியார், வாயிலார், கழற்சிங்கர், செருத்துணை, அதிபத்தர், புகழ்த்துணை, கோட்புலி, பூசலார், கோச்செங்கட் சோழர், சடையர் இசை ஞானியார், நம்பியாரூரர் ஆவர்.

**இதயத் தாமரையில்**

இதயம் என்கிற தாமரை சிவாலயம் போன்றது. அது மனதால் உருவாக்கப்படுகிற ஆலயம். அதில் ஞானமயமானதும், நாதவடிவானதுமாகிய லிங்கத்தை நிறுவி (இதுவும் மனதால் நடைபெற வேண்டியது) அதை வழிந்தோடும் அமுதத்தால் நீராட்டி (தலையின் மேற்புறத்தில் இருந்து வழிந்தோடும் அமுதம்), வைராக்கியம் என்கிற சந்தனமிட்டு, *எண்குணங்களாகிய மலர்களால் அர்ச்சித்து, பிராணாயமம் என்கிற தூபம் காட்டி ஞானமாகிய தீபமேற்றி, இந்திரியங்களைக் கட்டுப்படுத்தி நிவேதிக்க வேண்டும்.

**சிவலிங்கம் ஒலி-ஒளி வடிவிலானது என்பதைக் கருத்தில் கொள்ளவும்.**

லிங்கம் என்பது என்ன? ஞானசக்தியான சிவமே லிங்காகாரமாய் தோன்றுகிறது. லிங்கத்தை பூசித்து நற்கதி பெறுவோம்.

## வீட்டில் வழிபடுதல்!

ஒவ்வொரு குடும்பத்திலும் ஈசுவர பூஜை நடக்க வேண்டும். சவுகரியப்பட்டவர்கள் பூஜையை விஸ்தாரமாகச் செய்ய முடியும். சவுகரியமில் லாதவர்கள் சுருக்கமாகச் செய்யலாம். பத்து நிமிடம் ஒதுக்க முடியும்தானே. அலுவலகம் போகிறவர்களுக்கும் பூஜை சாத்தியம்தான்.

**பஞ்சாயதன பூஜை**

ஈசுவரன், அம்பாள், விஷ்ணு, விநாயகர், சூரியன் இவர்களின் மூர்த்திகளை வைத்து பூஜை செய்ய வேண்டும். இதற்குப் பஞ்சாயதன பூஜை என்று பெயர். அங்கங்களோடு கூடிய விக்கிரகங்களாகத்தான் இருக்க வேண்டும் என்பதில்லை. இயற்கையாகவே கிடைக்கும் ஐந்து பொருள்களில் ஆவாகனம் செய்து கொள்ளலாம்.

---

*எண்குணங்கள்: கொல்லாமை, புலனடக்கம், பொறுமை, அருள், அறிவு, தவம், உண்மை, தூய எண்ணம்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஈசுவரனுக்கு பாண லிங்கம், அம்பிகைக்கு சிலா என்கிற கல், விஷ்ணுவுக்கு சாளக்ராமம், சூரியனுக்கு ஸ்படிகம், விநாயகருக்கு சோணபத்ரக் கல்.

**பாண லிங்கம் - நர்மதா நதி ஓங்கார குண்டத்தில் கிடைக்கிறது.**

**சிலா கல் - ஆந்திராவில் சொர்ணமுகி ஆற்றில் கிடைக்கிறது.**

**சாளக்ராமம் - நேபாளத்தில் கண்டகி நதியில் கிடைக்கிறது.**

**ஸ்படிகம் - தஞ்சாவூரில் வல்லத்துக்குப் பக்கமாய் கிடைக்கும்.**

**சோணபத்ரக் கல் - கங்கையில் கலக்கிற சோணபத்ர நதியில் அகப்படும்.**

இவற்றுக்குப் பெரிய பூஜா மண்டபம் தேவைப்படாது, ஒரு சிறிய சம்புடத்தில் போட்டு வைத்து விடலாம்.

வெளியூர் செல்கிறபோது கையோடு கொண்டு போகலாம். போகிற இடத்தில் பூக்கள் கிடைக்கா விட்டால் உலர்த்தி வைத்த துளசி, வில்வத்தை (கையில் எடுத்துப் போனால்) பயன்படுத்திக் கொள்ளலாம்.

எங்கும் பூஜை செய்யலாம். ஆனால், வீட்டில் செய்கிற பூஜையின்போது சுவாமிக்கு அன்னம் நைவேத்தியம் செய்ய வேண்டும்.

கல், மண், செம்பு என்று எந்த பிம்பத்தில் வைத்து வணங்கினாலும் இறைவன் வருவான். ஆறு ஆதாரங்களைக் கடந்து அந்தச் சக்தி மேலே வர வேண்டும். அப்படி மேலே வந்த சக்தி நம் தலையில் உள்ள சஹஸ்ர தளம் என்கிற உச்சிப்பகுதியை அடையும்போது ஒரு பெரிய சோதி மண்டலத்தைத் தரிசிக்கலாம். அந்தச் சோதிவடிவே இறைவன். இந்தத் தத்துவத்தில் கொடி மரம் அமைக்கப் பெற்றது.

கால்களை நீட்டி மல்லாந்து படுத்தபடி இருக்கும் போது நம் பாதங்கள் உயர்ந்து மேல்நோக்கி இருப்பது போலவே நம் கோயில் கோபுரங்கள் கோயிலின் முன் புறம் அமைக்கப்பட்டுள்ளன.

## மானசீக பூஜை

இது உள்ளத்தால் உருகுவது, ஓரிடத்திலமர்ந்து மானசீகமாகவே இரத்ன மண்டபம், கோயில், எல்லாம் நிறுவி அதில் பகவானைப் பிரதிஷ்டை செய்தல்.

இங்கே பூசலார் நாயனாரின் மானதக் கோயில் பற்றிக் குறிப்பிட வேண்டும்.

தொண்டை நாட்டு திருநின்றவூரில் பிறந்த பூசலார் இறைவனுக்குத் திருக்கோயில் ஒன்று கட்ட விரும்பினார். ஆனால், அதற்குப் பொருள் கிடைக்கவில்லை. தமது மனத்தினுள்ளே இறைவனுக்குக் கோயில் கட்டினார் அவர். கோயில், கிணறு, குளம், மதில்சுவர் இவை எல்லாமும் அகத்தில் கட்டி முடித்தார். சிவபிரானைத் தமது கோயிலில் பிரதிட்டை செய்தார். தமது வாழ்நாள் முழுக்க பெருமானைத் தமது அகத்தில் கண்டே வழி பட்டார்.

## ஆத்ம பூஜை

வெளிபூஜை சீக்கிரம் முடிக்கலாம். எல்லாவற்றையும் உள்ளத்தில் வைத்துப் போற்றுவது ஆத்ம பூஜை. அதற்கு அதிக நேரம் ஆகும். ஒவ்வொன்றையும் உள்ளே ஆவாகனம் செய்து அங்கசுத்தி முதலான சுத்திகளையும் பண்ணி, பீடம், ஆசமனம், ஆவாகனம், அபிஷேகம், அர்ச்சனை முடிக்க கூடுதல் அவகாசம் பிடிக்கும்.

அந்தரங்க பக்தியே சக்தி. வேறு தந்திரம், மந்திரம் வேண்டாம்.

தொடரும்



noolaham.org | aavanaham.org



# தைப்பொங்கல்

பொங்கல்! தமிழர் பண்டிகையாக காலம் காலமாக கொண்டாடப்படுகிறது. பொங்கல் பண்டிகை என்பது தமிழர்களின் முதன்மையான பண்டிகையாகும். உழவுத் தான் தமிழர்களின் முக்கியமான தொழில்! எனவேதான் உழவர்களின் (திருநாள்) பண்டிகையாகக்கொண்டாடப்படுகிறது. விவசாயிகளின் அறுவடைத் திருநாள் என்ற பெயரும் பொங்கல் பண்டிகைக்கு உள்ளது. உழைக்கும் மக்கள்! இயற்கைக்கும், மற்ற உயிர்களுக்கும் செலுத்தும் ஓர் நன்றியறிதலாகக் கொண்டாடப்படுகிறது.

போகியோடு தொடங்குகிறது பொங்கல் திருநாள். பழையன கழிதலும், புதியன புகுதலும் என்ற வகையில் வீட்டை சுத்தம் செய்து தேவையற்றவற்றை (பழைய பொருட்களை) எரித்து விடுவார்கள். வீட்டை வெள்ளையடித்து சுத்தம் செய்வார்கள். பொங்கலுக்கு முதல் நாளான இதை போகி பண்டிகையாக கொண்டாடுவார்கள்.

ஆடிப்பட்டம் தேடி விதைப்பது தமிழர் மரபு அவை தைமாதம் பிறப்பதற்கு முன் அறுவடையாகிறது. அந்தப் புத்தரிசியை பொங்கலுக்கு பயன்படுத்துவார்கள். வீட்டு முற்றத்தில் கோலம் போட்டு அதன் நடுவே செங்கல்வில் அடுப்புசெய்து, புதிய பானையில், திருநீறிட்டு, சந்தனம் குங்குமம் வைத்து பானையின் கழுத்தில் மஞ்சல்,



*திருமதி: பவானி பாலசுப்ரமணியம்*
*வெள்ளவத்தை.*

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



இஞ்சி கிழங்கை இழையோடு கட்டி அடுப்பில் வைப்பார்கள். சாணத்தால் பிள்ளையார் பிடித்து பூசணிப்பூ சொறுகி வைத்து வழிப்படுவார்கள்.

"பொங்கும் மங்களம் எங்கும் தங்குக" என்பதற்கேற்ப பால், அரிசி, வெல்லம் கலந்து பொங்குகின்ற பொங்கலே! பொங்கலோ, பொங்கல் என குலவையிட்டு வழிப்படுவார்கள். இப்படி திறந்த வெளியில் பொங்கல் வைப்பதால், சூரிய பகவான் அதை நிவேதனமாக ஏற்று மகிழ்கிறார். இதற்காகவே கூடவே கரும்பும் வைத்து கடவுள்களுக்குப் படைப்பார்கள். பொங்கலை படைத்து சூரிய பகவானுக்கு தூபம், தீபம் காட்டி ஆதவனை ஆராதனை செய்வார்கள். பின்பு உறவினர் சுற்றத்தார் சகிதம் பொங்கல் விழாவை இனிமையாக கொண்டாடுவார்கள்.

"ஏர் முனைக்கு நேர் இங்கு எதுவே இல்லை" என்பதற்கேற்ப: அந்த ஏர் முனையை முன்னேந்தி செல்பவை மாடுகளே! இதன் மூலம் மாடுகளே உலகை உயிர்ப்போடு வைத்துள்ளன! அந்த மாடுகளை கடவுளாகக் கருதி வழிப்படுவது தான் மாட்டுப் பொங்கல்.

பசுவின் உடலில் முப்பத்து முக்கோடி தேவர்களும் உறைவதாக பெரியவர்கள் கூறுவார்கள் எனவே பசுவை வணங்குவதக் மூலம், அனைத்து தேவர்களின் ஆசியும் எமக்கு கிடைக்கும்.

மாட்டுப் பொங்கலன்று பசுக்களுக்கு மஞ்சள் பூசி, திருநீறிட்டு குங்குமம் வைத்து, கொம்புகளுக்கு வர்ணம் தீட்டி, மாலைபோட்டு வணங்குவர். அதன் பசிக்கு தேவையான உணவையும் படைப்பர்.

பூமிமாதா, சூரியபகவான், பசுக்கள், எருதுகள், நீர் ஆகியவற்றின் உறுதுணையோடு தான் நம் நல்வாழ்வு ஆரம்பம் ஆகிறது. நாம் வளமான வாழ்வை பெற வேண்டுமாயின்! இவைகளில் எமக்கு உறுதுணை வேண்டும்! இத்தைப் பொங்கல் விழா இவை அனைத்துக்கும் நன்றி செலுத்தும் விழாவாக அமைகிறது.

"சுழன்றும் ஏர்ப் பின்னது. உலகம் அதனால்:
உழந்தும் உழவே தலை"

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




தைபூசம் என்பது உலகெங்கும் உள்ள சைவ சமயசார்ந்த தமிழர்களால் . கொண்டாடப்பட்டு வரும் ஒரு விரத விழாவாகும்! முருகனுக்குகந்த இத்தினம, பூச நட்சத்திரமும், பௌர்ணமியும் கூடி வரும் நன்நாளில் முருகப் பெருமானுக்கு எடுக்கப்படும் பூசத் திருவிழாவாகும்.

தனயன் முருகனுக்கு மட்டுமின்றி, தகப்பன் சுவாமி சிவனுக்கும் உரிய தினமாகும் தைப்பூசம்.

விரதமுறைமையை நோற்கின் அதிகாலை துயில் எழுந்து நீராடி, ஆசார சிலராய் சிவாலயம் சென்று சிவனை தரிசித்து காலை உணவை விடுத்து நண்பகலில் புது நெல்லரிசிச் சாதம் உட்கொள்ளல் வேண்டும்.

மேலும் தைப்பூச திருநாளில் தான் தை, தை என தாளத்திற்கமைய எம்பெருமானான நடராஜ பெருமான் சிவகாம சுந்தரியின் ஆனந்த நடனமும்

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

இடம் பெறும் திருநாளாகும்.

தைப் பூச தினத்ததன்று தான் அன்னை பார்வதி தேவி முருகப்பெருமானுக்கு வேல் கொடுத்த தினமாகும். வேலானது! சிவசக்தி அம்சமானது: சிவன் படைத்த முருகனுக்கு பார்வதி தேவி வேல் கொடுத்து முருகனை சிவசக்தி அம்சமாக்கினார்.

இப்பூசத் திருநாளில் முருகக் கடவுளுக்கு படைக்கும் காணிக்கைகளை காவடிகளாக எடுத்துக் கொண்டு நடைப்பயணமாக அவர் சன்னதி வந்து காணிக்கை செலுத்தி வழிப்படுபவர்.

திருவாவினன் குடி என்றழைக்கப்படும் பழனியில் தைப்பூச திருவிழா பத்து நாட்கள் நடைபெறும். முருகபக்தர்கள் பல இடங்களிலிருந்தும் காவடி எடுத்துவந்து முருகனை வழிப்படுவார்கள். வரும் வழிகளில் பாடும் பாடல்களை காவடிச் சிந்து என்றழைப்பர்.

மேலும் தைப்பூச திருநாளில் சமய தீட்சை பெறல், புதுமனைபுகுதல், புதுப்பயிர் நாட்டல், குழந்தைகளுக்கு மொட்டைப் போடுதல், காது குத்துதல், விவாகம் செய்தல் என சுப நிகழ்வுகளுக்கு சிறந்த நாளாகும்.

இத் தைபூசம் தில்லை கூத்தனான நடராஜ பெருமானையும், பழனி ஆண்டவரான முருகப் பெருமானையும் வழிப்பட சிறந்த நாளாகும்.

*திருமதி. பவானி பாலசுப்ரமணியம்*
*வெள்ளவத்தை.*

# கணவன் மனைவி ஒற்றுமை!



கணவன்-மனைவி ஒற்றுமையை வலியுறுத்து வதற்காக கொண்டாடப்படும் விழா தைப்பூசத் திருநாள். மார்கழி மாதம் திருவாதிரை நட்சத்திரத்தில் தனித்து நடன மாடுவார் சிவபெருமான். நடன நிலையில் உள்ள சிவனை, "நடராஜர்" என்று அழைக்கின்றோம்.

தைப்பூசத் திருநாளில் அவர் உமாதேவியுடன் இணைந்து நடனமாடுகிறார். சிவனின் இந்த நிலையை, "உமாமகேஸ்வரர்" என்பார்கள். அவன் அசைந்தால் தான் உலகம் அசையுமென்ற நியதியை எடுத்துச் சொல்வதே நடன தத்துவம்.

ஐந்துவித தொழில்களை நடத்துகிறான் இறைவன். அவை: படைத்தல், காத்தல், அழித்தல், மறைத்தல், அருளல். இதன் மூலம் அவன் உலக உயிர்களுக்கு சொல்வது, என்ன வென்றால், "உயிர்களே". நான் ஆடுகிறேன் என்றால், நீங்களும் ஆடுகிறீர்கள். இந்த ஆட்டத்தின் போது உங்களை நான் படைக்கிறேன். படைத்த உங்களைக் காப்பதற்காக எல்லா வசதிகளையும் இந்த உலகத்தில் தந்துள்ளேன். உங்கள் வாழ்வை முடிப்பவனும் நானே. முற்பிறவியில் நீங்கள் செய்த செயல்களை மறைத்து, அதற்குரிய பலனை மட்டும் அனுபவிக்கச் செய்யும் மறைத்தல் (மறக்கச் செய்தல்) தொழிலைச் செய்கிறேன். உங்களை பிறவியில்லா நிலைக்கு ஆளாக்கி, என்னுடன் கலக்க அருளுகிறேன். இவற்றையே நான் துணைவியுடன் இணைந்தாடும் ஆட்டத்தில் வெளிப்படுத்துகிறேன் என்கிறார்.

இந்த உலகத்தை இறைவனும், இறைவியும் சேர்ந்து இயக்குகின்றனர் என்பதையும் இந்த நாட்டியம் உணர்த்துகிறது. உலகத்தை இயக்க எப்படி இந்த தம்பதியர் இணைந் திருக்கின்றனரோ, அதுபோல ஆணும், பெண்ணும், பிற உயிர்களும் தங்கள் குடும்பத்தை இயக்க தம் வாழ்க்கைத் துணையுடன் இணைந்து செயல்பட வேண்டும். ஒத்த கருத்துடன் ஒருங்கிணைந்து செயல்பட்டால், வாழ்க்கை வெற்றி பாதையை நோக்கிச் செல்லும். குடும்பம் நல்ல முறையில் இயங்கும் என்பதையும் இது வெளிக்காட்டுகிறது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இந்து தர்ம சாஸ்திரம்

மகாலட்சுமிதேவி குணமுள்ளவனிடத்திலும் தங்குவதில்லை. குணமில்லாதவிடத்திலும் தங்குவதில்லை. எவனுக்கு யோகம் வரவேண்டியிருக்கிறதோ அங்கு தங்குகிறார்கள். பணத்திற்கும் குணத்திற்கும் சம்பந்தமேயில்லை என்பது எவ்வளவு உண்மையோ அதேபோல் படிப்புக்கும் சம்பாத்தியத்திற்கும் சம்பந்தமேயில்லை.

யார் என்ன சொன்னாலும், கோபமில்லாமலும் தைரியத்தை இழக்காமலும் எவன் பொறுமையுடன் இருக்கிறானோ அவன் சமர்த்தனாவான். இப்படிப்பட்டவனுக்கு தெய்வ உதவி நினைத்த சமயம் கிடைக்கும்.

பசுவை வீணாகக் கொல்பவன் அப்பசுவுக்கு எத்தனை ரோமங்கள் இருக்கிறதோ அத்தனை ஜென்மங்கள் பசுவாகப் பிறந்து பிறரால் கொல்லப்படுவான். பசுவைக் காப்பாற்றி பேணுவதினால் கிடைக்கும் புண்ணியத்தின் தன்மைக்கு அளவேயில்லை.

சந்நியாசி, மருத்துவன், சோதிடன், குரு, கர்ப்பிணி, நோயாளி ஆகிய இவர்களுக்கு ஆபத்துக் காலத்தில் செய்யும் உதவியால் வரும் புண்ணியம் உயர்ந்தது. தன் வீடு தேடி எந்தக் காரியமாக சுமங்கலி வந்தாலும், அவளை வரவேற்று உபசரித்து அன்னமளிக்க வேண்டியது இன்றேல் தண்ணீராவது அருந்தக் கொடுக்க வேண்டும். செல்லும் பொழுது மஞ்சள், குங்குமம், புஷ்பம் கொடுத்து அனுப்ப வேண்டும். இதனால் கொடுப்பவர்களுக்கு மாங்கல்ய பலமும், பெறுபவர்களுக்கு ஐஸ்வரிய பலமும் உண்டாகிறது.

நல்ல சிநேகிதத்திற்கு குலம், ஜாதி இவைகள் குறுக்கே நிற்காது. கெட்ட குலத்தில் பிறந்தவனானாலும் தர்மத்தை அனுசரித்து நியாயத்தை அறிந்து சாதுக்களுக்கும், மருத்துவர்களுக்கும், மாதா, பிதா, பெரியோர்களுக்கும் மரியாதை கொடுத்து எவன் ஆதரிக்கிறானோ அவன் நற்குலத்தில் பிறந்தவனை விட நூறு மடங்கு சிறந்தவன் ஆவான்.

தொடரும்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



## சிவனை சிவபிரான் என்றும் ராமனை ராமபிரான் என்கிறோம் இவ்விதம் நாம் பயன்படுத்தும் "பிரான்" என்ற சொல்லுக்கு என்ன அர்த்தம்?

"பிரான்" என்பதற்குத் "தலைவன்" என்று பொருள். ஸ்வாமி என்றாலும் தலைவன் எனபதே பொருள். இதனால் ஜீவாத்மாக்களான நாமெல்லோரும் ஆண்டவனுக்கு அடிமைப்பட்டவர்கள், ஆண்டவனுக்கு கைங்கரியம் செய்ய வேண்டியவர்கள், ஆண்டவனுடன் நித்திய சம்பந்தம் கொண்டவர்கள் என்ற உண்மை நமக்கு நினைவுபடுத்தப்படுகிறது.

"எனக்குத் தலைவன் இறைவன்: நான் அவனது தொண்டன்: இறைவனுக்கு அடிமை செய்வதே என் வாழ்க்கையின் முதலாவது லட்சியம், முடிவான லட்சியமும் அதுவே" என்ற மனநிலையை வளர்த்துக் கொள்வது மிகவும் நல்லது.

## ஆன்மிகத்தில் "விவேகமான செயல்" என்று கருதும் செயல் என்ன?



"இறைவனே பரதத்துவம்" என்று உணர்ந்து, அவனைச் சிந்தனையாகிய கைகளினால் பற்றி வாழ்வதே விவேகமான செயல்: விவேகமான செயல்களில் தலையாய செயலும் அதுவே.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# இறைவனை உள்ளத்தில் கோயில் கொள்ளச் செய்வது எப்படி?

இறைவனை உள்ளத்தில் நிரந்தரமாகக் கோயில் கொள்ளச் செய்வது என்பது உலகம் முழுவதையுமே விலைக்கு வாங்க முற்படுவது போன்று கடினமானது என்பது உண்மைதான்.

ஆனால் அதை விடவும் உண்மை, முயன்றால் நாம் இதைச் செய்ய முடியும் என்பது.

"இது செய்வதற்கு அருமையானது என்று சோர்வுறாமல் இருக்க வேண்டும். அதைச் செய்வதற்குத் தக்க பெருமையை முயற்சி உண்டாக்கும்" என்ற வள்ளுவப் பேரரசனின் அழுத்தமான கருத்தை, பிரம்மாஸ்திரமாக நாம் நமது வாழ்க்கைக்குத் துணையாகக் கொள்ள வேண்டும்.

# 'ஓம்' என்ற சொல்லுக்கு என்ன பொருள்?

அ-உ-ம ஆகிய மூன்று எழுத்துக்களும் சேர்ந்து "ஓம்" ஆயிற்று. அ என்ற எழுத்து ரிக்வேதத்திலிருந்தும், உ என்ற எழுத்து யஜுர் வேதத்திலிருந்தும் எடுக்கப் பட்டவையாகும். முற்காலத்தில் வேதம் மூன்று என்ற பொருளில் "த்ரயோ வேதா:" என்றே சொல்லப்பட்டிருக்கிறது.

ஓம் என்பது வேதம், வேதத்தின் சாரம். அதில் வேதம் முழுவதும் அடங்கியிருக்கிறது. பாலிலிருந்து கடைந்தெடுக்கப்பட்ட வெண்ணெய் போல வேதங்களிலிருந்து கடைந்தெடுக்கப்பட்ட உண்மையாக, அதாவது நான்கு வேதங்களின் சாரமாக ஓம் விளங்குகிறது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# விநாயகர், தனலட்சுமி, வேங்கடாசலபதி சுவாமி படங்களைப் பூஜையறையில் எப்படி வரிசைப்படுத்தி மாட்ட வேண்டும்?

நடுவில் வேங்கடாசலபதி, அவருக்கு இடப்பக்கம் தனலட்சுமி, வலப் பக்கம் விநாயகர் என்று இருக்க வேண்டும்.



# 'உ' என்ற எழுத்து எப்படி பிள்ளையார் சுழியாக ஆயிற்று? 'உ' என்ற எழுத்துக்கும் பிள்ளையாருக்கும் உள்ள தொடர்பு என்ன?

விநாயகரை ஓங்காரத் தத்துவம் என்றும், ஓங்கார வடிவினர் என்றும் நம் முன்னோர்களான அருளாளர்கள் கூறியிருக்கிறார்கள்.

தமிழிலுள்ள அ, உ, ம் ஆகிய மூன்று எழுத்துக்களின் சேர்க்கையாக "ஓம்" அமைந்துள்ளது. இவற்றில் அ என்பது படைத்தலையும், உ என்பது காத்தலையும், ம் என்பது அழித்தலையும், உணர்த்துகின்றன. அதனால் விநாயகப் பெருமான் முத்தொழில் இயற்றும் முழுமுதற் கடவுளாக் விளங்குகிறார். அ, உ, ம் என்ற எழுத்துக்களில் உ என்பது காத்தல் தொழிலை உணர்த்துவதால், அன்பர்கள் தாங்கள் மேற்கொள்ளும் பணி விக்கினமின்றி நடை பெறுவதற்குக் காத்தருளும்படி விநாயகரை நினைவு கூரும் வகையில், உ என்ற பிள்ளையார் சுழியைப் போடுகிறார்கள்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# பதிகம், பாடல் இவை இரண்டிற்கும் உள்ள வேறுபாடு என்ன?

பாடல் என்பது ஒரு ப்பாட்டைக் குறிக்கும். பதிகம் என்பது இறைவன் மீது பாடப்பெற்ற பத்துப் பாடல்களைக் குறிக்கும். நாயன்மார்களின் தேவாரத்தில் பதிகம் என்று பல உள்ளன.

"பாடல் பெற்ற ஸ்தலம்" என்பது, அந்த ஊர் இறைவனைப்பற்றி அருளாளர்கள் பல பாடல்கள் பாடியிருக்கிறார்கள் என்ற கருத்தில் வரும்.

**திருவாசகத்திலுள்ள சிவபுராணத்தில் ஓர் அடி "கண்ணுதலான் தன் கருணைக் கண் காட்ட வந்தெய்தி" என்று வருகிறது. இது தவிரவும் அருளாளர்களின் பல பாடல்களில், கண்ணுதற் கடவுள், கண்ணுதலான் என்று இறைவன் குறிப்பிடப்படுகிறான். 'கண்ணுதற் கடவுள்' என்று இறைவன் அழைக்கப்பெறுவது ஏன்?**

"நுதல்" என்றால் நெற்றி. நெற்றியில் கண்ணை உடையவன், நெற்றிக்கண் படைத்தவன் என்ற பொருளில் சிவபிரானைக் கண்ணுதற் கடவுள் என்று போற்றி வணங்குகிறோம்.



Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

# முருகனை வணங்காமல் முருகனுடையவேலைச் சிலர்வணங்குகிறார்கள். இது சரியா?



இந்து தேவதேவியர்களின் திருக்கரங்களில் திருவாயுதங்கள் பல உள்ளன. ஆனால் அவற்றில் இரண்டு ஆயுதங்கள் மட்டும்தான் தனியே வழிபடுவதற்கு உரிய சிறப்பும் ஏற்றமும் பெற்று விளங்குகின்றன. அவை முறையே திருமுருகனின் திருக்கரத்திலுள்ள வேலும், திருமால் திருக்கரத்தில் தாங்கியிருக்கும் திருஆழியான சுதர்சன சக்கரமும் ஆகும்.

# சிவபெருமான் நடனத்தைச் 'சிவநடனம்' என்று சொல்லாமல், 'சிவதாண்டவம்' என்று சொல்வதேன்?



தண்டு என்ற பெயரில் ஒரு மகரிஷி இருந்தார். அவருக்குச் சிவபெருமான் தமது நடனத்தைக் கற்றுக் கொடுத்தார். எனவே அந்த நடனம் சிவதாண்டவம் என்று அழைக்கப்படுகிறது.

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# வெள்ளூர் ஸ்ரீ திருக்காமேஸ்வரம்



ஈசனுக்கும் உண்டு ஆயிரம் திருநாமங்கள். வேத நெறி தழைத்தோங்கும் இந்த பாரத தேசத்தில் ஒவ்வொரு ஆலயத்திலும் ஒவ்வொரு திருநாமம் கொண்டு, தன் அடியவர்களைக் காத்து வருகிறார் மகேசன். நாவினிக்கச் சொல்லும் உயர்ந்த அந்தத் திருநாமங்களுள் ஒன்றுதான் ஸ்ரீதிருக்காமேஸ்வரர்!

இந்தத் திருநாமத்தோடு ஈசன் உறையும் அற்புத ஆலயங்களுள் குறிப்பிடத் தகுந்த ஒன்று வெள்ளூரில் அமைந்திருக்கிறது. திருச்சி சேலம் பிரதான சாலையில் சுமார் 32 கி.மீ. தொலைவில் அமைந்துள்ளது வெள்ளூர். முசிறியில் இருந்து சுமார் 6 கி.மீ. தொலைவு!

இங்கு உறையும் ஈசனின் திருநாமம்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஸ்ரீதிருக்காமேஸ்வரர் என்றால், உமையின் திருநாமம் சிவகாம சுந்தரியாகத்தானே இருக்க முடியும்? ஆம்! அதுதான் இங்கே அருளாட்சி புரியும் அன்னையின் திருப்பெயர்.

இந்த ஆலயத்துக்கு எண்ணற்ற புராணச் சிறப்புகள் உண்டு.

மகாவிஷ்ணுவுக்கும் மகாலட்சுமிக்கும் இடையே ஏற்பட்ட ஊடலைத் தீர்த்து மகாலட்சுமியை ஸ்ரீவத்ஸ முத்திரையுடன் கூடிய சாளகிராமமாக மகாவிஷ்ணுவின் இதயத்தில் தேவியை ஸ்தாபனம் செய்த தலம் இது.

ராவணன் சிவ பூஜை செய்து உடல் வலிமை பெற்ற தலம்.

இறைவனை வழிபட்டு அளவற்ற போகத்துக்கு சுக்கிரன் அதிபதியான தலம்.

குபேரனின் செல்வச் செழிப்புக்கும் வெள்ளூர் திருத்தலமே காரணம்.

ஆதிசேஷனும் சூரிய பகவானும் வழிபட்ட தலம்.

சித்தர்களும் ஞானிகளும் என்றென்றும் இந்தத் திருக்கோயிலில் வீற்றிருந்து தவம் புரிந்து வருவதாக ஓலைச் சுவடிகளில் குறிப்பு கண்டறியப்பட்டுள்ளதாம். போகர் பெருமானுக்கு ஒரு சந்நிதியும் தனி மண்டபமும் அமைந்துள்ளது விசேஷம்.

செல்வ வளத்தை அள்ளித் தரும் ஐஸ்வர்ய மகாலட்சுமி எனும் சிறப்புச் சந்நிதி இந்த ஆலயத்துக்கு மேலும் பெருமை சேர்க்கிறது. வில்வ மழை பொழிந்து ஈசனை அர்ச்சித்த தேவி இவள்.

இப்படிச் சொல்லிக் கொண்டே போகலாம். பிரமிக்க வைக்கும் பழங்காலத்துக் கற்கோயில். ஆலயத்துக்குள் நுழைந்ததுமே தெய்வ சாந்நித்தியம் துலங்குகிறது.

இங்கு குடி கொண்ட இறைவனுக்குத் திருக்காமேஸ்வரர் என்கிற திருநாமம் வர என்ன காரணம்?

தட்சன் யாகம் நடத்திய கதை எல்லோருக்கும் தெரியும். ஈசனை விடத் தானே உயர்ந்தவன் என்கிற செருக்கு கொண்டு பிரமாண்டமான ஒரு யாகத்தை நடத்தினான் தட்சன். அவனது மாப்பிள்ளையான அதாவது தட்சனின் மகளான தாட்சாயினியின் துணைவர் சிவபெருமானுக்கு இந்த யாகத்தில் கலந்து கொள்ள அழைப்பு இல்லை. ஆனாலும், தந்தை நடத்தும் யாகத்தில் மகள் கலந்து கொள்ளாமல் இருக்க முடியுமா? பாசம் விரட்டியது. எனவே, அழைப்பு இல்லாமலே அங்கு போய் அவமானப்பட்டுத் திரும்பினாள் பராசக்தி. கூடவே தந்தைக்கு சாபமும் கொடுத்து விட்டு வந்தாள்.

தன் அனுமதி இல்லாமல் சென்றதால், உமையை நெற்றிக்கண்ணால் சுட்டெரித்தார் ஈசன். தவறை உணர்ந்த தேவி, மீண்டும் ஈசனுடன் இணைந்து கயிலையில் வசிக்க விரும்பினாள். "பூலோகத்தில் பர்வதராஜனுக்கு மகளாகப் பிறந்து என்னை வழிபடு. உரிய நேரம் வரும்போது உன் விருப்பம் நிறைவேறும்" என்று அருளினார் சிவபெருமான். அதன்படி பர்வதராஜனின் மகளாக அவதரித்த அன்னை, "பார்வதி" என்ற திருநாமம் பூண்டு பர்வதமலையில் தவம் புரியலானாள்.

இறைவனும் இறைவியும் பிரிந்து இருந்தால், உலக சிருஷ்டி எவ்வாறு நிகழும்? பிரபஞ்சம் பரந்து விரிய வேண்டாமா? சக்தியும் சிவனும் சேர்ந்தால்தானே இது சாத்தியம்! இதற்காக பிரம்மா, விஷ்ணு மற்றும் தேவர்கள் அனைவரும் கூடி விவாதித்தனர். சின்முத்திரை காட்டி யோக நிலையில் இருக்கும் ஈசனுக்கு காமத்தின் மீது எப்படி நாட்டம் வரும்? காம பாணம் ஈசன் மேல் விழுந்தால்தானே அவருக்கு சக்தியின் நினைவு வரும்?! இதற்காக அனைவரும் மன்மதனை அணுகினார். ஆனால், மன்மதன் சம்மதிக்கவில்லை. காம பாணத்தை எனக்கு அருளியவரே எம்பெருமான்தான். இதை அவர் மேல் நான் எய்வது எனக்கு நானே அழிவைத் தேடிக் கொள்ளும் முடிவாகும் என்று மறுத்தான்.

தேவலோகமே ஒன்று திரண்டு சாபம் விட்டது மன்மதனுக்கு. அதன் பின் வேறு வழியின்றி, பல மைல் தொலைவில் உள்ள ஒரு புன்னை மரத்தடியில் ஒளிந்து கொண்டு ஈசனைக் குறி பார்த்து காம பாணம் எய்யத் தயாரானான்.

நடந்ததையும், நடக்கப் போவதையும் அறியாதவரா ஈசன்? வில்லில் இருந்து பாணம் வெளிப்பட்ட நேரத்திலேயே தன் நெற்றிக்கண்ணால் மன்மதனை எரித்துப் பொசுக்கினார். விளைவு பாணம் திசைமாறி பார்வதியின் மேல் விழுந்தது. தவம் கலைந்தது. தன் அவதார நோக்கம் உணரப் பெற்றாள் தேவி. சிவனை அடைவதற்கான காம பாணம் தன் மேல் விழுந்ததால், "சிவகாம சுந்தரி" ஆகி, ஈசனுடன் கூடினாள். எனவேதான் இங்குள்ள ஈசன் திருக்காமேஸ்வரராகவும், தேவி சிவகாம சுந்தரியாகவும் நமக்குக் காட்சி தருகிறார்கள். இந்த நிகழ்வை சித்திரிக்கும் புடைப்புச் சிற்பம் வெள்ளூர் திருக்காமேஸ்வரர் ஆலயத்தில் காணப்படுகிறது. சிவபெருமானை நோக்கி காமக்கணை விடும் மன்மதனின் சிற்பம் நம்மைக் கவர்கிறது.

மன்மதனின் இழப்பை அவன் மனைவியான ரதிதேவியால் தாங்கிக் கொள்ள முடியவில்லை. இழந்த கணவனை திரும்ப வேண்டி ஈசனிடம் மண்டியிட்டாள். அதே வேளையில் மன்மதன் இல்லாததால், ஜீவ ராசிகளிடம் காதல் உணர்வு பெருகவில்லை. உயிர்ப் பெருக்கம் நிகழவில்லை. எனவே, மன்மதனை மீண்டும் உயிர்ப்பித்து ரதிதேவியின் கண்களுக்கு மட்டும் தெரியுமாறு செய்தார். அதோடு, "மன்மத மதனகளிப்பு மருந்து" எனும் மருத்துவ முறையை

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மன்மதனுக்குக் கற்பித்தார். இந்த மருந்து, சித்த மருத்துவ ஓலைச் சுவடிகளில் நூறு பாடல்களாக அமைந்துள்ளது என்பது குறிப்பிடத்தக்க ஒன்று. மருத்துவ முறைகளை மன்மதனுக்கு எடுத்துரைத்ததால் திருக்காமேஸ்வரருக்கு "வைத்தியநாதர் "என்றொரு திருநாமம் உண்டு.

ஸ்ரீவைத்தியநாதர் என்பதால், இந்த ஈசனுக்கு அபிஷேகிக்கப்படும் தீர்த்தம் பக்தர்களுக்குப் பிரசாதமாக வழங்கப்படுகிறது. உடல் பிணி தீர்க்கும் புனித தீர்த்தமாக இது கருதப்படுகிறது.

சோழ மன்னனான முசுகுந்த சக்ரவர்த்தியின் அவதார ஷேத்திரம்-வெள்ளூர்! தியாகேசப் பெருமான் (திருவாரூரில் பிரசித்தம்) பூலோகம் வருவதற்குக் காரணமாக அமைந்தவர் முசுகுந்த சக்ரவர்த்தி. வெள்ளூர் திருத்தலம் பற்றிய குறிப்பு ஆரூர் புராணத்திலும் உள்ளது. வெள்ளூர் என்கிற பெயர் இந்த ஊருக்குக் காரணமாக இருந்தவரே முசுகுந்தன்தான்.

முற்பிறவியில் முசுகுந்தன் ஒரு குரங்காகப் பிறந்திருந்தார். வேடன் - சிவராத்திரி கதை இந்தத் தலத்தோடு வேறு மாதிரி சொல்லப்படுகிறது. அதாவது ஒரு சிவராத்திரி நன்னாளில் ஒரு குரங்கைத் துரத்திக் கொண்டு வந்தது புலி. பயந்து போன குரங்கு, அருகே இருந்த வில்வ மரம் ஒன்றின் மீது ஏறி அமர்ந்தது. "குரங்கு இறங்கி வரட்டும் பார்க்கலாம்" என்பது போல் புலியும் மரத்தடியிலேயே காத்திருந்தது. இரவு வேளையில் "பொழுது போக வேண்டுமே" என்பதற்காக ஒவ்வொரு வில்வ இலையாகப் பறித்து சில இலைகளைத் தன் குணம் காரணமாக வாயில் வைத்துக் கடித்து கீழே போட்டுக் கொண்டே இருந்தது. வில்வம் கீழே விழுகிற இடத்தில் ஒரு சிவலிங்கம் இருந்தது. இரவு முழுவதும் வில்வத்தால் லட்சார்ச்சனை செய்தது குரங்கு. இதைக் கண்டு மகிழ்ந்த ஈசன், குரங்குக்குக் காட்சி தந்து, அடுத்த பிறவியில் நீ ஒரு சக்ரவர்த்தியாகப் பிறப்பாய். சிவ பக்தனாக இருப்பாய் என்று அருளினாராம்.

அந்தப் புண்ணியத்தால்தான் அடுத்த பிறவியில் முசுகுந்த சக்ரவர்த்தியாக அவதாரம் எடுத்தது குரங்கு. ஈசனிடம் தான் வைத்த வேண்டுகோள் காரணமாக மனித உடலும், குரங்கு முகமும் கொண்டே அவதரித்தார் முசுகுந்தன். முசிறி என்று பெயர், முசுகுந்தன் என்பதில் இருந்துதான் வந்துள்ளது. முசுகுந்தன் இங்கே அரசாட்சி செலுத்தியதற்கு ஆதாரமாக இன்றும் பல ஊர்கள் இங்கு அமைந்துள்ளன. முசுகுந்த சக்கரவர்த்தியின் யானைப்படை இருந்த இடம் ஆனைப்பட்டி எனவும், காலாட்படை இருந்த இடம் திரணையான்பட்டி (பெரிய படை) எனவும், பசுக்கள் வளர்த்த இடம் பசுக்காரன்பட்டி எனவும் இன்றைக்கும் இருந்து வருகிறது.

இதே காலத்தில் வலன் என்கிற அசுரன் தான் பெற்ற வரங்களை வைத்துக் கொண்டு சகல லோகங்களையும் ஆட்டிப் படைத்து வந்தான். இவன் மனிதன் மற்றும் எந்த தேவ சக்தியாலும் தான் இறக்கக் கூடாது என்பதே சிவபெருமானிடம் அவன் பெற்ற வரம். வலன் வருகிறான் என்றால் தேவர்கள் மிரண்டு ஓடத் தொடங்கினர். எந்த சக்தியாலும் அவனை அழிக்க முடியவில்லை. இந்திரன் தலைமையில் தேவர்கள் அனைவரும் திரண்டு மகாவிஷ்ணுவை அடைந்தனர். "இந்திரா பூலோகம் போ. வலனை அழிக்கக் கூடிய ஆற்றல் ஒரே ஒருவனுக்குத்தான் இருக்கிறது. அவன்தான் முசுகுந்த சக்ரவர்த்தி" என்று அனுப்பினார் விஷ்ணு

பூலோகம் வந்த இந்திரன், முசுகுந்தனைச் சந்தித்து, "வலனை அழிக்க வேண்டும்" என்று வேண்டினான். "சாதாரண மனிதனான என்னால் எப்படி ஒரு அசுரனை வதம் செய்ய முடியும்?" என்று முசுகுந்தன் கேட்க "உன்னால் முடியும். திருக்காமேஸ்வரரை வணங்கி, உன் மணிமுடி மற்றும் வீர வாள்களை அவர் சந்நிதியில் வைத்து வழிபடு. வெற்றி பெறும் ஆற்றலை அவர் உனக்கு வழங்குவார்" என்றான் இந்திரன். அதன்படி ஸ்ரீதிருக்காமேஸ்வரர் சந்நிதியில் மகுடம் மற்றும் வீர வாட்களை வைத்து வழிபட வலனை அழிக்கும் பேராற்றல் பெற்றான்.

முசுகுந்தன் தலைமை வகித்துச் செல்ல இந்திரன் முதலான தேவர்கள் பின்னால் அணிவகுத்துச் சென்றார்கள். கால பைரவரும் இந்தப் போரில் தளபதியாக வந்தார் (இவருக்கு ஒரு சந்நிதி இருக்கிறது).

பிறகென்ன போரில் வலன் சம்ஹாரம் செய்யப்பட்டான். வலனை வென்ற ஊர் என்பதால், வெற்றியைக் குறிக்கும் வகையில் வெல்லூர் என வழங்கப்பட்டு வந்தது. பின்னாளில், இதுவே வெள்ளூர் ஆகி விட்டது.

இறைவனின் எந்த ஒரு லீலைக்கும் ஒரு காரணம் இருக்கும் என்பதை இந்த இடத்தில் நாம் புரிந்து கொள்வது அவசியம். எந்த ஒரு செயலுமே நம்முயற்சியால் விளைவதன்று. இறைவனின் சங்கல்ப்பப்படியே எல்லாம் நடந்தேறுகின்றன. வலன் வரம் பெற்றது மனிதன் மற்றும் தேவர் கையால் மரணம் கூடாது என்பது. இதற்காகவே, மனித உடலோடும், குரங்கு முகத்தோடும் முசுகுந்தன் குரங்காகப் பிறந்து தன்னை பூஜித்து, வரம் பெற வேண்டும் என்பதும் இறைவனின் திருவிளையாடல்தானே!

ஸ்ரீதிருக்காமேஸ்வரர் சந்நிதியில் மகுடம் மற்றும் வாட்களை வைத்து பூஜித்து முசுகுந்தன் வெற்றி அடைந்ததன் விளைவாக, இவருக்குப் பின்னால் வந்த சோழர்களும் சரி சேர பாண்டியர்களும் சரி அரியணை ஏறுவதற்கு முன்னாலும், போருக்குக் கிளம்புவதற்கு முன்னாலும் திருக்காமேஸ்வரர் சந்நிதிக்கு வந்து ஆயுதங்களை வைத்து வணங்கிச் செல்வது வழக்கமாக இருந்து வந்திருக்கிறது. இரண்டாம் குலோத்துங்க சோழன் சற்றே சுயநலம் கொண்டவன் போலிருக்கிறது. இருப்பினும் பல அரசர்களும் பொதுமக்களும் வந்து

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

திருக்காமேஸ்வரரிடம் பிரார்த்தித்து, வெற்றி பெறுவதை இவன் விரும்பவில்லை. எனவே, கோயிலை முழுமையாக அடைத்து விட்டு, ஆலயத்தின் வடகிழக்குப் பகுதியில் ஒரு சுரங்கம் அமைத்து, அவன் மட்டும் ஆலயத்துக்குத் தனியாக வந்து திருக்காமேஸ்வர பெருமானை தரிசித்தான் என்று ஆலய தல வரலாறு சொல்கிறது.

இந்த ஆலயத்தின் சிறப்புச் சந்நிதியான ஸ்ரீஐஸ்வர்யமகாலட்சுமியின் புராணக் கதையைப் பார்ப்போமா?

வேறெங்கும் காண முடியாத வகையில் ஐஸ்வர்ய மகுடத்துடன் ஆலயத்தின் குபேர பாகத்தில் தவம் புரியும் கோலத்தில் அலைமகளான ஐஸ்வர்ய மகாலட்சுமி இங்கே பிரமாண்டமான திருமேனியுடன் அற்புதத்திருக்கோலத்தில் அருள் பாலித்து வருகிறாள்.

திருப்பாற்கடல் கடைந்த நிகழ்வின்போது அமுதம் பெறுவதில் தேவர்களுக்கும் அசுரர்களுக்கும் போட்டி வந்தது. அசுரர்களுக்கும் போகாமல் இருப்பதற்காக திருமாலானவர் மோகினி வடிவெடுத்து, தேவர்களுக்கு மட்டுமே அமுதத்தை வழங்கினார். அந்த வேளையில் மோகினியைப் பார்த்து சிவபெருமானே மோஹித்ததால் ஐயப்பன் அவதரித்தார். இந்த நிகழ்வை அறிந்த மகாவிஷ்ணுவின் தேவியான மகாலட்சுமி கோபம் கொண்டு வைகுந்தத்தை விட்டே வெளியேறினாள். தன் கோபத்துக்குக் காரணமான சிவனிடம் நியாயம் கேட்பதற்காக அவரை அழைத்தாள்.

ஆனால், ஈசன் அங்கே வராததால் பூலோகத்துக்கு வந்து வில்வாரண்ய சேஷத்திரம் எனப்படும் வெள்ளூருக்கு வந்து ஈசனைக் குறித்து தவம் செய்யலானாள். அப்போதும் இறைவன் அவளுக்குக் காட்சி தரவில்லை. எனவே, தன்னையே ஒரு வில்வமரமாக மாற்றிக் கொண்டு வில்வ மழையாகப் பொழிந்து ஈசனை பூஜை செய்தாள். அதன் பின் ஈசன் அவள் முன் தோன்றி, ஐயப்பன் அவதார நோக்கத்தைக் கூறி, கோபம் தணித்தார். சாந்தமானாள் தேவி. மகாவிஷ்ணுவுடன் லட்சுமிதேவியை இணைத்து வைத்தார். வில்வ மரமாகத் தோன்றி, தன்னை அர்ச்சித்த காரணத்தால் ஸ்ரீவத்ஸ முத்திரை பதித்த சிவலிங்கத்துடன் கூடிய ஐஸ்வர்ய மகுடத்தை லட்சுமிதேவிக்கு அளித்து, ஐஸ்வர்யத்துக்கு அதிபதி ஆக்கினார்.

வேறெங்கும் காண இயலாத வகையில் தட்சிண பாகம் என்று சொல்லக் கூடிய வடமேற்குப் பகுதியில் மகாலட்சுமி இருக்க வேண்டிய ஸ்தானத்தில் வில்வ மரமும், அதன் நிழலில் ஐஸ்வர்ய மகுடம் தரித்த மகாலட்சுமியையும் இங்கே தரிசிக்க முடிகிறது. அபயம், வரதம் கூடிய திருக்கரங்களோடு மேலிரு கரங்களில் தாமரை மலர் கொண்டு காட்சி தருகிறாள் இவள். ஈசனை பூஜிக்க மகாலட்சுமி பயன்படுத்திய தீர்த்தம் ஐஸ்வர்ய தீர்த்தம் என்றே அழைக்கப்படுகிறது. ஐஸ்வர்ய மகாலட்சுமிக்கு அபிஷேகம் செய்வதற்கு முன் வில்வ மரத்துக்கே முதலில் பூஜை செய்கிறார்கள். இவள் இங்கே குடி கொள்ளக் காரணமாக அமைந்ததே இந்த வில்வ விருட்சம்தானே!

மனைவியை விட்டுக் கணவன் பிரிந்திருக்க முடியுமா? மகாலட்சுமி பூலோகம் வந்து வில்வ மரத்தடியில் தவம் இருந்தபோது இடையனாக வந்து அவளைப் பத்திரமாக பார்த்துக் கொண்டாராம் திருமால். இதனால் வெள்ளூர் திருத்தலத்துக்கு "கோதண்டராமபுரம்" என்கிற பெயரும் உண்டு. "கோ" என்றால் பசு. "தண்ட" என்றால் குச்சி. ஆக, பசுக்களை குச்சி வைத்துக் கொண்டு மேய்த்த பெருமாளின் ஊர் என்ற பொருளில் இது வழங்கப்படுகிறது.

தங்கம் மற்றும் வெள்ளி நகைகள் செய்யும் தொழிலில் இருப்பவர்கள் வந்து வணங்குவதற்கு ஏற்ற திருக்கோயில் இது. தங்கம், வெள்ளி நகைகள் செய்வதால் தோஷம் ஏற்படுவதாக சாஸ்திரங்கள் சொல்கின்றன. அந்தத் தோஷங்களை அகற்றுவதற்கு இந்த ஆலயம் வந்து வழிபடலாம். குறிப்பாக ஐஸ்வர்ய மகாலட்சுமி அபிஷேகம் செய்யலாம். சுக்கிர தோஷம் இருப்பவர்களும் சுக்ரஹோரையில் வந்து ஐஸ்வர்ய மகாலட்சுமியை வணங்கலாம் என்கிறார் ஆலய அர்ச்சகர்.

ஆலயத்தைத் தரிசிப்போமா?

தெற்கு வாசல், கிழக்கு வாசல் என்று இரு நுழைவாயில்கள். பலீபடம், நந்திதேவர், திருமாளிகைப்பத்தியுடன் கூடிய பிராகாரம். கோஷ்டத்தில் ஸ்ரீதட்சிணாமூர்த்தி, மகாவிஷ்ணு, பிரம்மா, விஷ்ணு துர்கை ஆகிய தெய்வங்களை தரிசிக்கிறோம். ஸ்ரீவிநாயகர், வள்ளி-தெய்வானையுடன் கூடிய ஸ்ரீசுப்ரமண்யர், ஸ்ரீசண்டிகேஸ்வரர், நவக்கிரகம் போன்ற சந்நிதிகள் அமைந்துள்ளன. தல புராணத்தைச் சொல்லும் முசுகுந்தனின் சிவ வழிபாடு, ரதியும் மன்மதனும் இணைந்து ஈசனை வணங்கும் கோலம் போன்றவை சிற்பமாகக் காணப்படுகின்றன.

திருக்காமேஸ்வரர் பிரமாண்டமான லிங்கத்திருமேனி. வில்வாரண்யேஸ்வரர், ஐஸ்வர்யேஸ்வரர், லட்சுமிபுரீஸ்வரர், ஸ்ரீவத்ஸ அனுக்ரஹர் என்றெல்லாம் ஈசனுக்கு வேறு திருநாமங்கள் உண்டு. தவில், நாதஸ்வரம் போன்ற பஞ்சவாத்தியங்களோடு பூஜைகள் நடத்தப்படுகின்றன. எது குறைவாக இருந்தாலும், தன் பூஜையை இறைவன் நன்றாகவே நடத்திக் கொள்கிறார். நம் கண்களால் இந்த ஸ்வாமியைக் கண்ணாரக் கண்டு தரிசித்தாலே, அவரது அருள் நமக்குக் கிடைத்துவிடும் என்கிறார் அர்ச்சகர்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# தெல்லிப்பளை துர்க்கை அம்மன் ஆலயம்







## அமைவிடம்

யாழ்ப்பாணத்திலிருந்து வடக்கு நோக்கிக் காங்கேசன் துறைக்குச் செல்லும் நெடுங்சாலையிற் காங்கேசன் துறைக்குத் தெற்கில் ஏறத்தாழ ஐந்து கிலேமீற்றர் தொலைவிலே தெல்லிப்பளை என்னும் கிராமம் உள்ளது. அங்கமைந்துள்ள ஆலயம் துர்க்கை அம்மன் ஆலயமாகும். இது நெடுஞ்சாலையைப் பார்த்தவாறு அமைந்துள்ளது.

## மூர்த்தி விசேடம்

துர்க்கை அம்பாள் ஆலய ஆரம்பமும் மூர்த்தியின் சிறப்பும் பற்றி பின்வரும் கதை மூலம் அறிய முடிகின்றது. அக்கிராமத்திற் கதிர்காமர் என்னுஞ் சைவப் பெரியார் பதினெட்டாம் நூற்றாண்டில் வாழ்ந்து வந்தார். அவர் ஒருநாள் காங்கேசன் துறையிலிருந்து தோணியிற் புறப்பட்டுச் சென்று வேதாரணியத்தை அடைந்தார். பின்னர் அங்கிருந்து காசிக்குச் சென்றார். அங்கு அவருக்கு ஞானகுரு ஒருவர் வாய்க்கப்பெற்றார். அந்த ஞானகுரு, தேவி உபாசகர், தம் குருவின் வழியைப் பின்பற்றி, கதிர்காமரும் தேவி உபாசகராயினார். இந்தியாவிலுள்ள அறுபத்து நான்கு சத்தி பீடங்களுட் கீர்த்தி பெற்றது சொப்பனேஸ்வரி ஆலயம். துர்க்காதேவி சகல கலைகளுடனும் பொலிவுற்றுத் திகழ்கின்றாள். அங்கு வழிபாடு செய்யும் அடியார்கள் தாம்பாளங்களில் ஸ்ரீ சக்கரம் வைத்துப் பூசை செய்தல் அக்கோயிலுக்கான சிறப்பு அம்சமாகும். இக் கோயிலைத் தரிசிக்கும் பொருட்டு கதிர்காமரும் வேதாரணியத்தில் இருந்து இங்கு புறப்பட்டு வந்தார். இங்கு அவர் ஆலயமரபிற்கு அமைய ஸ்ரீசக்கரம் அமைத்துப் பூசை செய்து வந்தார்.

இவ்வாறாகப் பத்து ஆண்டுகள் கழிந்த பின்னர் அவர் தாம் தேவி பூசை செய்த ஸ்ரீ சக்கரத்தையும் அப்பூசையிற் பயன்படுத்திய தீர்த்தக் கெண்டியையும் எடுத்துக் கொண்டு இலங்கைக்குப் புறப்பட்டார். கடல் வழியாக வந்த கதிர்காமர் காங்கேசன் துறையில் இறங்கினார். பின்னர், கீரிமலைக்குச் சென்று தீர்த்தமாடினார். அப்புண்ணிய தலத்திலே தான் கொணர்ந்த ஸ்ரீ

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சக்கரத்துக்குப் பூசை செய்தார். இதுவே இலங்கையிற் செய்த முதலாவது ஸ்ரீ சக்கர பூசையாகும்.

பின்னர் அங்கிருந்து கால் நடையாக உழுகுடைப்பதி என்னும் இடத்தை அடைந்தார். மிகுந்த வெய்யிலும் உடல் தளர்ச்சியும் அவரை வாட்டின. எனவே, மேலும் நடக்க முடியாத காரணத்தினால் அவர் அங்கு நின்ற இலுப்பை மரம் ஒன்றின் நிழலிற் படுத்து உறங்கினார். அப்பொழுது துர்க்காதேவி கதிர்காமருக்குக் கனவிலே காட்சி கொடுத்து, இந்தியாவிலிருந்து கொணர்ந்த புனிதப் பொருள்களை அவ்விடத்திலேயே தாபித்து வழிபாடு செய்யுமாறு கூறி மறைந்தருளினாள். அம்மனின் திருவருட் காட்சியைப் பெற்ற மகிழ்ச்சியில் கதிர்காமர் அவ்வாறே செய்தார். அவ்வாறு அவர் ஸ்ரீ சக்கரம் தாபித்த புண்ணிய வழிபாட்டிடமே தெல்லிப்பளை துர்க்கை அம்மன் ஆலயம்.

இவ்வாலயம் எண்ணிறைந்த அடியார்கள் தரிசிக்கும் பெருங்கோயிலாகவும் அவர்கள் தம் கொடிய வினைகளை அறுத்து அன்னையின் அருட்கடாட்சத்தைப் பெறுகின்ற அம்மன் கோயிலாகவும் திகழ்கின்றது. இவ்வாலயத்தின் தலவிருட்சமாக இலுப்பை விளங்குகின்றது.

## தற்கால வரலாறு

துர்க்கையம்மன் ஆலயத்திற் கும்பாபிஷேகங்கள் பல நடை பெற்றுள்ளன. அவற்றுள் 1865 ஆம் ஆண்டு, 1981 ஆம் ஆண்டுகளில் நடைபெற்ற மகா கும்பாபிஷேகங்கள் குறிப்பிடத்தக்கவை.

## தீர்த்தச் சிறப்பு

வரட்சி மிகுந்த பாறாங்கற்கள் நிறைந்த இடத்தில் அகலமாகவும் ஆழமாகவும் நிலத்தை அகழ்ந்து இக்கோயிலுக்கான தீர்த்தக்கேணி அமைக்கப்பட்டது. இதற்கான திருப்பணிகள் 1981.11.14 ஆம் திகதி ஆரம்பிக்கப்பட்டு, ஓர் ஆண்டுக் காலத்துள் நிறைவேறியமை அம்பாளின் அற்புதச் செயல் எனலாம். இந்தக்கேணியில் முதன்முதலாக 1982.09.01 அன்று தீர்த்தோற்சவம் நடைபெற்றது. இத் தீர்த்தக் கேணி **"துர்க்கா புஷ்கரணி"** என வழங்கப்படுகின்றது.

## (உ) பூசைகளும் விழாக்களும்

அதிகாலை நாலரை மணிக்குத் தெல்லிப்பளை துர்க்கை ஆலயத்தில் திருப்பள்ளி எழுச்சியுடன் பூசைகள் ஆரம்பாகும்.

இக்கோயிலின் மகோற்சவம் 1968 ஆம் ஆண்டு தொடக்கம் ஆவணிமாதத்திலே திருவோண நட்சத்திரத்திலே தீர்த்த உற்சவம் நடைபெறுவதற்கு ஏற்ற வகையிலே பன்னிரண்டு தினங்கள் நடைபெறும். பௌர்ணமி, மகாசிவராத்திரி, மாசிமகம், மணவாளக் கோலம், நவராத்திரி, கார்த்திகைத் திருவிளக்கு முதலிய விசேட தினங்களில் விசேட பூசைகளும் விழாக்களும் நடைபெறும்.

பெண்கள் பலர் இக்கோயில்ற் கேதாரகௌரி நோன்பிலிருந்து பயனடைந்துள்ளனர். முக்கியமாகக் கன்னிப்பெண்கள் பலர் ஒன்பது வாரங்கள் ஆசாரமாய் இருந்து, செவ்வாய் நோன்பு



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அனுட்டித்து, பயனடைந்துள்ளமை குறிப்பிடத்தக்கது.

## (ஊ) சமூகப் பணிகள்

நம் சமயத்திற் சமூக சிந்தனை சீரான நிருவாகம், கூட்டு முயற்சி முதலியவற்றுக்கு எடுத்துக் காட்டாகத் துர்க்கை அம்பாள் தேவஸ்தானம் விளங்குகின்றது. இங்கு நடைபெறுகின்ற மிகச் சிறந்த சமூக சேவை துர்க்காபுரம் மகளிர் இல்லம் என்னும் நிறுவனமாகும். பெற்றோரை இழந்த, ஆதரவு அற்ற ஐந்து வயதுக்கு மேற்பட்ட பெண்பிள்ளைகளை ஆதரித்து, உணவூட்டி, கல்வி புகட்டிப் பராமரித்து வருகின்ற இந்த நிலையம் சிவத் தமிழ்ச்செல்வி பண்டிதை தங்கம்மா அப்பாக்குட்டி அவர்களால், 1982 இல் ஆரம்பிக்கப்பட்டது. அன்னபூரணி மண்டபம், நூலகம், அச்சகம் முதலிய பல்வேறு சேவைநிலையங்கள் இக்கோயிலின் நிருவாகத்தில் நடைபெறுகின்றன.



# திருமணப்பந்தலில் வாழை மரம் கட்டுவது ஏன்?

திருமணப்பந்தலில் மட்டுமல்லாது சுப காரியங்கள் நடக்கும் அனைத்து இடங்களிலும் வாழைமரம் கட்டுவது ஐதீகம். இது பற்றி சில சுவையான தகவல்கள்:

**தம்பதியர் தியாகம்**

முக்கனிகளுல் ஒன்றான வாழை எல்லா காலங்களிலும் கிடைக்கும் கனி. மற்ற இரண்டு கனிகளின் மரங்களை விட வாழை மரம் அதிக பயன்தரக்கூடியது. வாழை, தன்னை அழித்துக் கொண்டு பிறருக்கு கனி தரும். இதுபோல், தம்பதியர் ஒருவருக்கொருவர், தங்கள் உயிரையும் கொடுக்க தயாராக இருக்க வேண்டும் என்பதன் அடையாளமாக வாழை மரம் உள்ளது. குடும்ப விருத்திக்காகவும், வாழை மரத்தை கட்டுவதுண்டு.

**வாழையடி வாழை**

வாழையின் இலை, காய், பூ, பட்டை, தண்டு, நார் என அனைத்தும் பயன்தரக்கூடியது. சில பகுதிகள் மருந்தாகவும் பயன்தரக்கூடியது. ஏனைய மரங்களில் இருந்து ஒரு வகையில் வாழை வித்தியாசமானது. ஒரு வாழையை நட்டால் போதும் வாழையடி வாடையாக அதன் குலம் தலைக்கும்.

**பெரியோர் வாழ்த்து**

மனிதன் தலைமை பெறவேண்டும், தன்னைச் சார்ந்திருப்பவர்களுக்கு பலவகைகளிலும் பயன்தரவேண்டும் என்றும் அவன் குலம் வழி வழியாக தழைக்கவும் என்பதை உணர்த்துவதற்காகத்தான் சுபகாரியப்பந்தலில் வாழை மரம் கட்டுகின்றனர். மணமக்களை ஆல் போல் தழைத்து அருகு போல் வேரோட வேண்டும் என்று வாழ்த்தும் நெஞ்சத்தின் புலப்பாடாகத்தான் வாழைமரம் கட்டுவதை கருத வேண்டும்.

*செல்வி. சிவப்ரியா சந்திரசேகரன்*
*கிருளப்பனை*

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



சகல செல்வங்களும் தரும்

# ஸ்ரீ மஹாலக்ஷ்மி



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பராசக்தியின் ஒரு அம்சமே
# ஸ்ரீ மஹாலக்ஷ்மி



## சக்தி வடிவங்கள் அனைத்திற்குமானது
## ஸ்ரீ லலிதா சஹஸ்ர நாமம்

ஸ்ரீ சக்ர மஹாமேருவின் மையத்தில் வீற்றிருந்து சித்தர்களுக்கும், முனி கணங்களுக்கும், சாக்த தந்தர உபாசகர்களுக்கும் அருளும் ஸ்ரீபாலா (வாலை) எனும் ஸ்ரீ லலிதாவிற்கு உரியதே இந்த லலிதா சஹஸ்ரநாமம். இது இந்து சமயத்தினுள் கூறப்படும் எல்லா சக்தி வடிவங்களுக்கும் பொதுவானது. இதனை சைவர்கள் மட்டுமே பயன் படுத்தும் வழக்கம் உள்ளது என்றாலும், ஆறு சமய வழிபாட்டாளர்களுக்கும் இது பொதுவானது என்பதை உணர்ந்து இந்துமதத்தின் அனைத்து பிரிவினரும் ஸ்ரீ லலிதா சஹஸ்ரநாமம் பாராயணம் செய்து பயன்பெற வேண்டும். இதனுள் செல்வம் அருளும் ஸ்ரீமஹாலக்ஷ்மியும் இருந்து அருள் புரிகிறாள் என்பது குறிப்பிடத்தக்கது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**ஏகம் ஸத் விப்ரா பஹுதா வதந்தி** என்ற வேதவாக்கியப்படி **மெய்பொருள் ஆகிய இறைவன் ஒருவனே. ஞானிகள் அவனைப் பல பெயர் சொல்லி அழைக்கிறார்கள்.** ஒரே பொன் பல நகைகளாகிறது, ஒரே மண் பல பாண்டங்களாகின்றன. அதுபோல் ஒரே இறைவன் மாயையின் துணைகொண்டு பல நாம ரூப பேதங்கள் உடையவராக இருக்கிறார்.

இயற்கையின் நியதிப்படி இந்த உலக சிருஷ்டியில் கூட ஒன்றே பலவாய் விரிகின்றது.

அதுபோலவே ஒரு சக்தியே இவ்வுலகில் பல சக்திகளாகப் பிரித்துக் கூறப்படுகின்றன. ஆம்! பராசக்தி என்ற பரதேவதையே இவ்வுலகின் மூலசக்தி. அவளே பற்பல சக்தி வடிவங்களாகப் பிரித்து வழிப்படப்படுகிறாள். அப்படிப் பட்ட ஒரு சக்திதான் நாம் வழிபாடு செய்யும் **ஸ்ரீ மஹாலக்ஷ்மி** என்னும் இந்த **திருமகள்** வடிவமும், அது எவ்வாறு என்பதை இங்கே பார்க்கலாம்.

நாம் நவராத்திரி விழா கொண்டாடுகிறோம். அதில் (3+3+3=9 என வரும்) 9 நாட்களில் வரும் 9 இரவுகளிலும் சரஸ்வதியையும், லக்ஷ்மியையும், துர்க்காதேவியையும் ஒன்றாகவே வழிபடுகிறோம். இது எதனால்? ஒருசக்தியின் பல பிரிவுகளே இது என்பதால் தான்! ஒரு மூல தெய்வத்தை 2 ஆகச் சொன்னாலும், 3 ஆகச் சொன்னாலும், 8, 16, 32, 108, 1008 என்லு பல்வேறு நாமங்கள் இட்டு அழைத்து அர்ச்சித்தாலும் அவையெல்லாம் ஒன்றே என்ற மெய் ஞானத்திலிருந்து நாம் விலகிவிடக்கூடாது என்பதில் உறுதியாக இருக்கவேண்டும்.

அதனால்தான் நாம் கொலுவைக்கும் போது கூட கீழிருந்து மேலாக ஒவ்வொரு படியிலும் ஒரு அறிவு முதல் 58 அறிவு வரையான உயிரினங்களை வைத்து, அதன்பிறகு மனிதர்கள், மகரிஷிகள், தேவர்கள் என்றுவைத்து, மும்மூர்த்திகள் மற்றும் மூன்று சக்திகளை வைத்து, கடைசிமேல் படியில் பரதேவதையான **ஸ்ரீ பராசக்தியை** வைத்து ஒரு பெரும் **ஜோதி விளக்கை** ஏற்றிவைக்கிறோம்.

நாம் ஸ்ரீபாலா (வாலை) என்ற **ஸ்ரீ லலிதா பரமேஸ்வரியை** அர்ச்சிக்கப் பயன்படும் **ஸ்ரீ லலிதாசஹஸ்ர** நாமத்தில் கூட ஒரு சக்தியின் பல பிரிவுகள் குறிப்பிடப்படுகின்றன அவற்றையும் இதற்கு ஆதாரமாகக் கொள்ளலாம். அதில் வரும் பதினொரு முக்கியமான வரிகளை இங்கே காணலாம்.

**ஸ்ருஷ்டிகர்த்ரீ** (264) படைத்தல் தொழில் புரிபவர்.

**ப்ரம்மரூபிணீ** (265) பிரம்மனின் வடிவானவள்.

**கோப்த்ரீ** (266) காத்தல் தொழில் புரிபவள்

**கோவிந்தரூபிணீ** (267) கோவிந்தனின் வடிவானவள்

**ஸம்ஹாரிணீ** (268) தீமைகளை அழிப்பாள்

**ருத்ரரூபா** (269) ருத்திரனின் வடிவானவள்

**திரோதானகரீ** (270) மறைத்தல் தொழில் புரிபவள்

**ஈஸ்வரி** (271) ஈஸ்வரன் வடிவானவள்

**அனுக்கிரஹா** (273) அருள்பவள்

**ஸதாசிவா** (272) ஸதாசிவனின் வடிவானவள்

**பஞ்சக் கிருத்திய** பராயணா (274)

ஐந்து தொழில்கள் ஆற்றுபவள்.

இவ்வாறு ஒரே அம்பிகை ஐந்தொழில் ஆற்றும் அமரர்கள் வடிவாக பலவடிவங்கள் தாங்கி வியாபித்திருப்பதை இந்த சகஸ்ரநாமம் மூலமாக நாம் உணரலாம். இதில் வரும் **கோப்த்ரீ, கோவிந்த ரூபிணீ** எனும் சக்திதான் நமது மஹாலக்ஷ்மி தேவி.

மேலும் லலிதா சஹஸ்ர நாமத்தின் 210ஆவது நாமம் மஹாலக்ஷ்மீ என்பதேயாகும். மஹாராஷ்டிரத்தில் **கரவீரம்** என்று போற்றப்படும் கோலாப்பூரில் உள்ள தேவி **ஸ்ரீ மஹாலக்ஷ்மி** என்றே போற்றப்படுகிறாள். அதுமட்டுமல்ல வைஷ்ணவ திவ்ய தேசங்கள் பலவற்றில் மஹாலக்ஷ்மி இருந்தாலும் அவள் நேரிடையாக மஹாலக்ஷ்மி என்ற நாமத்தால் குறிக்கப்படும் இடங்கள் இரண்டு மட்டுமே. அவை 104 ஆவது திவ்யதேசமான **திருக்கோட்டியூர்** 108 ஆவது திருத்தலமான **திருப்பரமபதம்** (இது நிலவுலகில் நாம் நாம் கண்ணால் காணமுடியாத திருப்பதியாகும்)

அதுமட்டுமின்றி லக்ஷ்மி அஷ்டோத்திரம் எண் 106ல் "ஓம் பிரம்ம விஷ்ணு சிவாத்மிகாயை நமோ நம" என வருகிறது. அந்த விசேஷவரிகளாலும் நாம் சக்தியின் பலவிரிவுத் தத்துவத்தை இங்கே உணரலாம். இந்த காரணங்களால்தான் சரஸ்வதி அஷ்டோத்தரத்தில் லக்ஷ்மியைப்பற்றியும், லக்ஷ்மி அஷ்டோத்தரத்தில் சரஸ்வதியைப் பற்றியும், சக்தி அர்ச்சனையில் லக்ஷ்மி சரஸ்வதி என இரண்டு வடிவங்களைப் பற்றியும் சில வரிகள் வருகின்றன.

கல்விக்கு தனி சக்தி வடிவான சரஸ்வதி இருக்க, இங்கே **ஸ்ரீ வித்யாலக்ஷ்மி** என்ற லக்ஷ்மி வடிவம் குறிப்பிடப்படுவதும், வீரத்திற்கு தனி சக்திவடிவமான **காளி** இருக்க, இங்கே **ஸ்ரீ வீரலக்ஷ்மி** என்ற ஒரு திருமகள் வடிவம் குறிப்பிடப்படுவதும் மேற்கண்ட இந்த தத்துவங்களால் தான் என்பதை அனைவரும் உணரவேண்டும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

-தொடரும்

# கண்ணப்ப நாயனார்



சிவபெருமான் வாயுலிங்கமாக வியாபித்து அருள் பாலித்துக் கொண்டிருக்கும் புண்ணிய சேஷ்த்திரம் காள ஹஸ்தி எனப்படும் திருக்காளத்தி. இந்தத்தலத்தில் சிவபெருமான் நிகழ்த்திய அற்புதங்களில் ஒன்றினுள் அடங்குவதுதான் கண்ணப்ப நாயனார் சரித்திரம்.

ஸ்வர்ணமுகி ஆற்றின் கரையில் இருந்த அடர்ந்த காட்டில் பன்னெடுங்கால முன்பு திண்ணனார் என்ற வேடன் ஒருவன் வாழ்ந்து வந்தான். குலத்தால் வேடன் என்றாலும் சிவபெருமானிடத்து பக்தியும் ஈடுபாடும் கொண்டிருந்தான் திண்ணன்.

ஒரு நாள் வழக்கம் போல் வேட்டைக்குச் சென்ற திண்ணனார், அன்று பகல் முழுவதும் காட்டில் அலைந்து வேட்டையாடுவதற்கு எந்த மிருகமும் கிடைக்காமல் களைத்துப் போனான். பசியும் தாகமும் அவனை வாட்டியது. மாலை நேரம் அது. அப்போது திடீரென்று, தூரத்தில் ஒரு காட்டுபன்றி தென்பட்டது. அதை வேட்டையாட திண்ணன் குறி வைத்தான். பன்றி சுவர்ணமுகி கரையோரமாக ஓட ஆரம்பித்தது. திண்ணன் அதன் பின்னால் ஓடினான். ஆற்றின் கரையில் ஓர் இடத்தில் பன்றி காணாமல் போயிற்று. அங்கு திண்ணன் கண்டது ஒரு சிவலிங்கம்தான். அதனை அவன் சிவலிங்கமாக பார்க்காமல் சிவபெருமானாகவே பார்த்தான்.

இறைவா! நீ இப்படி கூரை கூட இல்லாமல் வெயிலில் காய்ந்து மழையில் நனைந்து அவதிப்படுகிறாயே? பசித்தால் உனக்கு இந்த வனத்தில் யார் உணவு தருவார்கள்? நல்ல வேளை நான் இங்கு வந்து சேர்ந்தேன் என்று கூறி அருகிலுள்ள மரங்களின் கிளைகளை வெட்டிலிங்கத்திற்கு மேல் கூரை போட்டான். வனத்தின் உள்ளே சென்று இலைகளையும் மலர்களையும் பறித்து சிவனுக்கு ஆடையாக அணிவித்தான். அப்போது எதிர்பட்ட ஒரு பறவையை அடித்து நெருப்பில் சுட்டு அதன் மாமிசத்தை உணவாக சமைத்தான். ஒரு கையில், தான் வைத்திருந்த மாமிசத்தைக் கோர்த்து மற்றொரு கையில் மலர்களையும் இலை தழைகளையும் எடுத்துக் கொண்டு சிவனுக்கு அபிஷேகத்திற்கான நீரை தன் வாயிலும் வைத்துக் கொண்டான்.

பெற்ற தாய் ஒருத்தி தன் பிள்ளையைக் குளிப்பாட்டி ஆடையுடுத்தி பாலூட்டி, அரவணைப்பதை போல், பக்தியும் அன்பும் பெருக சிவனுக்கு தன் வாயிலிருந்து உமிழ்ந்து, (நீரை) அபிஷேகம் செய்து, காட்டு மலர்களைச் சூட்டி, மாமிசத்தை நிவேதனமாகப் படைத்தான். அன்பே சிவமல்லவா? ஆகவே கொடுக்கின்ற பொருளைப் பற்றிக் கவலைப்படாமல் கொடுக்கின்றவனின் உள்ளத்தில் மேலூன்றி நிற்கும் அன்பிற்கும் பக்திக்கும் கட்டுப்பட்டு அதனை ஏற்றுக் கொண்டான் சிவபெருமான.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

எந்தவிதமான ஆச்சாரங்களையும், பூசை முறைகளையும் அறிந்திடாத திண்ணன் தன் மனதுக்கு சரி என்று பட்ட முறையில் சிவ ஆராதனை செய்து அங்கிருந்து புறப்பட்டான்.

சிவபெருமான் எழுந்தருளிய இவ்வனத்திற்கு அருகிலுள்ள கிராமம் ஒன்றில் சிவகோசரியார் என்ற அந்தணர் ஒருவர் வாழ்ந்து வந்தார். அவர் தினமும் இவ்விடத்திற்கு அதிகாலை வந்து புனித நீரால் சிவனுக்கு அபிஷேகம் செய்து மந்திரம் ஓதி வில்வ தளங்களால் அர்ச்சித்து, சுத்தமான அன்னத்தை நிவேதனம் செய்து சாஸ்திர முறைப்படி பூசை செய்வது வழக்கம். அன்றைய தினம் பூசைக்காக வந்த சிவகோசரியார் சிவலிங்கம் இருந்த நிலை கண்டு அதிர்ச்சியும் திகைப்பும் அடைந்தார். ஏதோ கொடிய வனவிலங்குகள் மாமிசத் துண்டை இழுத்து வந்து அங்கு போட்டிருக்குமோ? என ஐயுற்றார். ஆனால் லிங்கத்தைச் சுற்றி அமைக்கப்பட்டிருந்த பந்தலையும் அங்கு போடப்பட்டிருந்த இலைகளையும் தழைகளையும் பார்த்து, இது யாரோ காட்டுமிராண்டி செய்த அபசாரம் என ஊகித்தார். அவனுக்காக இறைவனிடம் மன்னிப்பு கோரினார். மீண்டும் அவ்விடத்தை சுத்தம் செய்து அபிஷேக ஆராதனைகள் செய்து முடித்துத் திரும்பினார்.

மாலை வெயில் மங்க ஆரம்பித்தது. இருள் சூழும் வேளையில் மீண்டும் திண்ணன் முந்தைய நாளைப் போல் தனது ஆராதனைக்கான பொருள்களுடன் சிவபெருமானிடம் வந்து சேர்ந்தார். தான் அமைத்த கூரையும், சிவமனம் சாத்திய ஆடையும் அங்கு இல்லாதது கண்டு மனம் குமுறினார். எவனோ ஒரு பாவி சிவனுக்கு தீங்கு செய்ததாக எண்ணி அவனை வைதான். முந்தைய மாலையைப் போலவே சிவனுக்கு அபிஷேகம் செய்து, அலங்காரம் செய்து, தான் கொண்டு வந்த மாமிசத்தை அமுதாக படைத்தான்.

இவ்வாறு பகலில் சிவகோசரியாரும் மாலையில் திண்ணனாரும் காளத்திநாதனுக்கு ஆறு நாட்கள் ஆராதனை செய்தனர். ஆறாம் நாள் சிவகோசரியார் மனம் உடைந்து போய், இறைவனிடம் முறையிட்டார். இறைவா! இது என்ன கொடுமை! யார் செய்யும் தீவினை இது? இதை நான் தெரிந்து கொள்ளாவிடில் இவ்விடத்திலேயே உயிர் மாய்த்துக் கொள்வேன் என்று கதறினார். அப்போது இறைவனின் அருள்வாக்கு ஒலித்தது. "சிவகோசரியாரே! மாலை வரை இங்கு மறைந்திருந்து நடப்பதைக் கவனி! அப்போது உண்மை விளங்கும்" சிவகோசரியாரும் இறைவன் இட்ட கட்டளைப்படியே அங்கு மறைந்து கொண்டார்.

கதிரவன் மறைந்தவுடன் திண்ணன் வழக்கம் போல் வந்து பூசை செய்தான். திடீரென லிங்கத்தின் கண்களிலிருந்து ரத்தம் வடிவதைக் கண்டான் திண்ணன். அதிர்ச்சியும் மனக்கலக்கமும் அடைந்தான். சிவலிங்கத்தின் கண்ணிலிருந்து வடியும் ரத்தத்தை துடைத்து பார்த்தான். அது நிற்கவில்லை. அருகில் வளர்ந்திருந்த பச்சிலைகளையும் மூலிகைகளையும் எடுத்து கசக்கி ரத்தம் வடியும் லிங்கத்தின் கண்களில் தடவிப் பார்த்தான். அப்போதும் குருதி நிற்கவில்லை. திண்ணன் பதறினான். கண்ணீர் வடித்தான். ஓவெனக் கதறினான். திடீரென அவன் மனதில் ஓர் எண்ணம் தோன்றியது. ஊனுக்கு ஊன் கொடுத் ஊனம் நீங்கும் என்பதே அவ்வெண்ணம். குருதி வடியும் சிவனின் கண்ணில் தன் கண்ணை எடுத்து அப்ப உறுதி கொண்டான் திண்ணன். சிறிதும் தயக்கமின்றி தன் கண் ஒன்றை அம்பினால் தோண்டி, சிவபெருமானின் கண்ணில் அப்பினான். குருதி வடிவது நின்றது. ஆனால் திண்ணன் கண்ணில் குருதி வடிந்து கொண்டிருந்தது. வலியும் வேதனையும் அவனுக்குத் தெரியவில்லை. இறைவனின் நோய் தீர்க்க பெருமகிழ்ச்சியில் அவன் ஆனந்தக் கூத்தாடினான். ஆனால் அவன் மகிழ்ச்சி அதிக நேரம் நீடிக்கவில்லை. திண்ணனாரின் தீவிர பக்தியை உலகுக்கு எடுத்துக் காட்ட எண்ணிய இறைவனின் இரண்டாவது கண்ணில் குருதி வடிய ஆரம்பித்தது. திண்ணன் மீண்டும் பதறினான். இறைவா! இது என்ன வேதனை உனக்கு? என்று துடித்தான். சற்றும் சிந்தியாமல் தன் அடுத்த கண்ணையும் எடுத்து இறைவனுக்கு அப்ப முன் வந்தான். தன் இரண்டாவது கண்ணையும் எடுத்து விட்டால் அதை எந்த இடத்தில் அப்புவது என்று தெரியாமல் போய்விடுமே. என்பதற்காக தன் கண்ணைத் தோண்டுவதற்கு முன்பு, இறைவனின் கண்ணிருக்கும் இடத்தை அடையாளம் வைத்துக் கொள்வதற்காக, தன் கால்களால் லிங்கத்தைத் தொட்டுக்கொண்டு தன் கண்ணைத்ததோண்ட ஆயத்தமாகும்போது, இறைவன் பிரத்யட்சமாகி நில் கண்ணை அப்ப என்று பொருள் பட "நில்லு கண்ணப்ப" என்று கூறி திண்ணனை தடுத்து அருள் பாலித்தான்.

இத்தனையையும் மறைந்து நின்று பார்த்துக் கொண்டிருந்த அந்தணர் சிவகோசாரியார் மெய் சிலிர்க்க ஓடி வந்து இறைவனின் திருவடிகளில் விழுந்து வணங்கி நின்றார். திண்ணனாரும் தனது ஊனமுற்ற கண்ணை மீண்டும் பெற்று பூரண பொலிவோடு இறைவனை தரிசித்தார். அப்போது சிவபெருமான் "சிவகோசரியாரே! ஆகம தர்மப்படி வைதீக முறை வழுவாது நீவிர் செய்த ஆராதனை சிவபூசையாகும். அதனையும் நாம் அன்புடன் ஏற்றோம். பூசை முறைகள் எதுவும் தெரியாமல் அன்பு ஒன்றே திண்ணன் செய்த ஆராதனை சிவசேவையாகும். அதிலும் நாம் மகிழ்ச்சி அடைந்தோம். எனக்காக தன் கண்ணையே எடுத்து அப்பிய இவன் கண்ணப்பன் என்று வழங்கப்படுவான். உங்கள் இருவராலும் இத்தலம் பெருமை பெற்றது" என்று கூறி மறைந்தார்.

இவ்வாறு வேடன் திண்ணன் கண்ணப்பநாயனராகி அறுபத்தி மூவரில் ஒருவராய் இருந்து அருள் பாலித்து வருகிறார்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# வள்ளுவர் – வாசுகி



புகழ்பெற்ற திருக்குறளை எழுதிய திருவள்ளுவர் இரண்டாயிரம் ஆண்டுகளுக்கு முன்னே அவதரித்தார். அவர் பிறந்து இளமையில் வளர்ந்த இடம் திருமயிலாப்பூர். கபாலீச்சுரம் ஆலயத்துக்கு வடக்கே கோயிலுக்கு அருகில் திருவள்ளுவர் ஆலயம் இன்றும் விளங்குகிறது. திருக்குறள் ஆசிரியரான திருவள்ளுவரின் விக்கிரகம் அங்கே கம்பீரமான உருவத்துடன் காட்சியளிக்கிறது. அவரது ஆலயத்துக்கு வடக்கே அவருடைய பத்தினி வாசுகி அம்மையாருக்கும் ஒரு கோயில் இருக்கிறது.

வாசுகி மார்க்கசகாயர் என்றவரின் குமாரி. அவருடைய குணநலன்களை எல்லாம் கேள்வியுற்ற திருவள்ளுவர் அவரை மணக்க இசைந்ததற்கு முன் சிறிதளவு, மணலை வாசுகியிடம் கொடுத்தார். அதனைச் சமைத்துக் கொண்டு வரச் சொன்னார். அவரையே தம் கணவராக மனத்தில் வரித்த வாசுகி, அவருடைய திருவடிகளைத் தியானித்துக் கொண்டார். அடுப்பு மூட்டி, உலை வைத்து. மணலைக் கொட்டினார். அது சோறாகியது! அதனைக் கொண்டு வள்ளுவரிடம் கொடுத்தார்.

ஒரு முறை ஒருவர் வள்ளுவரிடம், இல்லறம் துறவறம் என்ற இரண்டனுள் எது சிறந்தது? என்று கேட்டார். அப்பொழுது வாசுகி தம் வீட்டுக் கிணற்றில் தண்ணீர் மொண்டு கொண்டிருந்தார். கயிற்றில் கட்டிய குடம் முழுமையும் வெளிவரவில்லை. அவரிடம் ஏதோ ஏவல் இடுவதற்காகக் கூப்பிடுவது போல் திருவள்ளுவர் வாசுகி! என்று கூப்பிட்டார். அந்தப் பெயரைக் கேட்டவுடன், கயிற்றை அப்படியே விட்டு வாசுகி கணவரிடம் வந்தார். நீருடன் குடம் அந்தரத்தில் நின்றது! இந்த வரலாற்றைத்தான் ஸ்ரீ சங்கர மடத்துச் சித்திரச் சிலை தெரிவிக்கிறது. "சொற் கடவாத பத்தினி வாய்ப்பானால் இல்லறமே சிறந்தது "என்பதைச் சொல்லாமற் சொல்லி ஆசிரியர் உபதேசித்தார் என்று வந்தவன் உணர்ந்து, தன் சந்தேகம் தீர்ந்து அவரை வணங்கி விடை பெற்றான்.

வள்ளுவர் தம் வருவாய்க்காக நெசவுத் தொழிலைக் கைக்கொண்டு வாழ்ந்தார். ஒரு நாள் அவர் நெய்து கொண்டிருக்கையில் ஒரு பொருள் கீழே விழ, அவர் மனைவியைக் கூப்பிட்டு விளக்குக் கொண்டு வரச் சொன்னார். "பட்டப் பகலில் இவர் ஏன் இப்படிச் சொல்லுகிறார்?" என்று எண்ணி, வாசுகி கையும் விளக்குமாக அங்கே தோன்றினார்.

மற்றொரு நாள் தாம் பழையது உண்டு கொண்டிருந்தபோது, விசிறி கொண்டு சோற்றை விசிறு என்று திருவள்ளுவர் கட்டளையிட, அவ்வாறு வாசுகி செய்ய, ஈரச் சோற்றிலிருந்து புகை கிளம்பியது.

இவ்வாறு கணவன் விரும்புவது எதுவானாலும் அதை அவ்வாறு செய்வதே பதிவரதையின் கடமை என்ற பாரத நாட்டுப் பழைய பண்பை வாசுகி கடைபிடித்ததனால் தமிழ்நாட்டு அருந்ததியாக விளங்கினார். "தெய்வம் தொழா அள் கொழுநன் தொழுதெழுவாள், பெய்யெனப் பெய்யும் மழை" என்ற மறையின்படி தெய்வங்களையும் ஏவல் கொள்ளும் ஆற்றல் வாசுகிக்கு உண்டாயிற்று.

ஒரு நாள் கொங்கணன் என்ற தவசி அவர் வீட்டிற்கு முன் வந்து பிட்சை கேட்டான். அவன் அருகில் இருந்த காட்டில் தவம் செய்து மிகுந்த ஆற்றல் படைத்திருந்தான். ஒரு நாள் ஒரு கொக்கு அறியாமல் அவன் மீது எச்சிலைக் கழிக்க அவன் மிகுந்த கோபத்துடன் அதை வெறித்துப் பார்க்க, அது உடனே சாம்பலாயிற்று. இந்தச் சம்பவம், அவன் தனக்குத் தவபலம் அதிகம் ஏறி விட்டது என்ற கர்வத்தை உண்டாக்கியிருந்தது.

அவன் பிச்சை கேட்டபோது வாசுகி பர்த்ரு சுச்ருஷையில் ஈடுபட்டிருந்தார். உள்ளிருந்தபடியே அவ்வம்மை, சற்றுப் பொறுத்திரும்: அன்னத்துடன் வருகிறேன் என்று சொன்னார். முனிவனுக்குப் பொறுமை இல்லை.

மிகுந்த கோபத்துடன் அவன் நின்று கொண்டிருந்தான். வாசுகி தம் கடமையைச் சடுதியில் முடித்துவிட்டு, ஒரு தட்டில் சூடான அன்னத்துடன் வாசலில் வந்தார். அவரை நோக்கியவுடன் அவன் சினம் தலைக்கேறி,

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



சோற்றை ஏற்றுக் கொண்டபடியே அவரை முறைத்துப் பார்த்தான். அதைக் கண்ட அம்மை தம் சக்தியால் அவன் உள்ளத்தையும், அவன் முன்னொரு நாள் நிகழ்த்திய செயலையும் உணர்ந்து, "கொக்கெனவே நினைத்தனையோ, கொங்கணவா?" என்று வினவ, கொங்கணன் தன் கர்வத்தை இழந்து அவர் அடிகளில் விழுந்து மன்னிப்புக் கேட்டான். அவனுக்குச் சில நல்லுபதேசங்களைச் செய்து வாசுகி அவனை அனுப்பினார்.

இப்படிக் கொண்ட கணவனின் குறிப்பறிந்து நடப்பதே கற்பின் இலக்கணம் என்பதைத் தம் செய்கையாலும், ஒழுக்கத்தாலும் உலகுக்குக் காட்டிய வாசுகி என்றென்றும் போற்றப் பெறுவதற்கு உரியவர்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# SMART MOTOR
## Driving School

அனைவருக்கும்
புத்தாண்டு மற்றும் தைப்பொங்கல்
நல்வாழ்த்துக்கள்!

இரு பாலார்களுக்குமான சாரதி பயிற்சி நிலையம்

***Highly Qualified, Male and Female Trainers, Special Classes for Highway Rules and Regulations.***




*257-1/1, first Floor, (Adjoining Wellawatte Vegetable Market)*
*Galle Road, Wellawatte.*
*Tele : 011 4 999593 / Mobile : 078 5 228101, 075 5 627475*





வெளிநாடுகளுக்கு
விரைவாக பொதிகள்
அனுப்பும் சேவைக்கு...
இன்றே நாடுங்கள்!

**GTV Enterprises (Pvt) Ltd.**

18/3, Dr. E.A.Cooray Mawatha, Colombo 06.
Tel: **011 4654444 / 011 2360926**



ஸ்ரீ பைரவர்

# அருள் வாக்கு

நிழலாய் தொடரும் துன்பங்கள் எவை?
அதன் தீர்வுகள் என்ன? கேட்டு அறிந்து கொள்ளுங்கள்

**077 055 6069**



# Chinese Gift Palace



***Dealers in Handicraft, Brass ware, Gift Items, Statues, Curios etc.***

**78, Galle Road, Wellawatte.**
**Tel: 011-2594931 Emaol: rogerhsu@sltnet.lk**


Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org





# சூரிய வழிபாடு

சீலமாய் வாழ சீர் அருள் புரியும்
ஞாலம் புகழும் ஞாயிறே போற்றி
சூரியா போற்றி சுதந்திரா போற்றி
வீரியா போற்றி வினைகள் களைவாய்

-சூரிய துதி

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

### சூரியன் மேஷராசியில் நுழையும் தினமே

# புதுவருடப் பிறப்பு தினமாகும்!

பன்னிரு இராசிகளில் சூரியன் பன்னிரு வடிவங்களில் காட்சி அளிக்கிறார்.

| | | | |
|---|---|---|---|
| மீனம்<br>விஷ்ணு | மேஷம்<br>இந்திரன் | ரிஷபம்<br>தாதா | மிதுனம்<br>பகன் |
| கும்பம்<br>ஸவிதா | **12 சூரியர்கள்<br>இராசிகளில்<br>12 வடிவில்** | | கடகம்<br>மித்திரன் |
| மகரம்<br>த்வஷ்டா | | | சிம்மம்<br>சகாயன் |
| தனுசு<br>விவஸ்வான | விருச்சிகம்<br>அர்ச்சிஸ் | துலாம்<br>அர்யமா | கன்னி<br>வருணன் |

சூரியனின் இராசி சிம்மம். இதுவே சூரியனின் மூலத் திரிகோண ஆட்சிவீடாகும். மேஷம் உச்ச வீடாகும். துலாம் நீச்ச வீடாகும். சூரியனுக்குரிய லக்னம் சிம்மம்!!

சூரியனின் மூன்று நட்சத்திரங்கள் சூரிய மஹாதிசை மொத்தம் ஆறு வருடங்கள் 1) கிருத்திகை, 2)உத்திரம், 3) உத்திராடம்

சூரியனுக்குரிய கிழமை "ஞாயிறு" சூரியனின் திதி "ஸப்தமி" ஆகும்.

## சூரியனின் நாம யோகங்கள்:

| நாமயோகம் | யோகதாரை | யோகி |
|---|---|---|
| சோபனம் | உத்திரம் | சூரியன் |
| ஹர்ஸனம் | உத்திராடம் | சூரியன் |
| சுபநாமயோகம் | கிருத்திகை | சூரியன் |

சூரியனின் மேற்கண்ட மூன்று நாமயோகங்களில் பிறந்தவருக்கு சூரியன் யோகத்தைச் செய்வார். சூரியனுக்குரிய கரணம் "கௌலவம்," மற்றும் "தைதுலம்" ஆகும். பஞ்சாங்க கணிதம் சூரியனை மையமாகக் கொண்டே கணிக்கப்படுகிறது.

### பஞ்சஅங்கங்கள் ஸ்ரீ பஞ்சாங்கம்:

01. கிழமை
02. திதி
03. நட்சத்திரம்
04. யோகம்
05. கரணம்

### சூரியனின் பன்னிரெண்டு நாமங்கள்

- மித்ராய நமஹா
- ரவயே நமஹா
- சூர்யாய நமஹா
- பானவே நமஹா
- சகாய நமஹா
- பூஷ்ணே நமஹா
- ஹிரண்யகர்ப்பாய நமஹா
- மரீசயே நமஹா
- ஆதித்யாய நமஹா
- ஸவித்ரே நமஹா
- அர்க்காய நமஹா
- பாஸ்கராய நமஹா



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மேற்கண்ட ஒவ்வொரு நாமத்தின் முதலில் "ஓம்" என்ற பிரணவத்தை சேர்த்துக் கொள்ளவும்.

## 12. நாமங்களின் பொருள்



மித்ர = எல்லோருக்கும் நண்பன்
ரவி = எல்லோராலும் புகழப்படுபவன்
சூர்ய = எல்லாவற்றையும் நிர்வாகம் செய்வோன்
பானு = அழகையும், வசீகரத்தையும் அளிப்பவன்
ககா = ஆதரவு அளிப்பவன்
பூஷா = எல்லாவற்றையும் வளர்ப்பவன்
ஹிரண்யகர்ப்ப = வீரியத்தையும், ஆண்மையையும் பலப்படுத்துபவன்
மரீசி = எல்லா நோய்களையும் நிவர்த்தி செய்பவன்
ஆதித்ய = எல்லாவற்றுக்கும் மூலமானவன்
ஸவித்ரே = படைக்கும் சக்தியுடையோன்
அர்க்காய = போற்றதலுக்கு உரியவன்
பாஸ்கராய = ஜோதி வடிவானவன்

மேற்கண்ட பொருள் விளக்கத்திலிருந்து நாம் சூரியனின் தன்மைகளைப் புரிந்துகொள்ளலாம்!
சூரியனின் பன்னிரெண்டு நாமங்களைச் சொல்லி அவரை வணங்கினால்
சூரியனின் அருளாசி, ஆற்றல் கிட்டும்!!

## சூரியனுக்கு மிகவும் உகந்தது

# சூரிய நமஸ்காரம்

அதிகாலையில் செய்யும் சூரிய நமஸ்காரத்தினால் சூரியனின் ஜீவசக்தி நிறைந்த கிரணங்கள் உடம்பில் பரவி, விஷ வாயுக்களை நீக்கி ரத்தவோட்டத்தை ஊக்கி உடலுக்குப் புத்துணர்ச்சியை அளிக்கிறது. கண் தொடர்பான ரோகங்களைப் போக்குவதில் சூரிய கிரணங்களுக்குச் சக்தி உண்டு என்பதை வேதங்கள் எடுத்துக்கூறி அதனைக் கடைப்பிடிக்குமாறு உபதேசிக்கின்றன.

சூரியனுக்கு நமஸ்காரம் பிரியமானது. நமஸ்காரம் செய்வது மட்டுமல்ல. அதனைச் செய்யும் போது, "உமக்கு நமஸ்காரம்" என்று சொல்லுவதைக் கேட்பதிலும் பிரியமுள்ளவர் என்று பெரியோர்கள் கூறுவர்.

**சூரிய வழிபாடு (பொங்கல் நாளன்று)**

**பூசை தொடக்கம் (பிள்ளையார் துதி)**

திருவாக்கும் செய்கருமம் கைகூட்டும் செஞ்சொல்
பெருவாக்கும் பீடும் பெருக்கும் - உருவாக்கும்
ஆதலால் வானோரும் ஆனை முகத்தானைக்
காதலால் கூப்புவர் தம் கை
(கைகூப்பி தொழுது மலர் சொரிக)



**சங்கல்பம்**

சிவபெருமான் திருவருளால் நாளும் கோளும் கூடிய இந்நன்னாளில் ஆகிய நான் எனக்கும் என்னுடைய சுற்றத்தார்க்கும் நோய் நொடிகள் இல்லாத நெடிய வாழ்வும் சௌபாக்கியங்கள் நிறைந்த மங்கல வாழ்வும் அமையவேண்டி அருள்மிகு சாயா சுவர்ச்சலாம்பா உடனுறை சூரிய நாராயணரின் இப் பூசை புரிகின்றேன்.

(திருவடிகளில் மலர்கள் சொரிந்து வணங்குக)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# ஸ்ரீ பசுவின் மஹிமை

**பால் பொங்குக! பொங்குக!**

**பழம் போல் வளம் பொங்குக!**

**நலம் பல எய்துக! நன்மைகள் ஓங்குக!**

ஸ்ரீ லலிதா ஸஹஸ்ரநாமத்தின் பெருமையை அறியாதவர்கள் இருக்க முடியாது. அந்தப் புண்ய ஸ்தோத்ரம் ஆரம்பமாவதே ஒரு தனிச்சிறப்பு கொண்டது. "ஸ்ரீமாதா" என்று தாயை அழைக்கிறது. தாய் இல்லாமல் உலகம் இல்லை. ஜகன்மாதாவான தாயை அழைத்து ஆரம்பிக்கிறது ஸ்லோகம். கோமாதா குஹ ஜன்ம பூ: என்று 605 நாமாவாக அழைக்கிறது "கோ" என்ற சொல்லே பூமி, தாயார், வாக்கு, பசு முதலான பல பொருள்களுடைய சொல். ஆனாலும் "கோ" என்றால் பசுவையே குறிப்பதாகக் கொள்கிறோம். வேதம் பசுவைச் சொல்லும் போது

**பசுவானவள் பரமேஸ்வரனுக்குத் தாயாகவும், வஸுக்களுக்குப் பெண்ணாகவும் ஆதித்யர்களுக்கு ஸகோதரியாகவும் நாபியில் அமிர்தத்தை வைத்துக் கொண்டவளாகவும் இருக்கிறாள். பசுவை அடிக்கவோ, விரட்டவோ கூடாது. பூஜிக்க வேண்டும்** மென்று வேதம் சொல்கிறது.

தேவீபாகவதம், பிரும்ம வைவர்த்தம் போன்ற புராணங்களில் ஸுரபி உபாக்யானம் மிக அழகானது. பிரும்ம சிருஷ்டியில் உலகம் உய்ய முதலில் பசுவைப் படைத்து அதன் உடலில் பதினான்கு உலகையும் முப்பத்து முக்கோடி தேவர்களையும் இருக்கச்செய்தான். அதில் முதலில் வந்தவர்கள் தர்மராஜனும் கால தேவனும் தான். முகத்தில் இருந்தனர். மற்றவர்கள் உடல் எங்கும் குடியேறினார்கள். இதில் இரண்டே பேர்கள் தாமதமாக வந்தார்கள். அவர்கள் மஹாலக்ஷ்மியும் கங்கையும், பசுவின் உடலில் இவர்களுக்கு இடம் இல்லை. லக்ஷ்மியும் கங்கையும் பசுவை மிகவும் வேண்டினார்கள். எங்கேயாவது இருக்க ஓர் இடம் கொடுத்தால் போதும் என்று கெஞ்சினார்கள். பசுவும் தாய்மார்களே! உங்கள் மீது எனக்கு அனுதாபம் இருக்கிறது. ஆனால் இடமே இல்லையே ஒன்று வேண்டுமானால் செய்யுங்கள். என் உடலிலிருந்து வரும் சாணம், கோமயம் இரண்டும் யாருக்கும் சொந்தமாக வில்லை. நீங்கள் விரும்பினால் அதில் இருக்கலாம் என்று சொல்ல லஷ்மியும் கங்கையும் மிகுந்த சந்தோஷத்துடன் அந்த இடத்தில் வாஸம் செய்ய ஆரம்பித்தார்கள். அதனால் இன்றைக்கும் பசுவின் பின்புறத்தில் லக்ஷ்மியும் கங்கையும் இருப்பதாக சாஸ்திரம் கூறுகிறது. அதனால் பசுவின் சாணமும் கோமயமும் ஸகலபாபங்களையும் போக்கி லக்ஷ்மீ கடாக்ஷம் அளிக்கக் கூடியது என்கிறது சாஸ்திரம்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org







- இந்திய சுவாமிப் படங்கள்,
- மாலைகள்,
- மின்சார மங்கள வாத்தியங்கள் (9" 12" 15"),
- கும்பக் குடைகள் 8/10/12 பிரம்பு,
- இந்திய கருங்கற் சிற்பச்சிலைகள்,
- கும்பகோண பித்தளை விளக்குகள்,
- நிறைகுட செட்,
- மங்கள வைபவத்திற்கான தாம்பூல பரிசுப்பொருட்கள்,
- குபேரன் சிலைகள்,
- **பித்தளை கை மணிகள்,தேர் மணிகள் ஆலய வெண்கல மணிகள்**
- யாகசாலை தேர் அலங்கார பொருட்கள்
- Black Metal சிலைகள்,
- ஐம்பொன் சிலைகள், பித்தளை சிலைகள்,

**போன்றவைகளை இங்கு பெற்றுக்கொள்ளலாம்.**

**அனைத்து வகையான பித்தளை சிலைகளும் மெருகூட்டி தரப்படும்.**





TEL : **Hari - 077 2435899** | Fax : **011 2447683**
Email : **hari_visgha@hotmail.com**
: **hari visgha**
No : **145-P5, Andival Street, Colombo - 13.**
Web : **www.visgha.lk**


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

























Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# நடராஜ திருவடிவம்

உலகத்திலேயே மிகவும் அற்புதமான ஒரு கலை நுணுக்க சிலை வடிவம் எனக் கருதப்படும் நடராஜர் திருவடிவம் பல வகையிலும் ஆன்மீகச் சிறப்பு பெற்றுத் திகழ்கின்றது. நடராஜர் திருஉருவம் இடம் பெறாத சிவன் ஆலயமே இல்லை எனலாம். சிலப்பதிகாரம், கலித்தொகை போன்ற பண்டைய தமிழ் இலக்கியங்களில் எல்லாம் நடராஜர் திருஉருவச் சிறப்பு பற்றிக் கூறப்படுகிறது.

## நடராஜர் திருஉருவம் தத்துவச் சிறப்பு

சைவ சமயத்தின் தத்தவ கருத்தின் தொகுப்பாகவே நடராஜர் சிலை அமைந்திருக்கிறது. அதன் ஒவ்வொரு சிறு அம்சத்திலும் சமயம் தழுவிய பல சிறப்புகளைக் காண முடிகின்றது.

## நடராஜர் திருமுகம்

பார்க்கப் பார்க்கப் பரவச மூட்டும் எல்லையற்ற அழகு சேர்ந்த கருணை வடிவமாக நடராஜப் பெருமானின் திருமுகம் திகழ்கின்றது. சாந்தமும், மலர்ச்சியும், தவழும் அந்தத் திருமுகம் இறைவனின் கருணை உள்ளத்துக்கான விளக்கமாக அமைந்துள்ளது.

## பனித்த சடை

நடராஜப்பெருமானின் சடைமுடி ஞானச் சிறப்பையும் சிவ நெறிக்குரிய தவ ஒழுக்கச் சிறப்பையும் குறிக்கின்றது

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

### கங்கை தாங்கிய திருமுடி
பரமனின் பேராற்றலுக்கான விளக்கமாக இது அமைந்திருக்கிறது.

### பிறை அணிந்த பெம்மான்
தம்மைச் சரணடைந்தவர்களை அரவணைத்து அவர் தம் துயர் நீக்கும் இயல்பினுக்கு நடராஜப் பெருமானின் முடியில் காட்சி தரும் பிறை ஒரு சான்றாக உள்ளது.

### வளைந்த புருவங்கள்
பார்வையைக் கூர்மையாக்கி உற்றுக் கவனிக்கும் போது புருவம் தானாக வளைந்து கொடுப்பது இயல்பு. தமது அடியார்களின் துயரங்களை தெளிவாக உணர்ந்து கொள்ள பரமன் கூரிய பார்வையை உயிரினங்கள் மீது ஒட்டும் தன்மைக்குப் பெருமானின் வளைந்த புருவங்கள் சான்று ஆகும்.

### குமிண் சிரிப்பு
நடராஜப் பெருமானின் உதடுகளில் தவழும் இனிய குறுநகை, தம்மை அண்டியவர்கள் செய்த பாவங்களை மன்னித்து அவர்களுக்கு அருள் பாலிக்கும் கருணையின் சின்னமாகும்.

### பவளத் திருமேனி
பெருமானின் சிவந்த பவளம் போன்ற திருமேனி தீப்பிழம்புக்குச் சமமானதாகும். தீயானது தம்பால் வந்து சேரும் பொருட்களில் உள்ள மாசினை எரித்து அகற்றி தூய்மைப்படுத்தும். அது போன்று தம்மை அண்டித்தம்முடன் இரண்டறக் கலக்கும் ஆன்மாக்களின் வல்வினை என்ற அழுக்கைப் பரமன் சுட்டெரித்து ஆன்மாக்களைப் பரிசுத்தப் படுத்துகிறார் என்பது அதன் உள்ளார்ந்த பொருளாம்.

### நீலகண்டம்

ஆன்மாக்களின் கர்ம வினைகள், தவறுகள், குற்றங்களைத் தமது கருனை உள்ளத்தினால் அகற்றி அவற்றைத் தமது வசம் இழுத்து, உயிர்களைக் கடைத்தேற்றும் தத்துவம் பரமனின் நீலகண்டமாகும்.

### உடுக்கை

பரமனின் கரத்திலிருந்து ஒலிக்கும் தமருகம் எனப்படும் உடுக்கையின் நாதம் அணுத்திரள்களைத் திரட்டி உலகத்தை, உலகம் சார்ந்த பொருட்களை படைக்கும் தத்துவத்தின் அடையாளமாகும்.

### நெருப்பு
நடராஜரின் இடக்கை ஒன்றில் காணப்படும் நெருப்பு பரமனின் அழித்தல் தொழிலின் சின்னமாகும்.

### அபயகரம்
நடராஜப் பெருமானின் அமைந்த கரத்தை அபயகரம் என்று கூறுவர். எதற்கும் அஞ்சற்க, நாம் என்றும் துணையிருப்போம் என்று உயிர்களுக்கு இறைவன் அளிக்கும் உறுதிமொழியின் அடையாளம் அது.

### இடது திருவடி
எடுத்த திருவடியாக காட்சிவரும் இடது திருவடி பரமனின் மறுகூறான அம்மைக்கு உரியதாகும். நம்மை ஆட்கொள்ளவரும் திருப்பாதம் என அப்பர் பெருமானின் வர்ணனையே இதற்கான அர்த்தமாகும்.

### ஊன்றிய திருவடி
நடராஜரின் ஊன்றிய திருவடி பரமனின் ஆண்கூறுக்கு உரியதாகும். அந்தத் திருவடி முயலகன் மீது ஊன்றிய நிலையில் உள்ளது. முயல்கனை மிதித்து நின்றாலும் ஒரேயடியாக அவனை நசுக்கி அழித்துவிடாமல் மென்மையாக பாதத்தை வைத்திருக்கும் பான்மையிலும் ஓர் அர்த்தம் உண்டு. முயலகன் ஆன்மாக்களை அலைக்கழிக்கும் மும்மலங்களைக் குறிக்கும் அடையாளம் என்பர். மும்மலங்களை விலக்கியருளும் பணியினை ஆற்றுகிறான் என்பது தத்துவம்.

### தெற்கு நோக்கிய பார்வை
நடராஜப் பெருமானின் திருவுருவம் எந்தத் தலத்திலும் தெற்கு நோக்கியே அமைந்திருப்பதைக் காணலாம் தென் திசை எமனின திசையாகும். தம்மை நம்பி அண்டிய யாரையும் தென் திசைக்கு அதிபதியாம், எமனின் அச்சத்திலிருந்து அவர் காத்தருளுவார் என்பதே இதன் பொருளாகும்.

### பெருவியப்பளிக்கும் சின்னம்
"நடராஜ வடிவத்தினை வருங்காலத்தில் இதன் பழைய சிறப்புடன் எந்த ஒரு கலைஞனாலும் வடிவமைக்க முடியுமா என்பது ஐயப்பாடே! இத் திருவுருவம் பக்தர்களுக்கும் பாமரர்களுக்கும் மட்டுமின்றி, விஞ்ஞானிகளுக்கும் மெய்ஞ்ஞானி களுக்குங்கூட பெருவியப்பையும் பெரும் ஈடுபாட்டையும் தோற்றுவித்து வருகின்றது" என உலகப் புகழ்பெற்ற கலையியல் பேரறிஞர் திரு. ஆனந்த குமாரசாமி கூறியிருக்கிறார். நடராஜப் பெருமான் திருஉருவத்தை வழிபடுவதன் மூலம் முழுமையாக தெய்வ வழிபாட்டைச் சற்றும் குறையிலாது நிவேற்றுவதாக அமையும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஸர்வ மங்களம் தரும்
# போற்றி வழிபாடு

ஓம் அங்காளீஸ்வரியாயினி போற்றி
ஓம் அம்ச பிரகாயினி போற்றி
ஓம் அம்பிகாயாயினி போற்றி
ஓம் நவபஞ்சனியாய போற்றி
ஓம் ஆதிலக்ஷ்மியாய போற்றி
ஓம் குருசாந்தியே போற்றி
ஓம் குருநாராயணி போற்றி
ஓம் பஞ்சமூர்த்தியே போற்றி
ஓம் பரமேஸ்வரியே போற்றி
ஓம் பவ்யாயினி போற்றி
ஓம் பராசக்தி போற்றி
ஓம் அங்காளீஸ்வரி போற்றி
ஓம் ஆதியே போற்றி
ஓம் தேவித்யை போற்றி
ஓம் தேவியை போற்றி
ஓம் காளியை போற்றி
ஓம் காமப்பிரியாயை போற்றி
ஓம் காமினியை போற்றி
ஓம் அஷ்டவர்க்காயை போற்றி
ஓம் ஆதித்யை போற்றி
ஓம் அனுப்பிரியை போற்றி
ஓம் அங்கபூரணியை போற்றி
ஓம் நாரணி போற்றி போற்றி
ஓம் நவசக்தியாயினி போற்றி
ஓம் பஞ்சசக்தியாயினி போற்றி
ஓம் இப்பிரித்யை போற்றி
ஓம் பிரவதாயை போற்றி
ஓம் பிரம்மகுருவை போற்றி
ஓம் பிரம்மாட்ஷியை போற்றி
ஓம் இப்பிருர்த்யை போற்றி
ஓம் ஆதித்யை போற்றி
ஓம் மஹாத்யை போற்றி

ஓம் மாலினியை போற்றி
ஓம் குங்மாயை போற்றி
ஓம் ஷிவாயனியை போற்றி
ஓம் சக்தியாயினியை போற்றி
ஓம் சூலதாரினியை போற்றி
ஓம் கபாலதாரினியை போற்றி
ஓம் கத்தியாயினி போற்றி
ஓம் காத்யாயினி போற்றி
ஓம் சித்தியாயினி போற்றி
ஓம் அங்கபூரணியாயினி போற்றி
ஓம் அகிலாண்ட நாயகி போற்றி
ஓம் பரமாத்மாயினி போற்றி
ஓம் திவிதாயினி போற்றி
ஓம் தீட்சதாயினி போற்றி
ஓம் திலிமங்களாயினி போற்றி
ஓம் தீப்தாயினி போற்றி
ஓம் பிரஷ்டி போற்றி
ஓம் பிவாட்சியண்யை போற்றி
ஓம் நமன்ஷிண்யை போற்றி
ஓம் நவகோடியை போற்றி
ஓம் நவப்பிரதாயை போற்றி
ஓம் நளாட்சியை போற்றி
ஓம் மஞ்சுளா போற்றி
ஓம் சக்தியாயினி போற்றி
ஓம் மகாபதாயை போற்றி
ஓம் மகாட்சியை போற்றி
ஓம் மனோ பீஜாயை போற்றி
ஓம் மாமங்கு ஜாயை போற்றி
ஓம் அம்சவதாயை போற்றி
ஓம் அங்காளியை போற்றி
ஓம் திலிதாங்காயை போற்றி
ஓம் திவிமங்களாயை போற்றி

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஸ்ரீ அங்காளபரமேஸ்வரி
## போற்றி வழிபாடு

ஓம் திருபூஜாம்பதியை போற்றி
ஓம் திருமாத்யை போற்றி
ஓம் ஆத்யை போற்றி
ஓம் திவ்யை போற்றி
ஓம் திருமஞ்சதை போற்றி
ஓம் குமாயை போற்றி
ஓம் தேவியை போற்றி
ஓம் காளியை போற்றி
ஓம் ஆத்யை போற்றி
ஓம் அனுப்பிரியை போற்றி
ஓம் ஆத்மாயை போற்றி
ஓம் ஆத்யை போற்றி
ஓம் பவ்யை போற்றி
ஓம் பாதித்யை போற்றி
ஓம் அனுப்பிரியையாயை போற்றி
ஓம் காமாயை போற்றி
ஓம் காலதரியை போற்றி
ஓம் காத்யாயினி போற்றி
ஓம் அம்சவதாயை போற்றி
ஓம் பிரபாயை போற்றி
ஓம் பரபதியை போற்றி
ஓம் பிங்களாயை போற்றி
ஓம் பிரத்யை போற்றி
ஓம் அனுஷ்டாயை போற்றி
ஓம் தேவித்யை போற்றி
ஓம் ஆதித்யை போற்றி
ஓம் மாரித்யை போற்றி
ஓம் மகாபலாயை போற்றி
ஓம் மகாசக்தியை போற்றி
ஓம் மனோகரியை போற்றி
ஓம் ஆதித்யை போற்றி
ஓம் அம்சாயை போற்றி
ஓம் ஆத்ம பிரத்யை போற்றி
ஓம் அனுப்பிரயை போற்றி
ஓம் அனுமந்தாயை போற்றி
ஓம் சிவஹரியை போற்றி
ஓம் வராகியை போற்றி
ஓம் வம்ச பிரத்யை போற்றி
ஓம் அகம் பூஜிதாயை போற்றி
ஓம் அங்காளீஸ்வரியே போற்றி
ஓம் ஈஸ்வரியே போற்றி
ஓம் மீனாட்சியே போற்றி
ஓம் காமாட்சியே போற்றி
ஓம் விசாலாட்சியே போற்றி



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org







Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வால்மீகி ஒரு நாள் தனது சீடனுடன் தமது ஆசிரமத்திலிருந்து நீராட தமஸா நதிக்குச் சென்றார்.




வழியில் ஒரு மரக்கிளையில் ஒருஜோடி சக்ரவாகப் பறவைகள் கூடிக் குலாவுகின்றதை அவர்கள் பார்த்து மகிழ்கிறார்கள்.




அந்நேரம் வேடனொருவன் மறைவிலிருந்து ஆண் பறவையை அம்பு எய்து வீழ்த்திவிடுகிறான். அடிபட்ட பறவையைப் பார்த்த பெண் பறவை அலறித்துடிக்கிறது. வேடன் ஆண்பறவையை எடுக்க வருகிறான்.




சோகம் தாளாமல் அவர் வாயிலிருந்து வந்த வார்த்தைகள் புதிய வடிவைப் பெற்றன. முனிவர் அச்சொற்களை ஒருமுறை எண்ணிப் பார்த்தார்.




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



Digitized by Noolaham Foundation. noolaham.org | aavanaham.org




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சுலோக பாராயணம்

(நாராயணீயம் 21-வது தசகம்:
4-வது ஸ்லோகம்.)



**(இந்த ஸ்லோகத்தைத் தினமும் பாராயணம் செய்வதால் சீக்கிரமே விவாகம் நடக்கும்)**

01. வர்ஷே ப்ரதீசி லலிதாத்மனி கேதுமாலே
லீலா விஸேஷ லலிதஸ்மித ஸோபனாங்கம்!
லக்ஷ்ம்யா ப்ரஜாபதி ஸுதைஸ்ச நிஷேவ்ய மாணம
தஸ்யா: ப்ரியாய த்ருத காமதனும் பஜேத்வாம்!!

02. ஸ்த்ரியோ வ்ரதைஸ்த்வா ஹ்ருஷிகேஸ்வரம் ஸ்வதோ
ஹ்யாராத்ய லோகே பதிமாஸா ஸதே அன்யம்
தாஸாம் நதேவை பரிபாந்த்ய பத்யம்
ப்ரியம் தனாயூம்ஷி யதோ அஸ்வாந்த்ரா!

**விளக்கம்:** மன்மதனின் தந்தையான நாராயணன் மன்மதனை விட அழகு வாய்ந்தவன். இதனாலேயே அவன் கோபிகைகள் மனதைக் கவர்ந்தான். அந்த மன்மத வடிவத்தை ஏகாந்தமான கேது மாலத்தில் மகாலக்ஷ்மி பூஜித்து வருகிறாள். ஸம்வத் ஸரங்களின் குழந்தைகளான இரவும், பகலும் மகாலக்ஷ்மியோடு சேர்ந்த பூஜிக்கின்றன. ஸ்ரீ ஹரி மகாலக்ஷ்மியின் திருப்திக்காக சிரித்த முகத்துடன் குறும்புகள் செய்து விளையாடுவதால் பகவானின் அழகு பெருகுகின்றது.

நல்ல கணவனை அடைய உலகில் மங்கையர் விரதமிருக்கிறார்கள். இந்திரியங்களின் பதியான நீ இதனால் திருப்தியுறுகிறாய். ஆனால் அந்தப் புருஷர்கள் குழந்தை, தனம், ஆயுள் இவற்றைப் பாதுகாப்பதால் பூரண சக்தி பெறுவதில்லை! ஆனால் விடாமல் தங்களை பூஜித்து சக்தியைப் பெருக்கிக் கொண்டால் அபாக்யங்கள் அண்டுவதில்லை!.

***உங்கள் வீட்டில் திருமணம் நடக்க பாராயணம் செய்யுங்கள்!.***

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org



# ஆயிரம் சீதைக்கு நிகரானவள்!

இராம, லட்சுமண, பரத, சத்ருக்கன், சீதை, ஹனுமான் ஆகியோர் இராமாயணத்தில் வரும் பாத்திரங்கள். இவற்றுள் முக்யத்துவம் பெற்ற பெண் பாத்திரங்கள் கைகேயி, சீதா, மண்டோதரி ஆகியோர். ஆனால் பின்னணியில் நின்ற ஒரு பெண் பாத்திரம் லட்சுமணனின் மனைவி ஊர்மிளை.

இராமனுக்கு பட்டாபிஷேகம் இல்லை அவன் வனவாசம் போக வேண்டுமென முடிவானது. தந்தை சொல் காக்கக் கானகம் புறப்பட்டான் ஸ்ரீராமன். அப்போது சீதையிடம் விடை பெற்றுச் செல்லப்போனான். சீதையோ தானும் காட்டுக்கு உடன் வருவதாகப் பிடிவாதம் செய்தாள்.

இராமனோடுவாதிட்டாள். "ஸவாமி தாங்கள் கானகம் செல்லும் செய்தி கேட்டு, தங்களை விட்டுப்பிரிய மனமில்லாத தங்கள் தாய் கோசலை உடன் வருவதாகப் புறப்பட்டால் தட்டிச் சொல்வீர்களா?" என்று கேட்டாள் சீதை.

"அதெப்படி முடியும். அவள் கணவனான என் தந்தை தசரதனைத் தனியாக விட்டுப் பிள்ளையுடன் போவது நியாயமில்லை என்று பதி சேவைதான் முக்கியம் என்பதை உணர்த்தி அவளை இங்கே இருக்கச் செய்வேன்" என்றார்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ராமர். "அப்படியானால் அந்த தர்மம் எனக்கு மட்டும் கிடையாதா? என் பதிக்கு சேவை செய்ய நான் அவருடன் இருக்க வேண்டாமா?" என்று வாதிட்டு, இராமனை அவன் சொற்களாலேயே மடக்கி அவருடன் வனவாசம் செல்லத் தயாரானாள் சீதை.

இதையறிந்த லட்சுமணனுக்கு பெரும் கலக்கம். அண்ணனுக்குச் சேவை செய்யக் கானகம் செல்லும் தன்னோடு தன்மனைவி ஊர்மிளையும் வருவதாகப் பிடிவாதம் பிடித்தால் எப்படித்தடுப்பது? எப்படி சமாதனம் சொல்வது? என்பது லட்சுமணன் பிரச்சனை. இந்தக் கலக்கத்துடன் மனைவியைக் காணச்சென்ற லட்சுமணனுக்கு பேரதிர்ச்சி காத்திருந்தது.

ஊர்மிளையின் அந்தப்புரத்திற்கு லட்சுமணன் சென்றபோது அவன் கண்ட காட்சி அவனைத்திடுக்கிட வைத்தது.

அரண்மனையும், நாடும் நகர மக்களும் இராமனின் வனவாசச் செய்தி கேட்டுக் கண்ணீரும் கம்பலையுமாக இருந்த அந்த நேரத்தில் ஊர்மிளை மட்டும் அழகாக அலங்கரித்துக் கொண்டு, ஆபரணங்கள் அணிந்து, மலர்கள் சூடி மஞ்சத்தில் ஒய்யாரமாக வீற்றிருந்தாள்.

இது என்ன கோலம் ஊர்மிளை? என்று கேட்ட லட்சுமணனிடம் அதே கேள்வியைத் திருப்பிக் கேட்டாள் ஊர்மிளை. "ஸ்ரீராமன் தானே காட்டுக்குச் செல்ல வேண்டு மென்பது கட்டளை நீங்கள் ஏன் இப்படி மரவுரி தரித்து பின் செல்ல வேண்டும்? இதனால் நமக்கு என்ன பயன். இதற்காகவா நான் தங்களைத் திருமணம் செய்து கொண்டு வந்தேன் அரச யோகங்களைத் துறந்து செல்வது அவர்



Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

விதி என்றால் அதில் நீங்கள் ஏன் பங்கு கொள்ளவேண்டும்?" என்றாள் ஊர்மிளை.

இலட்சுமணன், இரத்தம் கொதித்தது. தாடகையிலும் கொடிய அரக்கி போல் அவன் கண்களுக்குத் தெரிந்தாள் ஊர்மிளை. பெண்ணினத்துக்கே அவளால் அவமானம் என்று கருதினான். அவளை மனைவியாகத் தந்த விதியை நொந்து கொண்டான்.

"நீ பாவி! கைகேயியினும் கொடியவள்! அரச போகங்களிலும் ஆடம்பரத்திலும் ஆசை கொண்டவள். பதிபக்தியில்லாதவள். உன்னை மனைவி என்று சொல்வது கூடப்பாபம். உன் சிந்தனையையே என்மனத்திலிருந்து இக்கணம் முதல் அகற்றிவிட்டேன். இனி நமக்குள் பந்தமில்லை, உறவில்லை நீயாரோ? நான்யாரோ?" என்று கூறி கோபாவே சத்துடன் புறப்பட்டான்.

அவன் கண்முன்பு அழமுடியாத ஊர்மிளை அவன் தலை மறைந்ததும் கண்ணீர் ஆறாய்ப் பெருக்கினாள். கதறி அழுதாள். அண்ணன் இராமனுக்குப் பணிவிடை செய்யப் போகும் லட்சமணனுக்கு, தன்னைப்பற்றிய ஆசா, பாசங்கள், காதல் நினைவுகள் ஏற்பட்டு அதனால் செய்கின்ற பணிக்கு இடையூறு வராமல் இருக்கவேண்டுமென்பதற்காக தன்னுடைய சுகத்தையே அர்ப்பணித்துக்கொண்ட தியாகி ஊர்மிளை. வனவாசத்தின் போது தன் சிந்தனை கூட தன்கணவனுக்கு இடையூராக இருக்கக்கூடா தென்பதற்காக இப்படி ஓர் நாடக மாடி தன்மீது அவனுக்கு முழு வெறுப்பேற்படும்படிச் செய்து கொண்டு, கணவன் ஏற்றுக்கொண்ட கடமையெனும் யாகத்தில் தன்னையே நெய்யாக்கிக் கொண்டாள். யாருக்கு தெரியாமல் ஊர்மிளை செய்த இந்தச் தியாகம் வனவாசம் முடிந்த இராமன் பட்டாபிஷேகம் செய்து கொண்ட பின்புதான் சீதை மூலம் லட்சுமணனுக்குத் தெரிகிறது. இராமாயணத்தில் தந்தை சொல் காக்க தாரணி துறந்து கானகம் சென்ற ராமன் தியாகியா?

அண்ணனுக்குப் பணிவிடை புரிய அனைத்தும் துறந்து சேவகனாகச் சென்று பதினான்கு ஆண்டுகள் கண்விழித்துக் காவல் புரிந்த லட்சுமணன் தியாகியா?

இராமன் இருக்குமிடம்தான் அயோத்தி என்று கணவன் திருவடிகளைப் பின்பற்றிக் கானகம்நடந்து அக்னிப் பிரவேசம் செய்யவும் தயாரான சீதை தியாகியா? தாய்பெற்றுத்தந்த ராஜ்யத்தைத் துச்சமாய்த்தள்ளி தனயன் திருவடிகளைத் தாங்கும் பாதுகைகளை அரச பீடத்தில் வைத்து பூஜித்த பரதன் தியாகியா? கணவன் ஏற்றுக் கொண்ட தியாகப் பணி தடையின்றி நடக்கத் தன்னையே அவன் வெறுக்கும் சூழ்நிலையை உருவாக்கி, அந்தத் துயரத்தை தன்னுள்ளேயே புதைத்துக்கொண்டு பதினான்கு ஆண்டுகள் ஊண்உறக்கமின்றி அரண்மனைக்குள்ளேயே ஓர் அஞ்ஞாதவாசம் செய்து வாழ்ந்த ஊர்மிளை தியாகியா? "ஆயிரம் இராமர் நின்கீழ் ஆவாரோ? தெரியின் அம்மா?" என்று பரதனின் சிறப்பை கம்பர் கூறுவதை நினைவு கூர்ந்து ஆயிரம் சீதை நின் கீழ் ஆவாரோ தெரியும் அம்மா? என்று ஊர்மிளையைப் பற்றிக் கூறினால் அது மிகையாகாது.

## பதினாறும் பெறுக!



பதினாறும் பெருக!: தம்மினும் மூத்தோரை வணங்கி வாழ்த்துப் பெறுதல் வேண்டும் என்பது இந்து சமயக் கருத்து. மற்றெல்லாப் பலங்களைக் காட்டிலும் ஆசீர்வாத பலம் சிறந்தது உயர்ந்தது. திருமணமான புதுத் தம்பதியர் சான்றோர் மணமக்களை வாழ்த்துவர். "பதினாறும் பெற்றுப் பெரு வாழ்வு வாழ்க!" என வாழ்த்துவர்.

புகழ், கல்வி, ஆற்றல், வெற்றி, நன்மக்கள், பொன், நெல், அழகு, இளமை, நல்லூழ், அறிவு, பெருமை, துணிவு, வாழ்நாள், நோயின்மை, நுகர்ச்சி ஆகிய இவையே பதினாறு பேறுகள்.

***"புகழ்கல்வி ஆற்றல்வென்றி புகலும்நன் மக்கள் பொன்நெல்***
***அழகொடு இளமை நல்லூழ் அறிவுநற் பெருமை சாலப்***
***பகருறு துணிவு வாழ்நாள், பண்பில்நோய் இன்மை யோடு***
***பகருறு நுகர்ச்சி கூடப் பொருந்திய பேறீ ரெட்டாம்."***

தாய் தந்தையர் கால்களில் விழுந்து வணங்குதலும் குருவின் கால்களில் வீழ்ந்து வணங்குதலும் பெருத்த செல்வாக்கினைத் தரும். வணக்கம் வாழ்வு தரும்! "எத்தகைய திருவினைப் பெற்றாலும் சான்றோரை வணங்கல் வேண்டும்" என்பதை இந்து சமயம் வற்புறுத்திக் கூறுவது இதனாலேயாம்!

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# நவக்கிரகங்கள்

## செவ்வாய்

(பூமி தேவியின் கர்ப்பத்தில் உதித்தவன் 'மின்னலைப் போன்ற ஒளியினன்' குமாரன் சக்தி ஆயுதம் தரிப்பவன்' அந்த மங்களன் என்னும் செவ்வாயைப் பணிகிறேன்)

உடல் உறுதிக்கும் மன உறுதிக்கும் காரகன் செவ்வாய்.

முதல் வரிசையில் வைத்து எண்ணப்படுகிற அரசியல் தலைவர்கள், காவல் அதிகாரிகள், நாட்டுத் தளபதிகள், நீதிபதிகள், பொறியியல் வல்லுநர்கள் முதலானோரின்' ஜாதகங்களில் அங்காரக பலம் இருந்தே தீரும் என்று திடமாக நம்பலாம்.

மாவீரம் படைத்த புரட்சியாளர்களைத் தோற்றுவிப்பவன் அங்காரகன்.

பெருந்தன்மை, அதே நேரம் கண்டிப்பு, தொண்டு செய்தல், தலைமை வகித்தல், வைராக்கியம், பகைவரைப் பந்தாடும் பராக்கிரமம் ஆகியவற்றை அளிப்பவன் செவ்வாய்.

ரத்தத்திற்குக் காரகன். ரத்தக் கலப்பான சோதரர்களுக்கும் காரகன். உடலில் எலும்பினுள் ஊன் இவன்.

நாம் பிறந்த மண்ணுக்கு, அதாவது இந்தப் பூமிக்குக் காரகன்.

உஷ்ணம் இவன்' கோபம் இவன்' ராஜதந்திரி இவன்' எரிபொருள் இவன்' தங்கம் இவன்' தாமிரம் இவன்' நாகம் இவன்' நாகசுப்பிரமணியன் இவன்.

என்றும் இளையோன்' அரச இனத்தோன்' ஆயுதம் தரிப்போன்' அமைச்சனும் இவனே.

செந்நிறத்தோன்' அழகன்' கடும் பார்வையுடையோன்' தற்பெருமைப் பிரியன்' பொறுமையற்றவன்' ஆட்டப்பிரியன்' வேட்டைப் பிரியனுங் கூட. துணிச்சல்காரன்.

கண்டிப்பவன் தண்டிப்பவன்.

மேல்நோக்கிப் பார்ப்பவன்' காரப் பிரியன்' தாமஸ குணம் கொண்டவன்.

'பவழம் இவனது இரத்தினம்' நெருப்புக் கூடத்தில் உலவுவோன்' ஆண்மகன்' தென் திசைக்குக் காரகன்.

நான்கு வித உபாயங்களில் தண்ட உபாயத்துக்குரியவன்.

வியாழன், சந்திரன், சூரியன் ஆகிய மூவரும் இவனுடைய நண்பர்கள்.

புதனைப் பகையாகக் கொண்டவன்.

மேஷம், விருச்சிகம் இரண்டும் சொந்த வீடுகள்'கடகம் நீச வீடு' மகரம் உச்ச வீடு' மிதுனம், கன்னி இரண்டும் பகை வீடுகள்' சிம்மம், தனுசு, மீனம் ஆகிய மூன்றும் நட்பு வீடுகள்' மற்றவை சமம் ஆகும்.

மிருகசீரிடம், சித்திரை, அவிட்டம் ஆகிய மூன்று நட்சத்திரங்களுக்கும் நாயகன் இவன்.

ஜாதகத்தில் உச்சம் அடைந்த அங்காரகன், ஒரு கேந்திரத்தில் இருந்தானானால், அந்த ஜாதகரை இவன் வாழ வைத்தே தீருவான்.

செம்மீன் என்றும், குஜன் என்றும், மங்களன் என்றும் பல பெயர்கள் கொண்டவன். பூமி தேவியால் வளர்க்கப்பட்டதால் பௌமகன் எனப் பெயர் பெற்றான்.

வீரபத்திருடைய அம்சம் செவ்வாய் என்று புராணம் கூறுகிறது. இவனது ஆயுதம் சக்தி, கதை, சூலம் ஆகிய மூன்றும் ஆகும்.

தீதர், அங்காரகம் ஆச்ரயாமி என்று கீர்த்தனம் தொடங்குகிறார். அதில், நலத்தைத் தருபவன் செவ்வாய் என்கிறார். மேலும், வணங்கி வழிபடுவோரின் விருப்பத்தைப் பூர்த்தி செய்து வைப்பவன், எளியவர்களை ரட்சிப்பவன் என்றும் புகழ்கிறார்.

இவன் முக்கோண மண்டலத்தில் அமருகின்ற இயல்புடையான். வைத்தீசுவரன் கோவில் இவனது ஷேத்திரம் என்று தீட்சிதர் கூறுகிறார். சித்திரை மாதம் முதலாவது செவ்வாய் கிழமையில் வீரபத்திர மூர்த்தியை வழிபட்டால், செவ்வாயின் அருளும் சேர்ந்து கிடைக்கும் என்பார்கள்.

தேசத்தைப் பரிபாலனம் செய்வோருக்கும், நால்வகைப் படைகளை முன்நின்று இயக்குவோருக்கும், தீப்பிழம்பு போல் அசுத்தத்தைச் சுட்டெரித்துத் தூய்மையை நிலைநாட்டுவோருக்கும், யாருக்கும் தலை வணங்காமல் தன்மானத்துடன் வாழ்வோருக்கும் மூலபலமாக உள்ள அங்காரகனை வழிபட்டு வரமும் பெற்று விட்டால், எச்சிறப்பும்தான் நம்மை நாடி வராதா?

*தொடரும்*

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# குபேரன்

| | | |
|---|---|---|
| திருநாமம் | : | குபேரன் (இயற்பெயர் வைச்ரவணன், ஏகாஷிபிங்களி என்ற பெயரும் உண்டு) |
| பெற்றோர் | : | விச்ரவஸ், பரத்வாஜரின் மகள் ஸ்வதேவி |
| தாத்தா | : | புலஸ்தியர் (கொள்ளுத்தாத்த, பிரம்மா) |
| சகோரர்கள் | : | ராவணன், கும்பகர்ணன், விபீஷணன். (விச்ரவசுக்கும் கேகசி என்ற அரக்கிக்கும் பிறந்தவர்கள்) |
| சகோதரி | : | சூர்ப்பனகை |
| மனைவி | : | ரிதி (சித்ரலேகா என்ற பெயரும் உண்டு) |
| மகன்கள் | : | நளகூபரன், மணிக்ரீவன் (நாரரின் சாபத்தால் மருத மரங்களாகிய இவர்கள், கிருஷ்ணனால் சாபம் நீங்கப்பெற்றார்கள்) |
| வாகனம் | : | நரவாகனம், புஷ்பகவிமானம் (பிறகு ராவணனால் கைப்பற்றப்பட்டது) |
| அபிமான நிதி தேவதைகள | : | சங்கம், பதுமம் |
| இருப்பிடம் | : | கயிலாய சிகரத்திலுள்ள அளகாபுரி (ராவணனுக்கு முன் இலங்கையை ஆண்டவன்) |
| பெற்றது | : | சிவபெருமானை நோக்கி 800 வருடங்கள் கடும் தவமிருந்து, அவரது நட்பை; பிரம்மதேவனை நோக்கி தவமிருந்து வடக்கு திக்கின் பாலகனாக, ஐஸ்வர்யங்களின் அதிபதியாக பதவி. |
| அளித்தது | : | பத்மாவதியை மணந்து கொள்ள, திருமலையானுக்குக்கடன். |
| அவதரா நோக்கம் | : | பணிவும் பக்தியும் உள்ளவனை ஐஸ்வர்யங்கள் அனைத்தும் தேடிவந்து சேரும் என உணர்த்துவது. |



## பொருள் ஈட்ட... செலவிட...

- பணத்தைத் தீய வழியில் **இழப்பது குற்றம்.**
- தீய வழியில் தேடுவது **அதைவிடப் பெரியகுற்றம்.**
- தீய வழியில் செலவிடுவதோ **எல்லாவற்றிலும் பெரியகுற்றம்.**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## லக்ஷ்மி கடாட்சம் தரும்

# லக்ஷ்மி குபேர விரதம்



சுவாமி குபேர விரதம். பேரைக் கேட்டதுமே உங்களுக்குப் புரிந்திருக்கும் சகல ஐஸ்வர்யங்களையும் தரக்கூடிய விரதம் இதுவென்று. விரதத்தைப் பற்றித் தெரிவதறகு முன்னால், சகல செல்வங்களுக்கும் அதிபதியாக ஆகக் கூடிய பாக்கியம் குபேரனுக்கு எப்படிக் கிடைத்த கதையை தெரிந்துகொள்வோம். "விச்ரவசு"என்று ஒரு மகரிஷி இருந்தார். சதா சர்வ காலமும் சதா சிவனை நினைத்து தவம் செய்துகொண்டே இருந்தார். அவர், வேதங்கள் சொல்கின்றபடி யாகங்கள் செய்யவேண்டும் என்றால் அதற்கு திருமணம் செய்திருக்க வேண்டும் என்கிற விதி அப்போது இருந்ததால் தக்க வயதில் பரத்வாஜ மகரிஷியோட மகளை திருமணம் செய்து கொண்டார். உரிய காலத்தில் உன்னதமான நேரத்தில் ஆண் குழந்தை பிறந்தது அவருக்கு.

குழந்தைக்கு வைஸ்ரவணன் என்று பெயர் வைத்து மிக செல்லமாக வளர்த்தார்கள். அப்பாவுக்கு கொஞ்சமும் தப்பாமப் பிறந்த பிள்ளையாக எப்பவும் பூஜை, புனஸ்காரம்னு இருந்தான் வைஸ்ரவணன்.

ஓரளவுக்கு விவரம் புரிகிற வயசு வந்ததும் "பிரம்ம தேவனை நினைத்து தவம் பண்ணப்போகிறேன். எனக்கு நீங்க ஆசியளியுங்கள்" என்று பெற்றோரிடம் கேட்டான் வைஸ்ரவணன். அவர்களும் மகிழ்ச்சியோடு வாழ்த்தி அனுப்பினார்கள்.

ஆரம்பத்தில் வெறும் தண்ணீரை மட்டுமே அருந்திக்கொண்டும் காற்றை சுவாசித்துக் கொண்டும் கடும் தவமிருந்த வைஸ்ரவணன், போகப்போக தண்ணீர் அருந்துவதையும் நிறுத்திக்கொண்டு, வெறும் காற்றை மட்டும் சுவாசித்துக்கொண்டு மிகக் கடுமையாக தவமிருந்தான்.

பல வருஷம் கழிந்தது. மனமிரங்கின பிரம்மா, சகல தேவர்களோடும் பூலோகத்துக்கு வந்து வைஸ்ரவணனுக்கு காட்சி கொடுத்தார். என்ன வரம் வேணும்? என்று கேட்டார் பிரம்மா.

"உங்களை தரிசித்ததே பெரும் பாக்கியம்..! இதில் நான் வரமா எதைக் கேட்கிறது?" என்றான் வைஸ்ரவணன்.

நான்முகனுக்கும், அவரோடு வந்திருந்த தேவர்களுக்கும் மிக சந்தோஷமாயிருந்தது. "இவ்வளவு சின்ன வயதில் எதுமேலேயும் பற்று இல்லாமல், பக்தியோட இருக்கின்றானே இந்த பாலகன். இவனுக்கு ஒரு பெரிய பதவியைக் கொடுக்கவேண்டும்" என்று நினைத்தார்கள்.

அப்போது பிரம்மா, "அஷ்டதிக்கு பாலகர்களில் ஒருத்தராக அதாவது, வடதிசைக்கு காவலனாக நியமித்து, எல்லா செல்வங்களையும் பாதுகாக்கின்ற அதிபதியாக ஆக்கிடலாம்" என்றார். சகல தேவர்களும் சம்மதித்தார்கள். அப்படியே வரம் கொடுத்தார், நான்முகன். அப்போதிலிருந்து எல்லா செல்வங்களுக்கும் அதிபதியானார் வைஸ்ரவணன். அஷ்டதிக்கு பாலகர்களில் ஒருத்தனா விளங்குகிற அவன் பேரும் குபேரன் என்றானது.

குபேரன் மாதிரி கடுமையான தவமோ, விரதமோ இருக்க முடியாதென்றாலும், எளிமையான லக்ஷ்மி குபேர விரதத்தைக் கடைபிடித்தாலே போதும். நிம்மதியாக வாழவும், நியாயமான தேவைகளை பூர்த்தி செய்துக்கொள்ளவும் போதுமான செல்வம் கிடைக்கும்படி செய்வார்கள் லக்ஷ்மியும் குபேரனும்.

தொடரும்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# சரணாகதி

இராமாயணம் முழுக்க முழுக்கச் சரணாகதி நூலேயாகும். எனவேதான் மற்றெல்லா நூல்களைக் காட்டிலும் இராமாயணத்துக்கு என்றும் எங்கும் ஏற்றம் இருந்து வருகிறது.

1. தேவ சரணாகதி
2. ரிஷி சரணாகதி
3. சுக்ரீவ சரணாகதி
4. மிருக சரணாகதி
5. காக கரணாகதி
6. திரிசடா சரணாகதி
7. விபீஷண கரணாகதி

இப்படிப் பலரும் இராமபிரானைச் சரணாகப் பற்றிய நிலையினை இராமாயணம் எடுத்து இயம்புகிறது.

சரணாகதிக்குச் சாதி, இனம், தொழில், பால் முதலான பாகுபாடுகள் இல்லை. தன்னை முழுதுமாக ஒப்படைத்த பின்பே பாஞ்சாலிக்குக் கண்ணன் அருள்புரிந்த கதையைப் பாரதம் கூறும். அடைக்கலம் அடைந்தாரை ஏற்று அருள் புரியும் இராமபிரான் கூற்று உலகு உணர்ந்து பின்பற்ற [illegible]

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

| ஜனவரி | மார்கழி | | | | |
|---|---|---|---|---|---|
| 01 | 17 | ராகு<br>சுப<br>எம<br>குளி | 3.30 - 5.00<br>11.00 - 12.30<br>9.30 - 11.00<br>12.30 - 2.00 | சதுர்த்தி மு.இ 8.27<br>ஆயிலியம் மு.ப. 10.51<br>சித்தம்<br>சங்கடஹர சதுர்த்தி | |
| 02 | 18 | ராகு<br>சுப<br>எம<br>குளி | 12.30 - 2.00<br>5.00 - 6.30<br>8.00 - 9.30<br>11.11 - 12.30 | பஞ்சமி மு.இ. 8.17<br>மகம் மு.ப. 11.26<br>சித்தாமிர்தம் | |
| 03 | 19 | ராகு<br>சுப<br>எம<br>குளி | 2.01 - 3.31<br>8.01 - 9.31<br>6.31 - 8.01<br>9.31 - 11.01 | ஷஷ்டி மு.இ 7.39<br>பூரம் சித்தம்<br>மு.ப. 11.34 | |
| 04 | 20 | ராகு<br>சுப<br>எம<br>குளி | 11.01 - 12.31<br>6.31 - 8.01<br>3.31 - 5.01<br>8.01 - 9.31 | ஸப்தமி மாலை 6.32<br>உத்தரம் அட்டமி மா<br>6.32ல் மேல் | |
| 05 | 21 | ராகு<br>சுப<br>எம<br>குளி | 9.31 - 11.01<br>3.31 - 5.01<br>2.01 - 3.31<br>6.31 - 8.01 | அட்டமி பி.ப. 5.03<br>அத்தம் மு.ப. 10.28<br>மரண அட்டமி-நவமி | |
| 06 | 22 | ராகு<br>சுப<br>எம<br>குளி | 5.02 - 6.32<br>9.32 - 11.02<br>12.32 - 2.02<br>3.32 - 5.02 | நவமி பி.ப. 3.16<br>சித்திரை மு.ப. 9.26<br>சித்தம் நவமி பி.ப 3.16<br>வரை | |
| 07 | 23 | ராகு<br>சுப<br>எம<br>குளி | 8.02 - 9.32<br>12.32 - 2.02<br>11.02 - 12.32<br>2.02 - 3.32 | தசமி பி.ப. 1.13<br>சுவாமி அமிர்தம்<br>மு.ப. 8.06 | |
| 08 | 24 | ராகு<br>சுப<br>எம<br>குளி | 3.32 - 5.02<br>11.02 - 12.32<br>9.32 - 11.02<br>12.32 - 2.02 | ஏகாதசி மு.ப. 11.01<br>விசாகம் மரண கா<br>6.36 அனுசம் பி.இ 4.59 | ஏகாதசி விரதம் |
| 09 | 25 | ராகு<br>சுப<br>எம<br>குளி | 12.33 - 2.03<br>5.03 - 6.33<br>8.03 - 9.33<br>11.03 - 12.33 | துவாதசி கா 8.44<br>திரியோதசி பி.இ 6.23<br>கேட்டை சித்தம்<br>பி.இ 3.21 | பிரதோஷ விரதம் |
| 10 | 26 | ராகு<br>சுப<br>எம<br>குளி | 2.03 - 3.33<br>8.03 - 9.33<br>6.33 - 8.03<br>9.33 - 11.03 | சதுர்த்தசி பி.இ 4.06<br>மூலம் பி.இ 1.45<br>சித்தம் கொ்ப்போட்ட<br>முடிவு பி.இ 3.45 வரை | |
| 11 | 27 | ராகு<br>சுப<br>எம<br>குளி | 11.03 - 12.33<br>6.33 - 8.03<br>3.33 - 5.03<br>8.03 - 9.33 | அமாவாசை பி.இ 1.59,<br>பூராடம் பி.இ 12.17<br>சித்தம் | அமாவாசை விரதம் |
| 12 | 28 | ராகு<br>சுப<br>எம<br>குளி | 9.33 - 11.03<br>3.33 - 5.03<br>2.03 - 3.33<br>6.33 - 8.03 | பிரதமை பி.இ 12.08<br>உத்தராடம் மு.இ 11.04<br>சத்தம் | |
| 13 | 29 | ராகு<br>சுப<br>எம<br>குளி | 5.04 - 6.34<br>9.34 - 11.04<br>12.34 - 2.04<br>3.34 - 5.04 | துதியை மு.இ 10.35<br>திருவோணம் அமிர்தம்<br>மு.இ 10.09 | |
| 14 | தை<br>01 | ராகு<br>சுப<br>எம<br>குளி | 8.04 - 19.34<br>12.34 - 2.04<br>11.04 - 12.34<br>2.04 - 3.34 | திருதியை மு.இ 9.13<br>அவிட்மம் மு.இ 9.32<br>சித்தம் | தைப்பொங்கல்<br>கரிநாள் |
| 15 | 02 | ராகு<br>சுப<br>எம<br>குளி | 3.34 - 5.04<br>11.04 - 12.34<br>9.34 - 11.04<br>12.34 - 2.04 | சதுர்த்தி மு.இ 8.25<br>சதயம் மு.இ 9.22<br>மரண | சதுர்த்தி விரதம்<br>கரிநாள்<br>பட்டிப் பெங்கல் |
| 16 | 03 | ராகு<br>சுப<br>எம<br>குளி | 12.35 - 2.05<br>5.05 - 6.35<br>8.05 - 9.35<br>11.05 - 12.35 | பஞ்சமி அமிர்தம்<br>மு.இ 8.08 பூரட்டாதி மரண<br>மு.இ 9.41 கரிநாள் | |

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

| | | | | | |
|---|---|---|---|---|---|
| ஜனவரி<br>17 | 04 | ராகு<br>சுப<br>எம<br>குளி | 2.05 - 3.35<br>8.05 - 9.35<br>6.35 - 8.05<br>9.35 - 11.05 | ஷஷ்டி மு.இ 8.19<br>உத்திரட்டாதி மு.இ 10.27<br>சித்தம் | ஷஷ்டி விரதம் |
| 18 | 05 | ராகு<br>சுப<br>எம<br>குளி | 11.05 - 12.35<br>6.35 - 8.05<br>3.35 - 5.05<br>8.05 - 9.35 | ஸப்தமி மு.இ 9.01<br>ரேவதி மு.இ 11.44<br>அமிர்தம் அட்டமி<br>மு.இ 9.01ல் மேல் | |
| 19 | 06 | ராகு<br>சுப<br>எம<br>குளி | 9.35 - 11.05<br>3.35 - 5.05<br>2.05 - 3.35<br>6.35 - 8.05 | அட்டமி மு.இ 10.13<br>அச்சுவினி சித்தம்<br>பி.இ 1.29 | |
| 20 | 07 | ராகு<br>சுப<br>எம<br>குளி | 5.05 - 6.35<br>9.35 - 11.05<br>12.35 - 2.05<br>3.35 - 5.05 | நவமி மரண மு.இ 11.51<br>பரணி பி.இ 3.37 நவமி<br>மு.இ 11.51 வரை | |
| 21 | 08 | ராகு<br>சுப<br>எம<br>குளி | 8.05 - 9.35<br>12.35 - 2.05<br>11.05 - 12.35<br>2.05 - 3.35 | தசமி பி.இ 1.46<br>கார்த்திகை மரணம்<br>பி.இ 6.02 | கார்த்திகை விரதம், |
| 22 | 09 | ராகு<br>சுப<br>எம<br>குளி | 3.36 - 5.06<br>11.06 - 12.36<br>9.36 - 11.06<br>12.36 - 2.06 | ஏகாதசி பி.இ 3.52<br>ரோகிணி முழுவதும்<br>அமிர்தம | ஏகாதசி விரதம் |
| 23 | 10 | ராகு<br>சுப<br>எம<br>குளி | 12.36 - 2.06<br>5.06 - 6.36<br>8.06 - 9.36<br>11.06 - 12.36 | துவாதசி பி.இ 5.59<br>ரோகிணி கா 8.36<br>சித்தம் | |
| 24 | 11 | ராகு<br>சுப<br>எம<br>குளி | 2.06 - 3.36<br>8.06 - 9.36<br>6.36 - 8.06<br>9.36 - 11.06 | திரயோதசி முழுவதும்<br>மு.ப 11.08 மரண | பிரதோஷ விரதம் |
| 25 | 12 | ராகு<br>சுப<br>எம<br>குளி | 11.06 - 12.36<br>6.36 - 8.06<br>3.36 - 5.06<br>8.06 - 9.36 | திரயோதசி கா 7.59<br>திருவாதிரை பி.ப 1.31<br>சித்தம் | |
| 26 | 13 | ராகு<br>சுப<br>எம<br>குளி | 9.36 - 11.06<br>3.36 - 5.06<br>2.06 - 3.36<br>6.36 - 8.06 | சதுர்தசி மு.ப 9.40<br>புநர்பூசம் பி.ப. 3.36<br>சித்தம் | பூரணை விரதம் |
| 27 | 14 | ராகு<br>சுப<br>எம<br>குளி | 5.06 - 6.36<br>9.36 - 11.06<br>12.36 - 2.06<br>3.36 - 5.06 | பூரணை மு.ப. 10.58 பூசம்<br>பி.ப. 5.18 சித்தம் | தைப்பூசம் |
| 28 | 15 | ராகு<br>சுப<br>எம<br>குளி | 8.06 - 9.36<br>12.36 - 2.06<br>11.06 - 12.36<br>2.06 - 3.36 | பிரதமை மு.ப. 11.45<br>ஆயிலியம் சித்தம்<br>மா 6.29 | |
| 29 | 16 | ராகு<br>சுப<br>எம<br>குளி | 3.36 - 5.06<br>11.06 - 12.36<br>9.36 - 11.06<br>12.36 - 2.06 | துதியை பி.ப 12.02<br>மகம் மு.இ 7.12 சித்தம் | |
| 30 | 17 | ராகு<br>சுப<br>எம<br>குளி | 12.36 - 2.06<br>5.06 - 6.36<br>8.06 - 9.36<br>11.06 - 12.36 | திருதியை மு.ப 10.49<br>பூரம் மு.இ 7.26<br>அமிர்தம் | சங்கடஹர சதுர்த்தி<br>விரதம் |
| 31 | 18 | ராகு<br>சுப<br>எம<br>குளி | 2.06 - 3.36<br>8.06 - 9.36<br>6.36 - 8.06<br>9.36 - 11.06 | சதுர்த்தி மு.ப. 11.06<br>உத்தரம் மரண<br>மு.இ 7.11 | சண்டேசுரர்<br>குருபூஜை |

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஜனவரி மாதத்திற்கான விரதங்கள்



| | | | | |
|---|---|---|---|---|
| 01ம் | திகதி | செவ்வாய் | - | சங்கடஹரா சதுர்த்தி |
| 08ம் | திகதி | செவ்வாய் | - | ஏகாதசி விரதம் |
| 09ம் | திகதி | புதன் | - | பிரதோஷ விரதம் |
| 11ம் | திகதி | வெள்ளி | - | அமாவாசை விரதம் |
| 14ம் | திகதி | திங்கள் | - | தைப்பொங்கல் |
| 15ம் | திகதி | செவ்வாய் | - | சதுர்த்தி விரதம் |
| 17ம் | திகதி | வியாழன் | - | ஷஷ்டி விரதம் |
| 21ம் | திகதி | திங்கள் | - | கார்த்திகை விரதம் |
| 22ம் | திகதி | செவ்வாய் | - | ஏகாதசி விரதம் |
| 24ம் | திகதி | வியாழன் | - | பிரதோஷ விரதம் |
| 26ம் | திகதி | சனி | - | பூரணை விரதம் |
| 27ம் | திகதி | ஞாயிறு | - | தைப்பூசம் |
| 30ம் | திகதி | புதன் | - | சங்கடஹர சதுர்த்தி |

# கற்களில் சிலைகள் ஏன்?



கோவில்களில் மூலஸ்தானத்தில் உள்ள இறை வடிவம் கல்லினால் செய்யப்பட்டு காணப்படும். இது ஏன் தெரியுமா?

முதன் முதலில் இறைவனின் படைப்பில் உருவானது கல்தான். கல் தோன்றிய பிறகே மண் தோன்றியது. மலைகள் எல்லாம் கற்களால் உருவானவைதான். உயரமான மலைகளே மேகங்களை தடுத்து மேகங்களை மழை பொழிய காரணமாக அமைகின்றன.

மேலும், ஒலி, ஒளி, ஈரம், காற்று, பூமி ஆகிய பஞ்ச பூதங்களும் கல்லினுள் அடங்கியிருக்கின்றன. அதனால்தான் தெய்வத் திருமேனிகள் கற்களில் செய்யப்படுகின்றன.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**ஓவியம்**
**வரைவதில்**
**ஆர்வமுள்ளவரா**
**நீங்கள்?**



அப்படியானால் இவ் ஓவியத்தை வரைவது மிக இலகுவாகும். சரியான முறையில் முக அமைப்பிற்கேற்றவாறு கோடுகளை வரைவதோடு ஓவியத்தில் கண்கள், மூக்கு, வாய் ஆகியவற்றை முக அமைப்பிற்கமைய பென்சிலால் வரைந்து ஓவியம் முழுமை பெறுவதற்கு PASTEL வர்ணம் கொண்டு வர்ணம் தீட்டுவதோடு உங்கள் திறமையை வெளிக்கொண்டு வாருங்கள்.

கே. யோகேந்திரன்

# PORTRAIT
## IN PASTEL / PENCIL





Flex Group நிர்வாக இயக்குனர் திரு P.விஜய் அவர்களின் ஓவியம்



# PORTRAIT
## IN PASTEL / PENCIL



# ஓவியம்

**உங்கள் மனதைக் கவர்ந்தவர்களுக்கான சிறந்த பரிசு**

Call : 0777 614 186 | E-mail : flexvijay@sltnet.lk

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




# வர்ணம் தீட்டுங்கள்!




சிறுவர்களுக்கான

**ART CLASSES**

வயது - 6-12 வரை

இவ் வகுப்பிற்கு 10 சிறுவர்கள் மாத்திரமே சேர்த்துக் கொள்ளப்படுவர்.

சனிக்கிழமைகளில்

காலை 9.00 மணி முதல் 12.00 மணி வரை

flex Institute
Step Towards a Bright Future

Call : 0777-555026
4, IBC Road, Wellawatte.


## இடைவெளியை நிரப்புங்கள்!

01. அனுமனின் மறுபெயர்

| | | |
|---|---|---|
| மா | | தி |

02. தமிழ் கடவுள்

| | | | |
|---|---|---|---|
| மு | | க | |

03. ஆத்திசூடி இயற்றியவர்

| | | | |
|---|---|---|---|
| | வை | | ர் |

04. பஞ்சபாண்டவரில் இளையவன்

| | | | | |
|---|---|---|---|---|
| ச | | தே | | ன் |

05. முக்கண் முதல்வன்

| | | | | | |
|---|---|---|---|---|---|
| சி | | பெ | | மா | |

விடை: 74 ஆம் பக்கம்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org





flex

## உதவும் கரங்கள்

ஒவ்வொரு வருடமும் வறுமையில் வாடுகின்ற குடும்ப மொன்றை தேர்ந்தெடுத்து அவர்களது தேவையினை பூர்த்தி செய்யும் Flex Group நிர்வாக இயக்குனர் திரு P.விஜய் அவர்கள் 2013 ஆண்டுக்காக வறுமையில் வாடும் குடும்ப மொன்றை தேர்ந்தெடுத்து அவர்களது குழந்தைகளின் கல்வி தேவைக்காக ஒரு வருடத்திற்கான கல்வி உபகரணங்களை வழங்கினார்.

டிசம்பர் மாத FLEX அருளில் JEYECHANDRANS கேள்வி பதில் போட்டியில் கேட்கப்பட்ட கேள்விக்கு "41 நாட்கள்" என்ற சரியான விடையைக் கூறி குலுக்கல் முறையில் தெரிவான இல.459, காலி வீதி, வெள்ளவத்தையைச் சேர்ந்த திரு கிங்ஸ்லி அல்போன்சஸ் அவர்களுக்கு JEYECHANDRANS வழங்கிய பட்டுப்புடவை ஒன்று அருள் இதழ் ஆசிரியர் கே. யோகேந்திரன் அவர்களால் வழங்கப்பட்டது. அருகில் FLEX PUBLICATIONS நிர்வாக இயக்குனர். திரு P.விஜய் அவர்கள்.







டிசம்பர் மாத FLEX அருளில் CD WORLD MUSIC CENTRE கேள்வி பதில் போட்டியில் கேட்கப்பட்ட கேள்விக்கு"கொக்கட்டிச்சோலை" என்ற சரியான விடையைக் கூறி குலுக்கல் முறையில் தெரிவான இல.369/8 அளுத் மாவத்தை, கொழும்பு 15ஐ சேர்ந்த திருமதி V.யோக ஸ்ரீ சாயி அவர்களுக்கு CD WORLD MUSIC CENTRE வழங்கிய AUDIO CD ஒன்று அருள் இதழ் ஆசிரியர் கே. யோகேந்திரன் அவர்களால் வழங்கப்பட்டது. அருகில் FLEX PUBLICATIONS நிர்வாக இயக்குனர். திரு P.விஜய் அவர்கள்.

பிப்ரவரி மாதத்திற்கான விளம்பரங்கள் தற்போது ஏற்றுக்கொள்ளப்படுகின்றது

Flex Publications
04, IBC Road, Wellawatte. Tel: 0777614 188

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பாயும் வேண்டாம்! நோயும் வேண்டாம்!



கிருபானந்தவாரியார்

பாயும், நோயும் இன்றி ஆரோக்கியமாக வாழவது அவசியமாகும். நீண்ட நாள் வாழ்வது முக்கியமன்று.

பழங்காலத்தில் தேரையர் என்ற ஒரு சித்தர் இருந்தார். இவர் சிறந்த மருத்துவர். தீராத தலைவலியுடைய ஒரு நோயாளியின் தலையில் இருந்த தேரையை எடுத்தபடியால் இவர் தேரையர் என்று பேர் பெற்றார்.

நோயின்றித் திடமான உடம்புடன் வாழ நாம் எப்படி நடக்க வேண்டும் என்று கீழ்க்காணும் சில விதிமுறைகளைக் கூறுகின்றார்:

உடலின் நலத்துக்காகப் பாலருந்த வேண்டும் எண்ணெயிட்டுக் கொண்டால் வென்னீரில் குளிக்க வேண்டும்

பகல் புணர்ச்சியும் பகல் உறக்கமும் கூடாது. தன்னைவிட மூத்த பெண்ணை மணந்து கொள்ளக் கூடாது.

காலை வெய்யிலில் இருக்க கூடாது மலஜலங்களை அடக்கப்படாது. ஜீவரத்தி னமாகிய வீரியத்தைச் செலவழிக்கக் கூடாது. இடப்புறமாகப் படுத்துத் துயில வேண்டும். கிழங்குகளை உண்ணுதல் கூடாது. புளித்த தயிர் உண்ண வேண்டும்.

தேவாமிர்தம் போல் சுவையுடையதாக இருப்பினும் பசித்தாலொழியப் புசிக்கக் கூடாது.

இவ்வாறு இருந்தால் எமனுக்கு என்னவேலை?

## நல்லதுசெய்யும் நல்லவை!

பூஜை அறை இருந்தால் பூஜை செய்யலாம்! நாம் செய்வது நமது குழந்தைகளுக்கு வழிகாட்டியாக இருக்கும்.

கூட்டுப் பிரார்த்தனை (பாடலில் செய்யலாம்) ஒவ்வொரு செய்கை முன்பும் "கிருஷ்ணா," "நமச்சிவாயம்" நாமங்களைக் கூறினால் நாளடைவில் அது வழக்கத்திற்கு வந்து விடும். பிறகு ஒரு காரியம் கடவுள் நாமம் சொல்லாமல் செய்ய முடியாதது போல ஆகிவிடும்.

சிறுவர்களை குளிக்காமல் சாப்பிட விடாதீர்கள்! கண்டிப்பு அதில் இருக்கட்டும். சிறு பிள்ளைகள் ஆனாலும் குளிக்க வைத்து, கடவுள் படம் முன்னால் நமஸ்கரிக்க விடுங்கள். இவை எல்லாம் ஏதோ காரணமற்ற நியதிகள் என்று நினைக்காதீர்கள். இவை யாவும் உங்கள் மனத்தைத் திருத்துகின்றன. மனதைக் கூர்மைப்படுத்துகின்றன. வீணாகப் பல நினைவுகளில் செல்ல விடாமல் காப்பாற்றுகின்றன.

வீட்டைப் பற்றிய கவலைகள், வெளிக் கவலைகள் பல அவ்வப்போது வந்து கொண்டேயிருக்கும். இவைகளை அடக்க ஒரு பரிகாரம் இருக்கிறது.சிறிது நேரம் அவற்றை நினைத்துவிட்டு, உடனே கடவுளை அழையுங்கள்.

"இன்னின்ன பிரச்சனைகள் வந்திருக்கின்றன. என்ன செய்வது என்று தெரியவில்லை உன் மீது பாரத்தைப் போட்டு விட்டேன்! நீ தான் என்னை காத்தருள வேண்டும்!" என்று கூறுங்கள்!

எடுக்க வேண்டிய முயற்சிகளை மட்டும் எடுங்கள்!

கடவுள் மேல் பாரத்தைப் போட்டு விட்டதால் பிறகு நடப்பதைப் பாருங்கள்.

அதிசயமாக உங்கள் பிரச்னைகள் தீர்வுக்கு வர ஆரம்பிக்கும்! நீங்கள் நினைக்காத வழியில் அதற்கு தீர்வு வந்து சேரும்.

நம் சுமையைத் தூக்க ஒருவர் இருக்கும்போது ஏன் கவலைப்படுகிறீர்கள்?

"உன் மீது சுமையை போட்டு விட்டேன்!" என்று தைரியமாக இருங்கள்.

உடனே கவலையை மறவுங்கள். இடையிடையே கடவுளை மட்டும் நினையுங்கள்.

அற்புதங்கள் நிகழ்வதை காண்பீர்கள்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஜனவரி மாதத்திற்கான ராசிபலன்




முதல் மாதமே முதல் தரமான மாதமென்பேன். 13-ஆம் தேதிக்கு மேல் சூரியன் பத்தாம் வீட்டிற்குப் பாங்காகச் செல்வதனால் முத்தான பலன் உண்டு. முயற்சிகளில் வெற்றி உண்டு. செவ்வாயும் ஜீவன ஸ்தானத்தில் சிறப்பாக உலவுவதால் எவ்வாறேனும் நீங்கள் ஏற்றங்கள் பெற்றிடுவீர். குடும்பத்தில் குதூகலம் கொடி கட்டிப் பறக்குமென்பேன். நெடுந்தூரப் பயணத்தால் நிறைவு காண்பீர்கள். ஆடை ஆபரணச் சேர்க்கையுண்டு. கிட்டத்தட்ட 70% வரை நல்ல பலன்களை நீங்கள் அடைய முடியும். இந்த முதல் மாதத்திலேயே உங்கள் முத்திரையைப் பதிய வைத்துவிடுவீர்கள்.

**சாதகமான தேதிகள்:** 1, 3, 5, 7, 8, 12, 13, 14, 19, 24, 31.




இந்த முதல் மாதத்தில் புதன், சுக்கிரன் ஆகிய இருவரது சஞ்சாரம் சாதகமாக அமைந்திருப்பதால் இந்த முதல் மாதத்திலேயே உங்கள் வாழ்க்கைப் பயணத்தில் வளர்ச்சி பல கண்டுவிடுவீர்கள். இந்த 2013-ஆம் வருடத்திற்காக நீங்கள் வகுத்து வைத்த பெரும்பாலான இலட்சியங்களை அடைவதற்கான நம்பிக்கையும் நல்ல துணையும் கிடைத்துவிடும். வசந்தம் உங்கள் வாசல் வரும். வாய்ப்புக் கதவைத் தட்டும். கும்பிடப்போன தெய்வம் குறுக்கே வரும். உங்கள் காட்டில் அடைமழை பொழியும். உங்கள் கொடி உச்சத்தில் பறக்கும். 65% வரை நன்மைகளை அடைய முடியும்.

**சாதகமான தேதிகள்:** 1, 4, 5, 9, 10, 12, 15, 16, 21, 22, 25, 30, 31.




சுக்கிரனும் புதனும் சாதகமாக உலவுவதால் இந்த முதல் மாதமே வருடம் முழுவதற்குமான உற்சாக ஊட்டச் சத்தை உங்களுக்கு வழங்கிவிடும். சக்கரம் போல் சுழன்று செயல்பட்டு உங்கள் காரியத்தைச் சாதித்து விடுவீர்கள். சர்க்கரைச் சேதியொன்று உங்களைச் சந்திக்க வருமென்பேன் அக்கறை உள்ள உறவினரால் அனுகூலம் பல உண்டு. சூரியன் 7, 8-ஆம் இடங்களில் உலவுவதால் சிலபல சங்கடங்களையும் எதிர்கொள்ளவே நேரிடும். உடல் நலத்தில் கவனம் தேவை. ஏறக்குறைய 55% வரை நன்மைகள் அடைவீர்கள்.

**சாதகமான தேதிகள்:** 1, 4, 5, 10, 15, 22, 27, 29, 31.




ஆரம்ப மாதமே அசத்தலான மாதம் தான் ஸ்வாமி. சத்ரு ஸ்தானத்தில் சூரியனார் உலவிக் கொண்டிருப்பதனால் பித்ருக்களுடைய பேரருளால் பெரிய நன்மை அடைவீர்கள். தொடுத்த பாணமெல்லாம் குறி தவறா. எடுத்த காரியங்களில் எண்ணம் போல் வெற்றியுண்டு. கொடுத்த கடன் ஒன்று திரும்பி வரும். படுத்த படுக்கையாய்க் கிடந்தோரும் பளிச்சென்று எழுந்து நடமாடுவர். நடுத்தெருவில் அலைந்தோருக்கும் நல்லதொரு மாற்றம் வரும். 60% அற்புதமான மாதமிது!

**சாதகமான தேதிகள்:** 1, 4, 5, 6, 7, 10, 13, 15, 17, 25, 30, 31.




வருடத்தின் ஆரம்பத்திலேயே உங்கள் காட்டில் அடைமழை பொழியத் தொடங்கி விட்டது. இந்த 2013 முழுவதும் உங்களுக்கான வருடம் என்பதற்கான நம்பிக்கையை இந்த முதல் மாதமே வழங்கிவிடும். ஆடம்பர அலங்காரப் பொருள்களின் சேர்க்கை உண்டு. மேடை ஏறித் தங்கள் மேன்மையை நிரூபிக்கும் வாய்ப்புச் சிலருக்குக் கிட்டும். முன்னேற்றப் பாதையில் அழுத்தமாக உங்கள் சுவட்டினைப் பதித்து விடுவீர்கள். புதிய வரலாறு படைப்பதற்கான பூர்வாங்க வேலைகளைத் தொடங்கி விடுவீர்கள். 65% முதல் 70% வரையிலான நன்மைகளை அடைய முடியும்.

**சாதகமான தேதிகள்:** 1, 3, 5, 6, 16, 17, 20, 22, 23, 31.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஜனவரி மாதத்திற்கான ராசிபலன்




சூரியனின் சஞ்சாரம் சரியில்லை என்றாலும், சுக்கிரனும் புதனும் அதனை ஈடுசெய்து விடுவதால், இந்த முதல் மாதமே உங்களுக்குப் பல இன்பகரமான அனுபவங்களைக் கொடுப்பதாகவே அமையும். ஆடை அணிகலன்களின் சேர்க்கை உண்டாகும். புதிய உற்சாகமும் தெம்பும் ஊற்றெடுக்கும். நண்பர்களோடு உல்லாசமாகப் பொழுது கழியும். குடும்பத்தில் குதூகலம் நிரம்பித்ததும்பும். வீணான அலைச்சல்களும் விரையங்களும் ஏற்படலாம். கவனம் தேவை. 50% வரை அருமையான மாதமிது!

**சாதகமான தேதிகள்:** 1, 3, 4, 11, 19, 22, 31.




இந்த முதல் மாதமே உங்களை முன்னணிக்குக் கொண்டு வரும் மாதமாக அமையும். நினைத்ததெல்லாம் கிடைத்து விடும். எடுத்ததெல்லாம் ஜெயித்து விடும். கனவுகள் பலித்துவிடும். கைத்தொழில் செழிப்படையும். இந்த 2013ஆம் வருடம் முழுக்க விறுநடை போட்டு வெற்றி பல குவித்திடலாம். என்னும் நம்பிக்கை பிறந்துவிடும். நல்லுறுதி வாய்த்துவிடும். மொத்தம் 55% வரை சிறப்புகளை அடைவீர்கள்.

**சாதகமான தேதிகள்:** 1, 4, 5, 11, 12, 19, 22, 28, 30.




இந்த முதல் மாதமே பல கிரகங்கள் சாதகமாகச் சஞ்சரிப்பதால், சோலைத் தென்றலாய்ச் சுதந்திரமாய் உலா வருவீர். காலை முதல் மாலை வரை களிப்புடனே இருந்திடலாம். வாலைச் சுருட்டிக் கொள்வர், வஞ்சித்த பகைவரெல்லாம்! கோலை நாட்டிடலாம்! குறிக்கோளை அடைந்திடலாம். வேலையிலே உயர்வுண்டு. விடியலினைப் பார்த்திடலாம். மொத்தம் 65% வரை நன்மைகள் உண்டு.

**சாதகமான தேதிகள்:** 1, 4, 6, 10, 14, 18, 24, 30, 31.




புதனும், சுக்கிரனும் சாதகமாகச் சஞ்சரிப்பதால் இதமான சம்பவம் எத்தனையோ நடைபெறும். பதமான வார்த்தை சொல்லி, பலவிதமாய் நன்மை பெறுவீர்கள். சுகமாகப் பொழுது போக்கிச் சுகித்திருப்பீர்கள். பெண்ணொருத்தி பிரியத்தால் பெரு மகிழ்ச்சி அடைவீர்கள். மண் விளைச்சல் மகத்தான லாபம் தரும். இந்த வருடத்தின் லட்சியமாகக் கொண்ட விஷயத்தின் பலவற்றை இந்த முதல் மாதத்திலேயே அடைந்து விடுவீர்கள். மொத்தம் 65% வரை அனுகூலங்கள் உண்டு.

**சாதகமான தேதிகள்:** 1, 4, 7, 10, 17, 19, 21, 24, 27, 31.




இந்த முதல் மாதத்தில் கிரகங்கள் ஏற்ற விதத்தில் சஞ்சரிப்பதால் உறுதியுடன் செல்படுவீர். உன்னதங்கள் காண்பீர்கள். இந்த வருடத்திற்கான திட்டங்களைச் சிறப்பாகத் தீட்டி, நம்பிக்கையுடன் செயல் படுத்தத் தொடங்கி விடுவீர்கள். ஆடை ஆபரணச் சேர்க்கையுண்டாகும். மேடையேறி மேன்மை அடையும் பாக்கியம் சிலருக்கு உண்டு. தேடிய பொருள் ஒன்று உங்களைத் தேடி வந்து சேருமென்பேன்! வாடிய பயிராய் இருந்தவர்கள் மறுமலர்ச்சி காண்பார்கள். மொத்தம் 55% நன்மைகளை அள்ளிக் கொடுக்கின்றன கிரகங்கள்!

**சாதகமான தேதிகள்:** 2, 5, 6, 10, 11, 12, 18, 21, 26, 31.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஜனவரி மாதத்திற்கான ராசிபலன்




இந்த ஜனவரி மாதத்தைச் சகாப்தம் படைக்கும் மாதம் என்று சாற்றுகிறான் செங்கதிரோன். 11-ல் சஞ்சரிக்கின்ற அந்தச் சூரியனால் சிறந்தவர்களின் சிநேகம் கிட்டும். சிறிதும் கலங்காமல் உங்கள் இலட்சியத்தை நோக்கிப் பயணிப்பீர்கள். பிறந்த குடிக்குப் பெருமை சேர்ப்பீர்கள். அறங்கள் பல செய்து ஆத்ம திருப்தி அடைவீர்கள். வரங்கள் கிடைத்துவிடும். உங்கள் வார்த்தைகள் பலித்துவிடும். அரங்கன் திருவருளால் அடுக்கடுக்காய் மேன்மை வரும். 60% வரை நன்மையுண்டு.

சாதகமான தேதிகள்: 1, 2, 6, 7, 8, 10, 11, 16, 19, 22, 24, 31.




சூரியன் 10, 11ஆம் இடங்களில் சஞ்சரிப்பதால் இந்த முதல் மாதமே நீங்கள் முத்திரை பதிக்கும் மாதமாக அமையும். ஆனந்த அலைகளில் மிதந்திடுவீர். பேரின்ப நதியில் நீந்திடுவீர். கோதையர்கள் தொடர்பாலே குதூகலத்தை அடைவீர்கள். மேதையர்கள் நட்புண்டு. மிகப் பெரிய லாபம் வரும். விருந்துக்குப் போய் வருவீர். விருதுகள் வாங்கிடுவீர். விசேஷங்கள் நடத்திடுவீர். கரும்பைப் போல் இனித்திருக்கும் கணவன் - மனைவி உறவு. 60% வரை அடையலாம் அனுகூலங்களை!

சாதகமான தேதிகள்: 1, 2, 4, 6, 10, 12, 18, 27, 29.

**இடைவெளியை நிரப்புங்கள்!**

01.மாருதி 02.முருகன் 03.ஔவையார்
04.சகாதேவன் 05.சிவபெருமான்


**ஆன்மீக வினாவிற்கான விடையை கூறி பரிசு பெறுங்கள்!**



லட்சுமணனின் மனைவியின் பெயர் என்ன?
- பார்வதி
- ஊர்மிளை
- பானுமதி

Call Now & Win
பக்தி பாடல்கள் Audio CD

(1st January-14th January)

Call Monday - Friday From 9am - 5pm.
Flex Publications 0778 335 552

முன்னணி பாடகர்கள் பாடிய பக்திப்பாடல்கள் இங்கு கிடைக்கும்

CD WORLD MUSIC CENTRE
No. 298, Galle Road, Wellawatte.
Tel: 0112 554 481

இப்பொழுது
**வெள்ளவத்தையில்**



உங்கள் வசதிக்காக... சகல விதமான விளம்பரங்களும் கையளிக்கலாம்.

வர்த்தகம் பெருக விளம்பரம் செய்க....

FLEX Graphic
4, IBC Road, Wellawatte.
Call: 0777-555026

# நாமும் போகலாம் ஆன்மிக சுற்றுலா!

**சென்னை கோவில்கள்**
*Daily Departure

> கபாலீஸ்வரர் கோவில்
> பார்த்தசாரதி கோவில்
> காளிகாம்பாள் கோவில்
> மருந்தீஸ்வரர் கோவில்
> வடபழனி ஆண்டவர் கோவில்
> வடசபரிமலை
> பாம்பன் சுவாமிகள் கோவில்
> சாய்பாபா கோவில்
> ராமகிருஷ்ணர் கோவில்
> திருவள்ளுவர் கோவில்
> விவேகானந்தர் கோவில்

- மதுரை மீனாட்சி அம்மன் கோவில் ▪ காஞ்சி காமாட்சியம்மன் கோவில்
- ஸ்ரீ ரங்கம், திருப்பதி, திருத்தணி ▪ முருகனின் ஆறுபடை கோவில்
- பிள்ளையார் பட்டி – காரைக்குடி

flex Travels & Tours
Total Travel Solution
(A Subsidiary of Flex Graphic)

3 Days / 2Nights Cost Includes
> Return Air Tickets > A/C Transport > Accommodation
Rs. 19,990/=

4, IBC, Road, Wellawatte.
Hotline: 0777-555026 Conditions apply


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பக்திக் கதைகள்

- யோகா

## குருவை மிஞ்சிய சிஷ்யர்!



"குருவே!" தன் சீடனின் குரலைக் கேட்டு குரு தலை நிமிர்ந்து பார்த்தார். எதிரே பவ்யமாகநின்றிருந்தான் சீடன். பரந்த நெற்றி, தலையில் கட்டுக் குடுமி. தீர்க்கமான கண்கள். ஆனால் அந்தக் கண்களில் நீர்.

"அழுகிறாயா? குழந்தாய்! எதற்கு அழுகை?"

"குருவே! தாங்கள் ஒரு மேதாவி. இருந்தாலும் அடியேனுக்குத் தங்களிடம் சிறு வருத்தம். தங்களின் சித்தாந்தம் மற்றும் உபதேசங்களை அடியேன் குறை கூறுவதாக தயவு செய்து எண்ண வேண்டாம். நான்.."

"போதும். விஷயத்துக்கு வா."

குருவுக்குக் கொஞ்சம் கோபம் அதிகரித்தது. இந்த சிஷ்யன் பயமறியாதவன். உள்ளதை ஒளிக்காமல் கூறும் தைரியம் கொண்டவன்.

"குருவே! தங்களைப் போன்ற மகானின் திருவாயினின்று இப்படிப்பட்ட சொற்கள் வரலாமா?"

"போதும். உன் அதிகப் பிரசங்கித்தனம் என்று ஏற்கெனவேசொல்லிவிட்டேன். நீ எதைப் பற்றிக் குறிப்பிடுகிறாய்?"

அவர் கொஞ்சம் ஆத்திரப்பட்டாலும் சீடனிடம் பணிவு கிஞ்சித்தும் குறையவில்லை.

"கூறுகிறேன் குருவே! சாந்தோக்ய உபநிடதத்தின் முதல் அத்தியாயம், ஆறாவது பகுதியின் ஏழாவது மந்திரமான, "தஸ்ய யதா கப்யாஸம் புண்டரீக மேவமட்சிணி" என்ற தொடரில் இடம் பெற்றுள்ள "கப்யாஸம்" என்ற சொல்லுக்கு சற்று முன் ஒரு மாணவனுக்கு விளக்கம் அளித்தீர்களே."

"ஆமாம். அதற்கென்ன? "கப்யாஸம்" என்றால் "குரங்கின் ஆசனவாய்" என்று பொருள். பரமனின் இரு கண்களை அதனுடன் ஒப்பிட்டேன். இதில் என்ன குறை கண்டாய்? கப்யாஸத்துக்கு வேறொரு அர்த்தம் இருக்கிறதா?"

"கப்யாஸத்துக்கு வேறொரு அர்த்தமும் இருக்கிறது குருவே! அதை என்னால் சொல்ல முடியும்."

"எங்கே சொல்லேன் பார்ப்போம்."

"குருவே! "ஆஸ" என்றால் மலர்தல் என்று அர்த்தம். "கப்யாஸம்" என்றால் "சூரியனால் மலர்ந்தது" என்று பொருள். சகல கல்யாண குணங்களும் அழகும் நிரம்பிய பரமனின் திருக்கண்கள், சூரியனின் கதிர்களால் மலர்ந்த தாமரை போல் அழகாகத் திகழ்ந்தன என்றுதான் பொருள்கொள்ள வேண்டுமே தவிர பரமனின் கண்களை குரங்கின் ஆசனவாயுடன் ஒப்பிடலாமா?"

அந்தச் சீடரே ஸ்ரீ ராமானுஜர். பிற்காலத்தில் அவர் வேதாந்த நெறிக்கு காவிய நடையில் மெருகூட்டினார். விசிஷ்டாத்வைதம் என்ற தத்துவ தரிசனத்தை உலகுக்கு ஈந்தார். ஸ்ரீ பாஷ்யம் முதலான ஒன்பது நூல்களை அற்புதமாக இயற்றினார்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# தங்கக் கிண்ணத்தை வீசி எறியுங்கள்

ஏழை எளியவர்களிடம் கருணை கொண்டு தான தர்மங்கள் வழங்குவதில் பேர் பெற்றவர் பஞ்சபாண்டவர்களில் மூத்தவரான தருமர். இதனால் அவர் மனதில், "தர்மம் செய்வதில் தனக்கு இணையாருமே இல்லை" என்ற கர்வம் படிந்தது. தருமரின் உள்ளத்தில் இருந்த கர்வத்தைப் போக்கத் திருவுளம் பூண்டார் ஸ்ரீ கிருஷ்ண பரமாத்மா.

தருமரின் இருப்பிடத்துக்கு வந்த ஸ்ரீ கிருஷ்ணன், தருமருடன் உரையாடியவாறே வெளியே நடந்தார். இருவரும் பாதாளலோகத்தை அடைந்தனர். பாதாள லோகத்தை பிரகலாதனின் பேரனான மகாபலிச் சக்கரவர்த்தி ஆண்டு வந்தான். அவனும் தான, தர்மங்களில் அதிக நாட்டம் உள்ளவன்.

பாதாள லோகத்தின் முக்கியமான தெருக்கள் வழியாக கிருஷ்ணனும் தருமரும் நடந்து கொண்டிருந்தனர். நகரின் செல்வச் செழிப்பையும், வனப்பையும் கண்டு பிரமித்த தருமருக்கு தாகம் ஏற்பட்டது. அப்போது அருகிலிருந்த வீட்டில் தண்ணீர் கேட்டார்.

மறுகணம் அந்த வீட்டிலிருந்தவள் தங்கக் கிண்ணம் ஒன்றில் குடிநீர் எடுத்து வந்து கொடுத்தாள். தருமர் தண்ணீரை அருந்திய பிறகு அந்தப் பெண்ணிடம் தங்கக் கிண்ணத்தை நீட்டினார்.

"மிக்க நன்றி அம்மணி! இந்தக் கிண்ணத்தை பத்திரமாக எடுத்து வையுங்கள்."

"ஐயா! எங்கள் ராஜ்ஜியத்துக்கு இப்போதுதான் முதன்முறையாக வருகிறீர்களோ? எங்கள் ராஜ்ஜியத்தில் ஒரு தடவை உபயோகித்த பொருளை வீசி எறிந்துவிடுவோம். அது, தங்கமாகவே இருந்தாலும் அப்படித்தான். ஆகவே, தாங்களே அந்தத் தங்கக் கிண்ணத்தை வீசி எறிந்துவிட்டுச் செல்லுங்கள்" என்று கூறிவிட்டுச் சென்றுவிட்டாள்.

மகாபலிச் சக்கரவர்த்தி ஆளும் நாட்டின் செல்வச் செழிப்பை எண்ணி மிகவும் வியப்படைந்தார் தருமர். மீண்டும் பேசியவாறே ஸ்ரீ கிருஷ்ணனும் தருமரும் மகாபலியின் அரண்மனையை அடைந்தனர். பொன்னால் ஆன மணிகள் பதிக்கப்பட்ட அரியணையில் மகாபலி வீற்றிருந்தான். அரண்மனைக்குள் நுழைந்த ஸ்ரீ கிருஷ்ண பரமாத்மாவையும் தருமரையும் முகம் மலர வரவேற்றான் மகாபலி.

"மகாபலி! இவர் தருமபுத்திரர். குறைந்த பட்சம் தினமும் ஐநூறு பேருக்காவது தவறாமல் அன்னதானம் செய்வது இவர் வழக்கம்" என்று ஸ்ரீ கிருஷ்ணன், தருமரை அறிமுகப்படுத்தினார்.

அவ்வளவுதான்! மகாபலியின் முகம் இறுகியது.

"போதும்! போதும்! இவரை இவரைப் பற்றி மேற்கொண்டு எதையும் என்னிடம் கூற வேண்டாம். நிறுத்துங்கள்" என்று கோபமாகக் கூறி, தன் இரு கைகளாலும் செவிகளைப் பொத்திக்கொண்டான் மகாபலி. மகாபலி எதற்காகக் கோபம் கொள்கிறான் என்று கிருஷ்ண பரமாத்மாவுக்கா தெரியாது!

"மகாபலி! நீ திடீரென்று இவர் மீது கோபம் கொள்கிறாய்? எனக்கு ஆச்சரியமாக இருக்கிறதே."

"மதுசூதனா! எனது நாட்டில் கொள்வார் எவரும் இல்லாமையால் கொடுப்பாரும் இல்லை என்பது தாங்கள் அறியாததா? இங்கு தானம் பெற்ற வாழும் நிலையில் எவரும் இல்லை. இவர் நாள்தோறும் ஐநூறு பேருக்கு அன்னதானம் செய்கிறார் என்றால், இவரது ராஜ்ஜியத்தில் இன்னும் ஏழைகள் இருக்கிறார்கள் என்றல்லவா அர்த்தம்! இதிலிருந்தே இவர் அரசாட்சி செய்யும் லட்சணம் தெரிகிறதே. இப்படிப்பட்ட ஒருவரைப் பார்க்கவோ இவரைப் பற்றி மேலும் தெரிந்து கொள்ளவோ நான் விரும்பவில்லை.இந்தக் கணமே இவரை இங்கிருந்து புறப்படச் சொல்லுங்கள். என்றார்.

மகாபலியின் பேச்சு பொட்டிலறைந்தாற் போலிருந்தது தருமருக்கு, தருமர் மனத் தெளிவு பெற்றார். தருமர் மனதில் கர்வம் விஸ்வரூபம் எடுக்குமுன் அதை நீக்கிய திருப்தியுடன் ஸ்ரீ கிருஷ்ண பரமாத்மா அங்கிருந்து கிளம்பினார்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஆத்மாவை அறிய முயன்ற அரசன்



பிரம்மதேசத்தின் மன்னர் நீதிநெறி தவறாதவர். அறம் உரைக்கும் அமைச்சர்கள் மற்றும் ஞானவான்களான ஆன்றோர்கள் பலரின் வழிகாட்டுதலுடன் செம்மையாக ஆட்சி புரிந்த மன்னருக்கு நீண்ட காலமாக ஒரு சந்தேகம்.

வனத்தில் வசிக்கும் தவசீலர்களான மகரிஷிகள் தன் சந்தேகத்தைத் தீர்த்து வைப்பார்கள் என்ற எண்ணத்துடன், ஒருநாள் பரிவாரங்கள் புடைசூழ மகரிஷிகளின் ஆசிரமத்துக்குச் சென்றார். மகரிஷிகள் மன்னரை முகம் மலர வரவேற்று ஆசீர்வதித்தனர்.

"மகரிஷிகளே! நீண்ட காலமாக என்னுள் இருக்கும் ஓர் ஐயப்பாட்டுக்கு விளக்கம் பெற வேண்டிய இங்கு வந்தேன்."

"உனது சந்தேகம் என்ன மன்னா? சொல். எங்களால் இயன்ற விளக்கத்தைத் தருகிறோம்."

"ஆத்மா என்பது எது? அதன் தத்துவம் என்ன? பல்வேறு நூல்களைப் படித்தும், பண்டிதர்கள் பலரிடம் கேட்டும் தெளிவான விளக்கம் கிடைக்கவில்லை. தாங்கள் உதவ வேண்டும்."

மகரிஷிகள், இந்தக் கேள்வியை சற்றும் எதிர்பார்க்கவில்லை. எனினும், மன்னரின் சந்தேகத்தைப் போக்க முயன்றனர். அனைவரும் ஒன்றுகூடி தாங்கள் கற்றதையும் ஆராய்ந்ததையும் தங்களுக்குள் விவாதித்த பிறகு ஆத்ம தத்துவம் குறித்த கருத்துகளை மன்னருக்கு விளக்கினர். ஆனால், அதில் திருப்தியடையாத மன்னர் வருத்தத்துடன் அரண்மனைக்குத் திரும்பினார்.

வழியில் ஓரிடத்தில் திடீரென மன்னரின் ரதம் நின்றது. காரணத்தைத் தெரிந்துகொள்ள திரையை விலக்கி வெளியே பார்த்த மன்னர் அருவருப்புடன் முகம் சுளித்தார். மிகவும் குள்ளமாக, கருப்பு நிறத்துடன்,

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கோணல்மாணலாக ஆங்காங்கே வளைந்திருந்த மேனியுடன் அவலட்சணமான ஒருவன் பாதையின் நடுவில் அமர்ந்தபடி இளைப்பாறிக் கொண்டிருந்தான். "இறைவனின் படைப்பில் இப்படியும் ஒரு பிறவியா?" என்று மன்னர் நினைத்தார்.

"அடேய்! இளைப்பாற உனக்கு வேறு இடம் கிடைக்கவில்லையா? பாதையை விட்டு விலகு, அரச தண்டனைக்கு ஆளாகாதே." என்று தேரோட்டி கடிந்துகொண்டான். தேரோட்டி சொன்னதை அவன் சற்றும் பொருட்படுத் தவில்லை. அலட்சியமாகப் புன்னகைத்தான்.

"வேண்டுமானால் ரதத்தைத் திருப்பி உன் மன்னனை வேறு வழியில் அழைத்துச் செல்." என்றான்.

தேரோட்டி பதில் சொல்ல வாயெடுக்க முன் அவனைத் தடுத்த மன்னர் ரதத்தை குரூபியின் அருகே நகர்த்துமாறு பணித்தார். ரதம், அந்தக் குரூபியை நெருங்கி நின்றது.

"குரூபிப் பிண்டமே! என்ன தைரியம் இருந்தால், எனக்கே ஆணையிடுவாய்?" மன்னன் கோபத்துடன் கர்ஜித்தார்.

"மன்னிக்கவும் மன்னா! நெடுந்தூரம் பயணம் செய்ததால் நான் களைப்பாக இருக்கிறேன். ஆனால், ரதத்தில் பயணிக்கும் தங்களுக்கு, வேறு வழியாகச் செல்வதில் சிரமம் இருக்காதே!" இதைக் கேட்டதும் மன்னரின் கோபம் கூடியது.

"இந்த விகார பிண்டத்தைத் தூக்கி அப்பால் போடுங்கள்!" மன்னரின் ஆணைப்படி அந்த குரூபியை நெருங்கிய காவலர்கள், செயலற்று நின்றனர். இது எதையும் அவன் பொருட்படுத்தியதாகத் தெரியவில்லை.

"மன்னா! ஆத்திரப்படுவதில் அர்த்தமில்லை. பெரும் வேந்தரான தாங்கள் எளியோனான என்னை அப்புறப்படுத்திவிட்டு இந்த வழியில் செல்வதால் ஆகப்போவது என்ன?"

"ஒன்றும் இல்லை. ஆனாலும் இந்த வழியில்தான் செல்லப்போகிறேன் வழியை விடு."

"எந்த வழியில் சென்றால், ஒரு லாபமும் இல்லையோ அந்த வழியில், தெரிந்தே செல்வது அறிவீனம் இல்லையா?

இந்த வார்த்தைகளை அந்தக் குரூபி சொன்னதுதான் தாமதம். யாரோ ஒருவர் ஓங்கி சம்மட்டியால் அடிப்பது போலிருந்தது மன்னருக்கு. திடீரென்று அந்த மகான் தனக்கு ஞானோபதேசம் அளித்ததைப் புரிந்துகொண்டார்.

"நீங்கள் என்ன கூறுகிறீர்கள்?"

"கண்ணை மூடிக்கொண்டு செல்பவருக்கு வழியில் எதுவும் புலப்படாது. அப்போது எப்படி ஞானிகள் சொல்வது புரியும்? அவர்கள் எப்படி வழிகாட்டுவார்கள்? மக்கள் ஓயாமல் ஓடிக்கொண்டிருக்கும் பாதையின் குறுக்கே நிறுத் திடீரென்று வழிமறித்துத்தான் ஞானிகள் வழிகாட்டுவார்கள் மன்னா! என்ன பிரமிக்கிறாய்."

மன்னன், ரதத்தை விட்டுச் சட்டென்று கீழே இறங்கிப் பணிவுடன் நின்றார்.

"ஸ்வாமி! தாங்கள் யார்?"

"என்னைத் தெரிந்து கொள்வதால் என்ன லாபம் மன்னா! ஆனாலும் லாபம் இல்லாத காரியத்தில்தான் உங்களுக்கு அதிக விருப்பம் ஆயிற்றே."

"கேலி வேண்டாம் ஸ்வாமி! ஏற்கெனவே நான் குற்ற உணர்ச்சியில் இருக்கிறேன். அறியாமல் செய்த பிழையைப் பொருத்தருள வேண்டும். மன்னியுங்கள்! தாங்கள் யாரென்று அறிய ஆவலாக உள்ளேன்."

நீ இப்போது ஞானம் பெற்றாய். எனது பெயர் அஷ்டாவக்கிரன்.

ஒரு கணம் ஆடிப்போனார் மன்னர். அஷ்டாவக் கிரனைப் பற்றிக் கேள்விப்பட்டிருக்கிறாரே தவிர அவரைப் பார்த்ததில்லை. கல்விக் கடலான உத்தாலகரின் பெண் வயிற்றுப் பேரனும், பரம ஞானியான கஹோளரின் தவப் புதல்வருமான அஷ்டாவக்கிரன் இவரே. நெடுஞ்சாண்கிடையாக விழுந்து வணங்கினார்.

"தங்களது அபார மேதாவிலசத்தைப் பற்றி நிறையக் கேள்விப்பட்டிருக்கிறேன். ஆனால், இதுவரை தங்களை தரிசிக்காததால் தவறு நேர்ந்துவிட்டது மன்னியுங்கள்."

அவரை ஆரத் தழுவிக்கொண்டார் அஷ்டாவக்கிரன்.

"மன்னா! இதற்காகக் கண்களில் ஏன் நீர்? நீங்கள் ஆத்மாவைத் தீவிரமாகத் தேடினீர்கள். உங்கள் கனிந்த இதயத்தை உணர்ந்தே நான் உங்கள் வழியில் குறுக்கிட்டு ஆத்ம அனுபவத்தைக் காட்டினேன். இதுதான் ஆத்ம ஞானம். உங்கள் மனதில் இருந்த குழப்பம் நீங்கி இப்போது தெளிவு ஏற்பட்டுவிட்டதா? ஒவ்வொரு கணமும் ஜீவனுக்குள் ஞானம் ஒளிர்ந்துகொண்டுதான் இருக்கிறது. ஆனால் பலர் கண்களால் காண்பதை ஆத்மாவுடன் தொடர்புபடுத்திப் பார்க்காமல் விட்டுவிடுகிறார்கள். ஆத்மாவை அறிய வேண்டும் என்று ஒரு ஜீவன் துடிதுடிக்கும்போது ஞானிகள் வந்து ஆத்ம அனுபவம் தருகிறார்கள்.

மன்னா! நீங்கள் காண்பதே உங்களுக்கு ஞானம் தருகிறது. அந்த ஞானம் ஆத்மாவை, தன்னுள் இருக்கும் நித்திய தத்துவத்தை நமக்கு உணர்த்துகிறது. ஆகவே, கண்களால் அறிவு பெறுங்கள்: அறிவால் அனுபவத்தை வளர்த்துக் கொள்ளுங்கள்."

இந்த போதனை, மன்னருக்கு குழப்பத்தை நீக்கிற்று. ஞானம் அடைந்த மன்னர் அஷ்டாவக்கிரனை வணங்கி விடைபெற்றார்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# காமதேனுவால் வந்த கோபம்

உலகில் அதர்மம் அதிகரிக்கும்போது அதை அழித்து தர்மத்தை நிலைநாட்ட மகாவிஷ்ணு எடுத்த அவதாரங்கள் பத்து, இதில் ஆறாவது அவதாரம் பரசுராமர்.

ஜமதக்னி முனிவர் - ரேணுகாதேவி தம்பதிக்கு மகனாக அவதரித்தவர் பரசுராமர். முனி குமாரனாக இருந்தாலும் அரசர்களுக்கே உரிய சகல போர்க் கலைகளிலும் தேர்ச்சி பெற்றவராகத் திகழ்ந்தார் பரமேஸ்வரனை தியானித்து தவமிருந்து அவரிடம் இருந்து மழுவாயுதம் (கோடரி) பெற்றார். பரசுராமரது பக்தியாலும் தவத்தாலும் மகிழ்ந்த சிவன், மழு ஒன்றைத் தோற்றுவித்து தந்ததாகவும் அதனால் இவருக்கு மழுவாளன், பரசுராமர் ஆகிய பெயர்கள் ஏற்பட்டதாகவும் கூறுவர்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஒருமுறை க்ருதவீரியன் என்ற மன்னன், தனது சேனையுடன் ஜமதக்னி முனிவருடைய ஆசிரமத்துக்கு வந்தான். ஜமதக்னி முனிவரும் ரேணுகாதேவியும் தங்களிடம் இருந்த தெய்வீக பசுவான காமதேனுவின் உதவியால் அரசனுக்கும் அவனுடைய சேனைக்கும் சிறப்பான விருந்தளித்தனர். விருந்துண்ட க்ருதவீரியனுக்கு, "சாதாரண முனிவர் ஒருவர் இவ்வளவு அருமையான, அறுசுவை விருந்தளிப்பது சாத்தியமா? "என்ற சந்தேகம் எழுந்தது. அதை முனிவரிடமும் கேட்டான். தனது ஆசிரமத்தில் வளரும் காமதேனுவின் கைங்கரியம் இது என்று முனிவர் எதையும் மறைக்காமல் விளக்கினார்.

இதைக் கேட்ட க்ருதவீரியனுக்கு காமதேனுவின் மேல் ஆசை ஏற்பட்டது. தவம் செய்யும் முனிவருக்கு சர்வ வல்லமை கொண்ட காமதேனு எதற்கு? அது தன்னிடம் இருந்தால் எவ்வளவோ நன்மை என்று எண்ணினான். காமதேனுவைத் தனக்குத் தரும்படியும் பதிலுக்கு ஏராளமான பசுக்களைத் தருவதாகவும் முனிவரிடம் கூறினான். ஆனால் முனிவரோ மறுத்துவிட்டார். இதனால் சினம் கொண்ட க்ருதவீரியன், காமதேனுவைக் கவர்ந்து செல்ல முற்பட்டான். ஆனால், காமதேனுவின் உடலில் இருந்து தோன்றிய ஏராளமான வீரர்கள், க்ருதவீரியனையும் அவனுடைய சேனையையும் அழித்தனர்.

க்ருதவீரியன் இறந்த செய்தியைக் கேட்டு கோபமுற்ற அவன் மகன் கார்த்தவீரியார்ஜுனன், ஜமதக்னி முனிவருடைய ஆசிரமத்துக்கு வந்து அங்கு தவத்தில் இருந்த முனிவரின் தலையை வெட்டி வீழ்த்தினான்.

ஆற்றிலிருந்து தண்ணீர் எடுத்துக்கொண்டு திரும்பிய ரேணுகாதேவி, தன் கணவர் இறந்துகிடந்ததைக் ண்டு கதறினாள். தன் மார்பில் இருபத்தோரு முறை அடித்துக்கொண்டு அழுதாள். அப்போது, அங்கு வந்த பரசுராமர் தன் தந்தை இறந்து கிடைப்பதைக் கண்டு அதிர்ந்தார். அருகில், ரத்தக் கறை படிந்தவாளுடன் நின்ற கார்த்தவீரியார்ஜுனனைக் கண்டு சினமுற்று அவனை வெட்டி வீழ்த்தினார். பின்னர் ரேணுகாதேவி தீயில் மூழ்கி தெய்வநிலை எய்தினாள்.

பெற்றோரின் மரணத்துக்குக் காரணமான அரச குலத்தினர் மீது கோபம்கொண்ட பரசுராமர், அவர்களைப் பூண்டோடு அழிப்பதாக் சூளுரைத்தார். இருபத்தோரு தலைமுறைகளாக அரசர்களைக் கொன்று அவர்களின் குருதியை ஓரிடத்தில் சேகரித்து, அதில் பெற்றோருக்கு இறுதிக் கடன் செய்தார். இருந்தும் அவருடைய கோபம் தணியவில்லை. இதனால் பயந்து அரசர்கள் பலரும் இறுதியில் காசிப முனிவரைச் சரணடைந்தனர். அவர்களைக் காப்பாற்றும் பொருட்டு காசிப முனிவர் பரசுராமரிடம் சென்றார்.

"எனக்கு ஓர் உபகாரம் செய்ய வேண்டும்." என்று காசிபர் பரசுராமனிடம் கேட்டார்.

"சொல்லுங்கள் செய்கிறேன்."

"பல்வேறு மன்னர்களை வெற்றி கொண்டு நீ அடைந்த பூமியை எனக்கு தானம் தர வேண்டும்."

மகிழ்ச்சியுடன் ஒப்புக்கொண்ட பரசுராமர் பூமியை காசிபருக்கு தாரைவார்த்துக் கொடுத்தார்.

"பரசுராமா! இனி, இந்த பூமி எனக்குச் சொந்தம். நீ இங்கிருந்து அகன்று, சினம் தணிந்து சிவபூஜை செய்வாயாக!" என்றார் காசிபர்.

அதன்படி அங்கிருந்து கிளம்பிய பரசுராமர் மேற்குக் கடற்கரைக்குச் சென்றார். கரையில் நின்று தனது மழுவாயுதத்தை சமுத்திரத்தை நோக்கி வீசியெறிந்தார். அதன் தாக்குதலால் சமுத்திர நீர் உள்வாங்கியது. சமுத்திர நீர் உள்வாங்கியதால் வெளிப்பட்ட நிலப்பரப்பை தனக்கு சொந்தமாகக்கிக் கொண்டார் (இந்தப் பகுதியே இன்றைய கேரளம்). பரசுராமர் உருவாக்கியதால் இதை பருசுராம ஷேத்திரம் என்பர். இங்கு, பரசுராமர் அமைத்த சிவாலயங்களை பரசுராமப் பிரதிஷ்டைகள் என்பர். பரசுராமர் இந்த இடத்தை விட்டு நீங்காமல் சிவபூஜை செய்வதாக ஐதீகம்.

அரசர்களைக் கொன்ற தனது பாவம் தீர பரசுராமர், மகேந்திர மலையில் தவம் புரிந்து சிவனருள் பெற்றார் என்கிறது சிவமகா புராணம். பரசுராமர் இன்னும் பல இடங்களில் சிவலிங்கம் அமைத்து பூஜித்ததாக புராணங்கள் கூறுகிறது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கிடைக்கும் இடங்கள்:

**கொழும்பு பம்பலப்பிட்டி சம்மாங்கோடு அருள்மிகு ஸ்ரீ மாணிக்க விநாயகர் ஆலயம்.**
359, காலி வீதி, கொழும்பு 04.

**ஸ்ரீ கதிர் வேலாயுத சுவாமி கோவில்**
359, காலி வீதி, கொழும்பு 04.

**ஸ்ரீ மயூராபதி கோவில்**
17A, மயூரா ப்ளேஸ், கொழும்பு 06.

**ஸ்ரீ பத்ரகாளி அம்மன் தேவஸ்தானம்**
30/40-44, காலிங்க மாவத்தை, பொல்லஹேன்கொட

**ஸ்ரீ ஆஞ்சநேயர் ஆலயம்**
3/11, ஸ்ரீ போதிருக்காராம வீதி, தெஹிவளை.

**ஸ்ரீ ஐஸ்வர்யலக்ஸ்மி திருக்கோவில்**
ரொக்ஸி கார்டன், வெள்ளவத்தை

**ஸ்ரீ வெங்கடேஸ்வரர் விஷ்ணு கோவில்**
100, கோவில் வீதி, கொழும்பு 15,

**டொரிங்டன் ஸ்ரீ முருகன் ஆலயம்**
63, டொரிங்டன அவன்யூ, கொழும்பு 07.

**ஸ்ரீ தேவி கருமாரியம்மன் கோவில்**
158, ஸ்ரீ கதிரேசன் வீதி, கொழும்பு 13,

**பூபாலசிங்கம் புத்தகசாலை**
வெள்ளவத்தை

**CD World Music Centre**
.298, காலி வீதி, வெள்ளவத்தை

**Joy Glorious**
298, 298B, காலி வீதி, வெள்ளவத்தை

**Flex Publications**
.4, IBC Road, வெள்ளவத்தை

இவ் இதழினை விற்பதற்கான விற்பனை விநியோகஸ்தர்கள் எம்மோடு தொடர்பு கொள்ளவும்.

**Tel:0777 614 186**

# இதுவரை வந்த இதழ்கள்!




எம்மை தொடர்புகொள்ள:

***Flex Publications***

**04, IBC Road Wellawatte, Colombo 6.**


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Wellawatte
flex Guide

இரு மாதங்களுக்கு
ஒரு முறை
வெளிவருகிறது!

தொடர்புகளுக்கு: 0777555026

# JANUARY 2013

| MON | TUE | WED | THU | FRI | SAT | SUN |
|---|---|---|---|---|---|---|
| | 1 | 2 | 3 | 4 | 5 | 6 |
| 7 | 8 | 9 | 10 | 11 | 12 | 13 |
| 14 | 15 | 16 | 17 | 18 | 19 | 20 |
| 21 | 22 | 23 | 24 | 25 | 26 | 27 |
| 28 | 29 | 30 | 31 | | | |

**December 2012**

| MON | TUE | WED | THU | FRI | SAT | SUN |
|---|---|---|---|---|---|---|
| 31 | | | | | 1 | 2 |
| 3 | 4 | 5 | 6 | 7 | 8 | 9 |
| 10 | 11 | 12 | 13 | 14 | 15 | 16 |
| 17 | 18 | 19 | 20 | 21 | 22 | 23 |
| 24 | 25 | 26 | 27 | 28 | 29 | 30 |

**February 2013**

| MON | TUE | WED | THU | FRI | SAT | SUN |
|---|---|---|---|---|---|---|
| | | | | 1 | 2 | 3 |
| 4 | 5 | 6 | 7 | 8 | 9 | 10 |
| 11 | 12 | 13 | 14 | 15 | 16 | 17 |
| 18 | 19 | 20 | 21 | 22 | 23 | 24 |
| 25 | 26 | 27 | 28 | | | |

விளம்பரங்கள் தந்துதவியவர்களுக்கு

## நன்றிகள் பலகோடி!

உங்கள் விளம்பரங்களே எம்மை மேலும் பலப்படுத்தும்.

நீங்கள் படித்துச் சுவைத்த தரமான இந்து மத சம்பந்தமான தகவல்களையும், இலங்கையில் அமைந்துள்ள கோயில்கள் பற்றிய தகவல்களையும் எமக்கு எழுதியனுப்பினால் சிறந்ததை நாம் பிரசுரிப்போம்.

**Flex Publications**
(A Subsidiary of Flex Graphic)

04, IBC. Road, Wellawatte.
Tel:- 2364157, 2506114 Fax:- 2501766
www.flexguidemag.com

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org







Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



ஹரே கிருஷ்ணா

# சர்வதேச கிருஷ்ணபக்திக்கழகம்

ISKCON

## ஸ்ரீ ஸ்ரீ ராதா கிருஷ்ணா ஆலயம்- இஸ்கோன்
188, புதுச்செட்டித்தெரு, கொழும்பு-13

இஸ்கோன்-ஸ்ரீ ஸ்ரீ ராதா கிருஷ்ணா ஆலயம் 1976ம் ஆண்டு கொழும்பில் ஆரம்பிக்கப்பட்டது. அன்று முதல் இன்று வரை சிறப்பான ஆராதனைகள் இடம்பெற்று வருகின்றன. 2007ம் ஆண்டு நவம்பர் மாதம் ஆலயத்திற்கான நிலம் சொந்தமாக வாங்கப்பட்டது. தற்போது ஆலயம் கட்டும் பணி ஆரம்பிக்கப்படவுள்ளது. ஆகவே பக்தர்களும் இந்நற்பணியில் பங்குகொண்டு பகவான் ஸ்ரீ கிருஷ்ணர் அருள்பெற வேண்டுகின்றோம். பகவான ஸ்ரீ விஷ்ணுவுக்கு ஆலயம் அமைக்கும் ஒருவனுக்கு ராஜாசுய யாகம், மற்றும் அஷ்வமேத யாகம் செய்த பலன் அனைத்தும் கிடைக்கும் (விஷ்ணு தர்மோத்தர).



## பக்திவேதாந்த சிறுவர் இல்லம் - கோகுலம் 607A, நீர்கொழும்பு வீதி, மாபொல, வத்தளை

கோகுலம் சிறுவர் இல்லமானது 115 பிள்ளைகளுடன் ஆதரவற்ற குழந்தைகளை அரவணைக்கும் கருணை இல்லமாக இயங்கி வருகின்றது. இங்கு உணவு, உடை, உறைவிடம், வைத்திய வசதிகள் உட்பட சகல வசதிகளும் செய்து கொடுக்கப்படுகின்றது. அவர்களுக்கு கல்வி பயில அதனுடன் இணைந்த பாடசாலையும் உள்ளது. அவர்களுக்கு தாங்களும் தங்களால் இயன்ற அளவு உதவி செய்து பகவான் அருள் பெற வேண்டுகின்றோம்.



**தற்போதைய சூழ்நிலையில் அவர்களை பராமரிக்க ஒரு நாளைக்கு ரூ.25,000/= செலவாகின்றது**

## இஸ்கோன் கோசலா- பசுக்களை பராமரிக்கும் திட்டம். 44/88, கிருஸ்த்துராஜ மாவத்தை, ஏகித்த, வத்தளை

1999ம் ஆண்டு முதன் முதலாக ஒரு பசு எமது ஆலயத்திற்கு நன்கொடையாக வழங்கப்பட்டது. இன்று 28 பசுக்கள்(கன்றுகளுடன்) கொண்டஒரு பண்ணையாக மாறிவிட்டது. ஸ்ரீல பிரபுபாதா அவர்கள் மக்கள் பசுவதை செய்வதையும் பாலை பசுவிடமிருந்து பெற்ற பின் தாயாக மதிக்கப்பட வேண்டிய பசுவைக் கொன்று உணவாக உண்பதைப் பார்த்து பசுக்களைக் காக்க வேண்டுமென்ற திட்டத்தை அறிமுகப்படுத்தினார். அவரது திட்டத்திற்கு ஏற்ப உருவாக்கப்பட்டதே எமது இஸ்கோன் கோசாலையாகும். நீங்களும் எமது சேவையில் பங்குகொண்டு பசுக்களின் தலைவன் கண்ண கோபாலன் அருளைப் பெற்று உய்ய வேண்டுகின்றோம்..



தங்களின் நன்கொடைகளை பிறந்ததினம், திருமண வருட பூர்த்தி மற்றும் உறவினர்களின் ஞாபகார்த்தமாகவோ வழங்கி உதவலாம்

ஸ்தாபகர் ஆச்சாரியார்
அ.ச.. பக்திவேதாந்த
சுவாமி பிரபுபாதா அவர்கள்



இச்சேவைகளில் பங்குகொள்ள விரும்புகின்றவர்கள் தொடர்புகளுக்கு

## ஸ்ரீ ஸ்ரீ ராதா கிருஷ்ணா ஆலயம்

இல.188,புதுச்செட்டித்தெரு, கொழும்பு-13. தொ.பேசி- 0112433325
Email-iskcon@slt.lk / Web- www.iskcon.lk / www.gokulam.lk

**A/C NAME: ISKCON, A/C NO: 1050669901 BANK: COMMERCIAL BANK, KOTAHENA BRANCH**


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Published by Flex Publications. 4, [illegible] Road, Wellawatte. Tel: 0777 614 186